


# எங்கள் பப்பா

முகத்தார் ஜேசுரட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வையகமதை நாம் பார்க்க வழியாகி நின்றவரே
தாலாட்டிச் சீராட்டி கண்களாய் எமைக் காத்தவரே
அறுசுவை உணவூட்டி பாசத்தைப் பொழிந்தவரே
பிள்ளைகளின் நலமொன்றே உம்மூச்சாய் நினைத்தவரே
நற்பண்புகளை எமக்குரைத்துநாணயமாய் எமை வளர்த்தவரே
எங்கள் சந்தோஷங்களையே உம் சந்தோஷமாய்க் கொண்டவரே
இதயத்தின் துயரையெல்லாம் முகச்சிரிப்பொன்றால் மாற்றுபவரே
எழுத்துக்களையே ஆயுதங்களாக்கி
பல நெஞ்சங்களை வெற்றி கொண்டவரே
பிள்ளைகளுடன் வாழ்ந்தது போதும் என்று நினைத்தீரோ
மம்மியையும் குஞ்சுவையும் பார்க்கும் ஆவலில் சென்றீரோ
உங்கள் பிரிவு எங்களை வாட்டுகிறது
எங்கள் கண்களோ உங்களைத் தேடுகின்றது
தங்களின் பிரிவால் துயருற்ற இதயங்களின்
குமுறல்களையெல்லாம் ஒருங்கிணைத்து
இம்மலராய் உம் மலர்ப்பாதம்
சமர்ப்பிக்கின்றோம்.





9.1.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கள் பப்பாவை எங்களுக்குத் தந்த
பப்பாவின் பெற்றோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்ந்த இடங்களில் எல்லாம் புகழோடு வாழ்ந்த எங்கள் முகத்தார் யேசுரட்ணம்.

*(சுருக்கமான வாழ்க்கைக் குறிப்பு)*

மானிட சமுத்திரமே நானென்று கூவு என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள். இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு ஆத்மாவையும் தானாகவே பார்க்கின்றவனின் குரல் அது. நான் என்று சொல்வது அகந்தை மட்டுமல்ல, எம்மைக் குறுக்கிக்கொள்வதும் ஆகும். ஆனால் நாம் என்பது நாமல்ல, எமது குடும்பம், சமூகம், நாடு, இப்படியாக விரிந்து கொண்டே செல்லும். இந்த உலகத்திற்கே நாமும் பொறுப்பு என ஒவ்வொருவரையும் தலைவனாக உயர்த்துகின்ற வார்த்தை அவை. அந்த வார்த்தை சந்தியாப்பிள்ளை - ஜேசுரட்ணம் என்னும் உயர்ந்த மனிதனுக்கும் பொருத்தமானதாகும். ஆம் தன்னுடைய எழுத்துக்களாலும், நடிப்புக்களாலும் இந்த சமூகத்தில் ஒரு பல்கலைக்கழகமாக வாழ்ந்த எங்கள் முகத்தார் ஜேசுரட்ணம் அவர்களின் வாழ்க்கை வரலாறு அனைவரும் படிக்கவேண்டிய ஒரு திறந்த புத்தகம். அந்த வரலாற்றை இங்கு சுருக்கமாகத் தருகின்றோம். வரும் காலத்தில் முழுமையாகத் தருவதற்கு முயற்சிக்கின்றோம்.

பிறந்த மண் இளவாலை. தவழ்ந்தது, நடை பழகியது, ஓடி விளையாடியது, பள்ளிக்கூடம், பாடசாலை வாசம், சகலதும் இளவாலை மண்தான். கல்லாலூரிக் காலம்தான் ஜேசுரட்ணம் என்னும் கலைப்பயிருக்கு விளைநிலமாகவும் இருந்தது.

ஆம் இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரியின் அன்றைய அதிபராக இருந்த அமரர் வணபிதா. து. ஜீவரட்ணம் அவர்கள்தான் படிப்பில் திறமைசாலியாக இருந்த ஜேசுரட்ணம் என்ற இளைஞனின் கலைத்திறனையும் வெளிக்கொண்டு வருவதற்கு வித்திட்டவர் ஆவார். 1946 முதல் 1950 வரை ஜேசுரட்ணம் இல்லாமல் கல்லூரியில் எந்த நாடகமும் நடைபெற்றதில்லை என்றே சொல்லாம். அனேகமான நாடகங்கள் ஆங்கில நாடகங்கள்தான். ஆங்கிலம் இவருடைய நாக்கில் துள்ளி விளையாடும். படிப்பிலும், நடிப்பிலும் திறமைசாலியாக இருந்ததனால் புகழ் தானாகவே இவருடன் இணைந்துகொண்டது.

உழைப்பு இது மட்டுமே. உழைப்பு இதுதான் வாழ்வின் மூலாதாரமே. இரவில் பசியின்றி உறங்குவதற்குத் பகலில் சம்பாதிக்கவேண்டும். மழைக்காலத்திற்கு தேவையானதை மற்றைய மாதங்களில் சேமிக்க வேண்டும். முதுமையில் நிம்மதியாக வாழ்வதற்கு இளமையில் சொத்து சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். இந்த உண்மைகளையெல்லாம் தனது வாலிப வயதை தொடுகின்ற பருவத்திலேயே புரிந்துகொண்டவர் முகத்தார் ஐயா அவர்கள்.

கல்லூரிக் காலம் முடிந்ததும் தொழில் தேடுவதற்கு இவர் அதிக சிரமம் அடையவில்லை. ஆங்கிலத்தில் திறமைசாலியாக இருந்ததனால் தனது பதினாறு வயதினிலேயே தான் கல்விகற்ற கென்றியரசர் கல்லூரியிலேயே ஆங்கில ஆசிரியராக வேலை கிடைத்தது. இரண்டு வருட காலம் அங்கு ஆசிரியராக கடமையாற்றிக்கொண்டிருக்கும் போதே கொழும்பில் அரசாங்க வேலை கிடைக்கின்றது. வேலை நிமிர்த்தமாக தனது வாழ்விடத்தை கொழும்பிற்கு நகர்த்துகின்றார். 33 வருடங்கள் கொழும்பில் வாழ்ந்த காலத்தில் இலங்கை வானொலியிலும், இலங்கை தமிழ் சினிமாவிலும், மற்றும் மேடைகளிலும் நடிகர், எழுத்தாளர், இயக்குனர் என பல அவதாரங்கள் எடுத்து அன்றையகாலத்து முன்னணிக் கலைஞர்களில் ஒருவராகத் திகழ்ந்து பல விருதுகளையும், பரிசுகளையும் தனதாக்கிக் கொண்டு பலரின் பாராட்டுக்களையும் பெற்று அங்கும் புகழோடுதான் விளங்கினார்.

நாட்டில் நடந்த அரசியல் மாற்றங்களால் இலங்கை அரச ஊழியர்கள் அனைவரும் கண்டிப்பாக சிங்களம் படிக்கவேண்டும் என்னும் சட்டம் வருகின்றது. இதற்கு விருப்பப்படாத எங்கள் ஜேசுரட்ணம் அவர்கள் 1984ம் ஆண்டு தாமாகவே விருப்பு ஒய்வு பெறுகின்றார்.

1985 முதல் 93ம் ஆண்டுவரை தமிழ்நாட்டில் சென்னையிலும் திருச்சியிலுமாக வாழ்ந்த எட்டுவருட காலத்திலும் கலைப்பணி, சமுதாயப்பணியென செயற்பட்டு அங்கும் புகழுடனேயே வாழ்ந்திருந்தார்.

1993ம் ஆண்டு பிரான்ஸ் வருகின்றார். இங்கும் வானொலி, தொலைக்காட்சி சின்னத்திரைப்படங்கள், மேடை நாடகங்களென ஐரோப்பா முழுவதும் புகழ் பெற்ற கலைஞராகவே வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக தான் வாழ்ந்த காலங்கள் முழுவதும் பலரும் பாராட்டும் பெரும் கலைஞனாகவும், அனைவரும் மதிக்கும் நல்ல மனிதனாகவுமே வாழ்ந்த சந்தியாம்பிள்ளை - மரியம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வனான திருமிகு "முகத்தார்" ஜேசுரட்ணம் அவர்கள் கடந்த 27-11-2010 சனிக்கிழமை அன்று பிரான்ஸில் காலமானார் என்ற செய்தி அவரின் உறவுகள், மற்றும் கலைத்துறை நண்பர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது.
தான் வாழ்ந்த காலங்களெல்லாம் புகழுடனேயே வாழ்ந்தாலும் இவர் பாரிஸில் வாழ்ந்த பதினேழு ஆண்டு காலத்தை நாம் அருகிருந்து பார்த்திருக்கின்றோம். அரங்கங்களில் இவர் நடிகனாக நிற்பார். அல்லது கௌரவம் பெறும் கலைஞனாக நிற்பார். அதுவும் இல்லாவிட்டால் அந்த அரங்கத்தை நடாத்தும் தலைவனாக நிற்பார். இப்படியாக எங்கள் முகத்தாரைச் சுமந்ததினால் அரங்கங்கள் பல சிறப்புப் பெற்றிருக்கின்றன. பிரான்ஸில் இருந்து ஒலிபரப்பான ரி.ஆர்.ரி. மற்றும் ஏ.பி.சி. தமிழ் வானொலிகளில் வானொலிக் கட்டுப்பாட்டாளராக இருந்து அவைகளின் வேர்களுக்கு நீராக சுரந்திருக்கின்றார். முகத்தார் வீடு, சத்தியகீதை, இன்னுமொரு பெண், புயல், முகம், ராஜாவின் ராகங்கள், தாகம் ஆகிய ஏழு சின்னத்திரைப்படங்களிலும், ஐம்பதிற்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களிலும், ஐம்பதிற்கும் மேற்பட்ட மேடை நாடகங்களில் எல்லாம் நடித்து எமது கண் முன்னாலேயே தமது சாதனைகளை நிலைநாட்டியிருக்கின்றார்.


இந்த சாதனைகளுக்கு மத்தியில் முகத்தார் அவர்களின் மற்றொரு சாதனையும் இருக்கின்றது. அது இந்த பதினேழு ஆண்டுகளில் முப்பது தடவைகள் பிரான்ஸில் பிரபலமான வைத்தியசாலைகளில் எல்லாம் தங்கியிருந்து சிகிச்சை பெற்றிருக்கின்றார் என்பது, இதில் மூன்று தடவைகள் வயிற்றில் மிகப்பெரிய சத்திர சிகிச்சை நடந்திருக்கின்றது. கடைசியாக நடைபெற்ற அந்த மிகப்பெரிய சத்திர சிகைச்சைக்குப்பின் இருபத்திநான்கு மணிநேரம் நினைவு திரும்பாது கோமாநிலையில் இருந்து வைத்தியர்களே நம்பிக்கை இழந்து நின்றபோது மறுநாள் கண் விழித்து வைத்தியர்களுக்கே பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருந்தார்.

இப்படியாக பல தடவைகள் காலனின் கோட்டைவரை சென்று இயமனுக்கே கைகாட்டிவிட்டு வந்த முகத்தார் ஐயா அவர்களின் முப்பதாவது வைத்தியசாலைப் பயணம்தான் அவரின் வாழ்க்கையின் முடிவுநாளாக அமைந்துவிட்டது.

மண்ணில் உயிர்த்த மனிதர்களுக்கெல்லாம் காலம் அதன் போக்கில் கற்றுத்தரும் பாடங்கள் கணக்கற்றவை. கடந்து செல்லும் ஒவ்வொரு கணத்திலும் ஒவ்வொரு பாடம். ஒவ்வொரு பாடத்திலும் வெவ்வேறு ஞானம்.

ஒவ்வொரு மனிதரின் ஆசையும் தமக்கு மரணமல்லாப் பெரு வாழ்வு வேண்டும். நோயின் நிழல் தீண்டாத தேக நலம் வேண்டும். துன்பம் துணையில்லாத இன்பம் வேண்டும் என்பதாகத்தான் இருக்கும். ஆனால் நினைத்தது எல்லாம் நடந்துவிட்டால் அதற்குப் பெயர் வாழ்க்கை இல்லை.

எங்கள் முகத்தாரின் வாழ்க்கையும் அப்படித்தான். வாழ்க்கையின் கடைசி மூன்றுமாத காலமும் மனதிற்கு நிறைவான வாழ்வாக இருந்திருக்கவில்லை. தனது ஒவ்வொரு தேவைக்கும் மகள் ஜீவாவின் துணையே தேவைப்பட்டது. அனேகமான நேரங்கள் தனிமைதான். இவையாவும் அவரது மனதை மிகவும் வேதனைப்படுத்தியிருக்கின்றது் அப்படியிருந்தநாட்களில் ஒருநாள் தனது நாட்குறிப்பில் தானே கைப்பட எழுதிய வரிகள் இது.



வீட்டில் இருந்தாலும் சரி, வெளியிடங்களில் இருந்தாலும் சரி இவருடன் ஒரு கூட்டமே சுற்றியிலுக்கும். அதுமாத்திரமல்ல. பத்துப்பேர் கதைப்பதை இவர் ஒருவரே கதைத்து அனைவரையும் கலகலப்பாக வைத்திருப்பார். அப்படிப்பட்ட ஒருவர் தனிமையில் இருப்பதென்றால் அது ஒரு சிறையைப்போலவே இருந்திருக்கும்.

ஆனாலும் கட்டிலில் வாழ்ந்த அந்த கடைசி மூன்றுமாத காலத்தைத்தவிர இவர் வாழ்ந்த ஏனைய காலங்கள் எல்லாம் சிறப்புடனும், புகழுடனுமே வாழ்ந்து மறைந்த இந்த மாபெரும் கலைஞனுக்கு மரியாதை மிகுந்த இறுதி அஞ்சலியைச் செலுத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகத்தார் ஜேசுரட்ணம் அவர்களின் கலைச் சுவடுகள்



| | |
|---|---|
| பெயர்:. | ச. ஜேசுரட்ணம் |
| புனை பெயர்:- | முகத்தார் யேசுரட்ணம் |
| பிறப்பு:- | இளவாலை |
| பிறந்த திகதி:- | 26-12-1931 |
| பாரிஸ் முகவரி:- | Mukathar S.Jesuratnam<br>2-Rue de L Egalite<br>95500Gonesse<br>France |
| தொலைபேசி:- | 01 39 87 08 38 |
| இல்லம்:- | யேசுமனை - இளவாலை |
| பெற்றோர்:- | சந்தியாப்பிள்ளை<br>(காவத்தை என்னும் சிங்களப் பிரதேசத்தில் முதல் முதலில்காலூான்றிய மிகப் பெரிய சுருட்டு வியாபாரி)<br>மரியம்மா (ஆசிரியர்) |
| மனைவி:- | அயறீன் |
| பிள்ளைகள்:- | கலாராணி, பிரேம்ராஜ், மகாராஜ், ஜீவராணி, செல்வராஜ் |
| கல்வி:- | சென் கென்றிஸ் கொலிஜ் - இளவாலை<br>பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த தனது 14 வயதினிலேயே (1945) கலைப்பணி ஆரம்பமாகியது |
| தொழில்- | அரச லிகிதர். பின்னர் அரச நிர்வாக சேவை அதிகாரி<br>(33 வருடங்கள் அரச ஊழியராகப் பணியாற்றி பின்னர் கட்டாயமாக அரச ஊழியர்கள் சிங்களம் படிக்கவேண்டும் என்ற சட்டம் வந்ததனால் 1984ம் ஆண்டு தாமாகவே விருப்பு ஓய்வு பெற்றவர்) |
| அனுபவம்:- | தான் கல்வி கற்ற சென் கென்றீஸ் கல்லூரியில் இரண்டு வருடங்கள் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றி, பின்னர் கொழும்பில் பணியாற்றிய முப்பத்தி மூன்று வருடகாலத்தில் நாட்டில் நடைபெற்ற இனக் கலவரங்களால் ஐந்து தடவைகள் அகதியாக ஆக்கப்பட்டிருக்கின்றார். கடைசியாக 1983ம் ஆண்டு இவர் ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிம் ஆலயத்தில் அகதியாக இருந்தபோது இவரது அகதி இலக்கம் 267 ஆகும்.<br>இந்தியாவில் 1985 - 1993 வரை இலங்கை அகதிகளுக்காக ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தில் பணியாற்றினார்.<br>இதேபோன்று தமிழ்நாட்டில் 1985ம் ஆண்டு முதல் எட்டு வருடங்கள் திருச்சியிலும் சென்னையிலுமாக அகதி வாழ்க்கை வாழ்ந்திருக்கின்றார் |
| புலம் பெயர் வாழ்வு:- | 1993ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் பிரான்ஸ் வந்தார் (இவருக்கு முன்பாக இவரின் மனைவியும் ஐந்து பிள்ளைகளும் பிரான்ஸ் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது)<br>1993 - 2001 வரை St Henrigs Old Boys , President ஆகவும் பின்பு 2001 ம் ஆண்டிலிருந்து இறக்கும் வரை போஷகராகவும் இருந்தார். |
| கலை வாழ்வுக் குறிப்பு:- | முகத்தாரின் நாடக அனுபவமும் ஈடுபாடும் பாடசாலைக் கு காலத்தில் இருந்து ஆரம்பமானது. |
| முகத்தாரின் வானொலி அனுபவமும் ஈடுபாடும்:- | இலங்கை வானொலியில் 1966 முதல் 1988 வரை.<br>முகத்தார் எழுதிக்கொடுத்த வானொலி மேடை நாடகங்கள் ஏராளம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை வாழ்வு

| | |
|---|---|
| இலங்கை:- | முகத்தார் நடித்த திரைப்படங்கள்<br>வாடைக்காற்று, கோமாளிகள்,ஏமாளிகள்<br>(பொன்மணி பின்னணிக் குரல்) |
| பிரான்ஸ்:- | முகத்தார் நடித்த சின்னத் திரைப்படங்கள்<br>சத்தியகீதை, முகத்தார் வீடு, இன்னுமொரு பெண், புயல், முகம்,<br>ராஜாவின் ராகங்கள், தாகம். |

முகத்தார் எழுதி நடித்து நெறியாள்கை செய்த பிரபல்யமான நாடகங்கள்:-
மாடிவீட்டு மரிக்கொழுந்து, கோப்பாய் ரூ டுபாய், கோப்பாய் ரூ கராச்சி, மண்ணோடு விளையாடும் விண்ணுலகம், சத்தியமே ஜெயம், பண்டாரவன்னியன், புறோக்கர் பொன்னம்பலம், அரோகரா, உயிரோடு காடாத்து, போச்சடி பத்தாயிரம், ஆகியன.

முகத்தார் நடித்த பிரபல்யமான நாடகங்கள்:-
சண்டியன் சின்னத்தம்பி,லண்டன் மாப்பிள்ளை, மாடிவீட்டு மரிக்கொழுந்து, அசட்டு மாப்பிள்ளை, ஆசைமச்சான, கறுப்பும் சிவப்பும், பாசச்சுமை, நம்பிக்கை, தணியாத தாகம் நாளைய அறுவடைகள்

முகத்தார் எழுதி நடித்து நெறியாள்கை செய்த பிரபல்யமான வானொலி நாடகங்கள்:-
முகத்தர் வீடு (இலங்கை வானொலியில் 268 வாரங்கள்), பருவக்காற்று (இலங்கை வனொலியில் 52 வாரங்கள், கதம்பம் (123 தனி நாடகங்கள் இலங்கை வானொலியில்)

அமரர் அகஸ்த்தியர் எழுதி பிறரின் இயக்கத்தில் முகத்தார் நடித்த நாடகங்கள்:-
அலைகளின் குமுறல், எரிமலை வெடித்தபோது, கோபுரங்கள் சரிகின்றன
கே.எம். வாசகரின் நாடகங்கள்
மனித வலை, தணியாத தாகம் (மூலம் சில்லையூர் செல்வராசன்), சுமதி (தொலைக்காட்சி)
ஒரு மணித்தியால நாடகங்கள்
அகதி ஒருவன் ஊர்வலம் போகின்றான், Julius Ceasar, Merchant 0f Venice.

முகத்தார் எழுதிய நூல்கள்:-
முகத்தார் எழுதிய ஏராளமான நாடகங்களில் பன்னிரண்டு நாடகங்களைத் தொகுத்து "முகத்தார் வீட்டுப் பொங்கல்" என்னும் பெயரில் வெளியிடப்பட்டுள்ளது.
(தனது கடைசி காலத்தில் தனது வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கின்றார். அது முற்றுப்பெறவில்லை. எண்பது வீதம்தான் நிறைவு பெற்றிருக்கின்றது. ஆனாலும் அதை விரைவில் நூலாக்கி வெளியிட முயற்சிக்கின்றோம்)

முகத்தார் அவர்களுக்கு கிடைத்த விருதுகள்:- (இதுவரை மொத்தம் 101)

| | | |
|---|---|---|
| இலங்கை | 1979 | ஜனாதிபதி விருது (வாடைக்காற்று திரைப்படத்திற்காக) |
| | 1980 | கலைமுரசு விருது |
| | 1981 | முகத்தார் (கௌரவ விருது) |
| | 1982 | விவசாய மன்னன் (கௌரவ விருது) |
| இந்தியா | | |
| | 1993 | கலைப் பணிச் செல்வர் (தமிழ்நாட்டில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ விஸ்வநாதம் அவர்களால் வழங்கப்பட்டது) |
| பிரான்ஸ் | 1994 | கலைவேள் (கௌரவ விருது) |
| | 1995 | கலைப்பூபதி |
| | 2007 | ஈழத் தமிழ் விழி (தமிழ் தேசியத்தால் அங்கீகரிக்கப்பட்டு தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பட்டது. |
| ஜேர்மனி | 1997 | கலைமாமணி |
| | 2001 | நகைரசவாரி |
| லண்டன் | 2005 | கலைஞானி |

தகவல்:- வண்ணை தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகத்தார் பற்றி..

எழுபத்தைத் தாண்டி நிற்கும் வயதினிலும் எழுற்சியுடன் உள்ளத்தால் இளைஞராக திகழ்பவர்

இவர் யாழ் குடாநாடடில் உள்ள இளவாலை கென்ரிஸ் கல்லூரியில் கல்வி கற்றவர். பள்ளிக் காலத்திலேயே நாடகங்களில் நடித்து தன்னை அடையாளம் காட்டிக்கொண்டவர்.

ஆரம்ப நாடகங்கள் பெரும்பாலும் ஆங்கில நாடகங்களாக இருந்தபோதிலும் பின்னர் தமிழில் தனது கலைப் படைப்புக்களைத் தொடர்ந்து தயாரித்தவர்.

இலங்கை வானொலியில் பத்தொன்பது வருடங்களாக பகுதி நேரமாகக் கடமையாற்றினாலும் "முகத்தார் வீடு" நாடகத்தின் மூலமாகவே மக்கள் மனதை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டவர்.

1979ல் வாடைக்காற்று திரைப்படத்தில் திறம்பட நடித்தமைக்காக ஜனாதிபதி விருது பெற்றார்.

இலங்கை வானொலியில் இவரது முகத்தார் வீடு நாடகம் ஐந்து வருடங்களாக ஒலிபரப்பாகி ஒரு உலக சாதனை படைத்தது. அதன் நிமித்தம் இவரது பெயருக்கு முன்னால் "முகத்தார்" என்னும் அடைமொழி இணைந்துகொண்டது. அதை கௌரவ விருதாகவும் வழங்கியிருந்தார்கள்.

தமிழ் நாட்டில் தற்காலிகமாக வாழ்ந்த காலத்தில் அங்கும் கலைப் பணியை மேற்கொண்டார்.

புலத்தில் பாரிஸில் 1993ல் குடியேற்றம் தொடர்ந்தும் இவரது கலைச்சேவை தொடர்ந்தது.

பாரிசில் உருவான பெரும்பாலான சின்னத்திரைப்படங்களில் நடித்து முத்திரை பதித்தவர்.

இவரின் புகழ்பெற்ற நாடகமான "முகத்தார் வீடு" ஆர்.ரீ.எம். பிரதேஸ் இன் தயாரிப்பில் நிர்மலா ரகுநாதன் அவர்களின் இயக்கத்தில் சின்னத் திரைப்படமாகியது.

ஐரோப்பிய வானொலிகளிலும் தொலைக்காட்சிகளிலும் இவரது கலைப் பணி தொடர்ந்தது. T.R.T (தமிழ் றேடியோ தொலைக்காட்சி) நிறுவனத்திலும் A.B.C (ஏசியன் புறோட்காஸ்ற் கோப்பிரேசன்) ஆகிய இரண்டு வானொலிகளிலும் நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளராக பணியாற்றியிருக்கின்றார்.

2003ல் லண்டன் ஈழவர் திரைக்கலை மன்றமும் 2007ல் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்திய "இராகமாலிகா" நிகழ்ச்சியில்"ஈழத் தமிழ் விழி" எனும் பட்டமும் வழங்கி இவரது கலைச்சேவையைப் பாராட்டி கௌரவித்திருக்கின்றார்கள்.

தொடர்ந்தும் இவரது கலைச்சேவை தொடர்ந்து கொண்டே இருந்திருக்கின்றது

இலங்கை வானொலியில் இவரது ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடகங்கள் இன்றும் இடை இடையே ஒலித்துக்கொண்டே இருக்கின்றது

கலைத்துறையில் பல சாதனைகள் புரிந்து சிகரத்தைத் தொட்ட இந்த கலைமேதையின் கலைப் பயணத்தை சுருக்கமாகத் தந்துள்ளோம்.



தகவல்:- வண்ணை தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது ஒன்றே போதும் எனக்கு



இளமைக் காலங்கள் என்றுமே அழியாத கோலங்கள். இளவயதில், இளவாலை வீட்டில், வெறும் மேனியுடன் கழுத்திலுள்ள தங்கச் சங்கிலி கதிரவனின் கதிர்வீச்சினால் பளபளத்தபடி பொக்கிள் வரை நீண்டிருக்க, சிரித்த முகத்துடன், முறுக்கிய மீசையை வருடிய வண்ணம், பப்பா முற்றத்தில் நடந்துவரும் அழகு இன்னும் என் கண்களை விட்டு மறையவில்லை.
"யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே" இதே போலத்தான பப்பா கொழும்பிலிருந்து வார விடுமுறைக்காக இளவாலைக்கு வரும்போதும். அவர் வருமுன்பாகவே அவர் வரும் நாள், நேரம் குறித்த தபால் அட்டைகள், ஊரில் ஆங்காங்கே அவர் நண்பர்களிற்கு வந்து சேர்ந்துவிடும். கொழும்பில் வேலை பார்க்கும் குடும்பஸ்தர்களில் அநேகமானோர் விசேட பண்டிகைகளை முன்னிட்டு தான் ஊரிற்கு வருவார்கள். ஆனால் என் பப்பா ஒருவர் தான் வாரமொருமுறை தவறாமல் வந்து போகின்றவர். அநேகமாக சனி காலையில் வந்து ஞாயிறு மாலையில் மீண்டும் போய்விடுவார். ஒரு சில சமயங்களில் ஞாயிறு காலையில் வந்து அன்று மாலையே திரும்பிச் சென்றதும் உண்டு. அவரின் வருகைக்காக எங்களைத் தவிர ஊரில் பலபேர் காத்திருப்பார்கள். எந்நேரமும் நண்பர்கள், உறவினர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என ஒரு கூட்டமே இவரைச் சூழ்ந்திருக்கும்.

பப்பா வரப்போகிறார் என்றவுடன் காலையில் நேரத்தோடு எழுந்து கூட்டல், அடுக்கல், ஒதுக்கல் என்று சுறுசுறுப்பாகிவிடுவோம். வந்தவுடன் மேலோட்டமான ஒரு பார்வை. பிடிக்கவில்லையென்றால் எதுவுமே பேசாமல் தானே களத்தில் தும்புத்தடி சகிதம் இறங்கிவிடுவார். அதன் பின்பு தான் கோப்பியும் குளிப்பும். காலை ஆகாரத்தை முடித்தவுடன் பரிவாரங்களுடன் சந்தி, சந்தையென்று ஊருக்குள் ஒரு ஊடுருவல். சந்தையில் இருக்கும் வியாபாரிகளோ இவரைக் கண்டவுடன் தம்பி, தம்பியென்று கூவியழைத்து முடிந்தளவு இவருக்கு வியாபாரம் செய்து விடுவார்கள். தம்பியோ நல்லதம்பி. சொன்ன விலைக்கு மறுவிலை பேசாமல், பலரக கடல் உணவுகள், மாமிச வகைகள் என அள்ளிக் கட்டிக்கொண்டு வரும் வழியில் மலரன்ரியையும் உதவிக்கு கூட்டிக் கொண்டு வீடு வந்து சேர்வார். வீட்டிலுள்ளவர்கள் என்ன விலையென்று கேட்டால் அரைவாசி விலையைச் சொல்லி தப்பித்துக் கொள்வார். மீண்டும் ஊர்த் தரிசனத்திற்காக கிளம்பிவிடுவார். தரிசனங்களில் கற்பகத்தருவின் தரிசனமும் இடம்பெறும். பனம் பாலின் சுவை வயிற்றில் பசியைக் கிளப்ப மதிய விருந்திற்கு வந்துவிடுவார்கள். மாமர நிழலில் விருந்துபசாரம் அட்டகாசச் சிரிப்புகளுடன் இனிதே நிறைவேறும். சிலர் வருவார், சிலர் போவார். இப்படி அந்தி சாயும்வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடிக்கும். சில சமயம் இரவு விருந்தோடு பாட்டுக் கச்சேரிகளும் இடம்பெறும். எங்களுக்கு குஷி. மம்மிக்கோ குசினியே கதி. ஆனாலும் சந்தோசம் நிறைந்த நாட்கள்.
பப்பாவின் தாயாரும், தாயாரின் சகோதரியும் தலைமையாசிரியைகள். இவர்களினால் உருவாக்கப்பட்டு பதினாறு வயதினிலேயே தானும் ஆசிரியராகப் பதவியேற்றவர். இவர்களின் ஒரே பிள்ளைச் செல்வம் பப்பாதான். இவரிற்கு பிறகு அந்த அன்புத் தெய்வங்களின் பாசத்தைப் பெற்ற பாக்கிய சாலி நான்தான். என் ஆறாவது வயதிலேயே எந்தப் பெரிய தமிழ்ப் புத்தகத்தையும் தடங்கலின்றி சரளமாக வாசிக்கக் கூடிய பயிற்சியைக் கொடுத்தவர் ஆச்சியின் சகோதரி ஆச்சியம்மாதான்.

நான் சிறுமியாக இருந்த போது பப்பாவிற்கு என்னில் ஒரு தனிப்பட்ட பாசம். இது நான் மூத்தமகள். அதுவும் திருமணமாகி ஆறுவருடங்களின் பிற்பாடு பிறந்தவள் என்பதாலேயோ என்னவோ தெரியவில்லை. என் ஒவ்வொரு அசைவிலும் அவர் கவனம் இருக்கும். என் கல்வியிலும், பேச்சுப்போட்டிகள், நாடகங்கள் என்று நான் பங்கேற்கும் போதும், பரிசுகள் வாங்கும் போதும் கூடவேயிருந்து தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்திக்கொண்டேயிருப்பார். எனது சிறு வெற்றிகளைக் கூட பெருமையாகப் பேசுவார். ஆனால் தையல் வகுப்பில் ஊசி கையில் தொடக் கூடாது என்ற நிபந்தனையால், சக மாணவிகள் தைக்கும் போது, என் தையலை தையல் ஆசிரியை தைக்க நான் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டிய நிர்ப்பந்தம்.
நம்நாட்டில் வருடத்தில் மூன்று முறைகள் பாடசாலை விடுமுறை வருவது யாவரும் அறிந்ததே. ஆனால் ஒரு விடுமுறைக்காவது வெளியிடங்களிற்கு செல்லும் சகமாணவர்கள் அரிது. நாங்கள் மட்டும் ஒவ்வொரு விடுமுறையும் விட்ட அடுத்தநாளே கொழும்பு, கண்டி, அவிசாவளை என்று பல இடங்களிற்கும் சென்று வருவோம். இரண்டு தடவைகள் இந்தியாவிற்கும் கூட்டிப் போயிருக்கிறார். ஆரம்ப காலங்களில் புகையிரதத்திலும் பின்பு குடும்பம் பெருத்து நாங்கள் ஐவராக விமானம் பயணத்தை இலகுவாக்கியது. நான்கைந்து நாட்கள் கொழும்பில் தங்கி உறவினர்கள் வீடுகளிற்கு முகதரிசனம் கொடுத்துவிட்டு அவிசாவளை சென்றுவிடுவோம். அங்கு மம்மியின் தந்தைக்கு ஒரு பெரிய இறப்பர் தோட்டம் இருந்தது. நாங்கள் தான் ஏக வாரிசுகள். எங்களைப் பார்த்துக்கொள்ளவும், வீட்டு வேலை, சமையல் வேலைக்கு என்று உதவியாட்கள் பெருமளவு. மம்மிக்கும் ஓய்வு. எங்களுக்கும் உல்லாசம்.
விடுமுறை முடிந்து மீண்டும் பாடசாலைக்கு செல்லும் முதல் நாள் தமிழ்ப் பாடத்தில் விடுமுறை அனுபவங்களை கட்டுரையாக வரையும் படி கூறுவார்கள். கட்டுரையும் அழகாக அமையும்.
நான் இருவருடங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கிப் படித்த வேளையில், தானே முத்திரையும் ஒட்டி, தன் முகவரியும் எழுதி, தபால் அட்டைகளை என்னிடம் கொடுப்பர். இரண்டு நாட்களிற்கு ஒருமுறை நான் நலமாக உள்ளேன் என்று ஒரு வசனம் என் கைப்பட எழுதி அனுப்ப வேண்டும். அவரின் நலமும் தபால் அட்டை மூலம் தவறாமல் வரும். ஒரு நாள் என்னிடமிருந்து வரவில்லையென்றால் உடனேயே ஏன் கடிதமில்லையென்று அடுத்த தபால் அட்டை வரும். தான் வருமுன்பு தான் வரும் நாள் நேரம் குறித்து எனக்கும் அறிவித்தல் வரும். ஏனெனில் அவர் வரும் வேளையில் நான் வீட்டில் பிரசன்னமாய் இருக்கவேண்டும். இது அவரது எதிர்பார்ப்பு. ஒருமுறை காலையில் முக்கிய வகுப்பு இருந்ததினால் காலையில் வகுப்பை முடித்துக்கொண்டு போகலாம் என்று இருந்துவிட்டேன். அன்று காலை வகுப்பு முடிந்து விடுதிக்குள் நுழைகின்றேன் பப்பா அங்கே விடுதியில் விடுதிப் பொறுப்பாளருடன் உரையாடிக்கொண்டிருக்கிறார். வீட்டிற்கு வந்தவர், என்னைக் காணவில்லை என்றதும், வீட்டில் ஒரு கோப்பி கூடக் குடிக்காமல் அப்படியே புறப்பட்டு என்னைக் கூட்டிச் செல்வதற்காக வந்துவிட்டார். தான் வரும்போது தன் பிள்ளைகள் அனைவரும் தன்முன்னால் நிற்க வேண்டும். இல்லாவிடில் வீடே இருண்ட மாதிரி என்பது பப்பாவின் வாதம். எப்படியென்றாலும் ஒரு பெண்பிள்ளை மீது இவ்வளவு பாசம் வைக்கக் கூடாது. என்றோ ஒருநாள் திருமணமாகி வேறு வீட்டிற்கு போகவேண்டியவள் என்பது விடுதிப் பொறுப்பாளரின் வாதம். நான் வளர்ந்து பெரியவளாகிய பிற்பாடும் கூட ஒரு சிறுபிள்ளையை தூக்குவது போல என்னைத் தூக்குவார். சுற்றியிருப்பவர்கள் இவ்வளவு வளர்ந்தவளைத் தூக்கி நெஞ்சு நோகப் போகிறது என்று கண்டிப்பார்கள். ஆனால் அவரோ அதைக் காதில் போட்டுக் கொள்ளமாட்டார்.

நான் எங்கு சென்றாலும் என்ன செய்தாலும் பப்பாவிற்கு எப்படியோ தகவல் தெரிந்துவிடும். நான் யாழ்ப்பாணத்தில் தங்கிப் படித்த காலத்தில் வகுப்புகளிற்கு செல்வதற்கு வசதியாக சைக்கிள் வைத்திருந்தேன். ஒரு நாள் வகுப்பு முடிந்து அன்றி வீட்டிற்குப் போகும் வழியில் கச்சேரிக்கு செல்லும் பஸ் ஒன்றுடன் போட்டி போட்டு ஓடியதை யாரோ பார்த்தவர்கள் பப்பாவிற்கு உடனடியாகக் கொழும்பிற்கு தகவல் கொடுத்துவிட்டார்கள். அடுத்தநாள் பப்பாவின் விசுவாசி ஒருவர் வந்து சைக்கிளை பறிமுதல் செய்துகொண்டு போய்விட்டார். பின்பு எவ்வளவோ மன்றாட்டங்கள், பலரின் சிபாரிசுகளின் உதவியினால் மீண்டும் சைக்கிள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

பிள்ளைகளின் மேல் காட்டும் அன்பு, அக்கறை போன்றே கொடுக்கும் தண்டனையும் வித்தியாசமாகத்தானிருக்கும். என் சகோதரர்களின் இம்சை, தாங்கமுடியவில்லையென்றால் அவர்களிருவரையும் கூப்பிட்டு முழங்காலில் இருத்துவார். இதைப் பொறுக்காத தந்தையார் தானும் வந்து இவர்களுடன் முழங்காலில் இருப்பார். இதைப் பார்த்தவுடன் பப்பா எல்லாரையும் எழுப்ப அப்புவும் வாய்பேசாமலே நினைத்ததைச் சாதித்துவிடுவார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் குழந்தைகள் மட்டுமல்லாமல் எல்லாப் பிள்ளைகளும் முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர். படித்துவிட்டு வேலையும் கிடைக்காமல், உயர்படிப்பைத் தொடரவும் முடியாமல், குடும்பப் பொறுப்புக்களை எண்ணி மனம் புளுங்கும் இளைஞர்கள். இவர்களின் மனநிலையை சற்றும் புரிந்துகொள்ளாமல் தங்கள் பல்லுக்கு பதமாக்கி கொண்டிருப்பார்கள். வெறுவாயைப் போட்டு மெல்லும் கூட்டம். இவர்களிற்காக ஊரில் சில பெரியவர்களுடன் சேர்ந்து ஒரு வாசிக சாலையொன்றை ஆரம்பித்து வைத்தார். எங்கள் வீட்டிலிருந்த பல புத்தகங்களும் இடம்மாறின. சில விளையாட்டுப் பொருட்களும் பொதுச் சொத்தாகின. இதன் திறப்பு விழாவிற்கு, அக் காலகட்டத்தில் கொழும்பில் கனடா நாட்டின் வெளிநாட்டுத் தூதுவராக பணிபுரிந்த திரு மக்டோனால் அவர்களையும் அவர் மனைவியையும் அழைத்து வந்தார். அதே நாளில் இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர் மட பெற்றோர் தின விழாவிலும் அவர்களைப் பிரதம விருந்தினர்களாகக் கலந்து சிறப்பிக்கச் செய்தார்.

முகத்தார் அழுது நீங்கள் பார்த்திருக்கவே முடியாது. தன் தாய் தந்தையரை இழந்தபோதும் சரி, தன் அன்பு மகன், ஆசை மனைவி இவர்களைப் பறிகொடுத்து நின்றபோதும் கூட தன்னைக் கல்லாக்கிக் கொண்டு சிலையாக நின்றவர். ஒரே ஒரு முறை மட்டும் அழுதாராம். நான் பிரான்சிற்கு வந்தபோது விமான நிலையத்தில் **என்னைப் பயணம் அனுப்பிவிட்டுத் திரும்பிச் சென்றவர் என்னுடைய உடைகளை எடுத்து அதில் தன்முகத்தைப் புதைத்தவண்ணம் விம்மி விம்மியழுதாராம்.** அவர் தன் வாழ்நாளில் ஒருமுறைதான் அழுதார். ஆனால் இதை நினைக்கும் ஒவ்வொரு முறையும் நான் அழுகின்றேன். இப்படி எங்கள் சிறு வயதின் நினைவுகளை, அனுபவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். ஒரு கலைஞனாக, நண்பனாக, உறவினராகப் பல பரிமாணங்களிலும் அவரை நீங்கள் அறிவீர்கள்.

மம்மியின் பிரிவு இவரின் வாழ்க்கை ஓட்டத்தையே மாற்றிவிட்டது. சிலையாக நின்றவர் சிதைந்துவிட்டார். வாழ்க்கையின் ஓட்டத்தில் மம்மியின் நினைவுகளில் உறவுகளின் பாசத்தில் வாழ்க்கையை நடத்தியவர் தன் கண்பார்வை மங்கியதால் கவலை கொண்டார். கண் பார்வையை மீண்டும் பெறவேண்டும். தன் வாழ்க்கை புத்தகத்தை எழுதி முடிக்க வேண்டும் என்று தீவிரமாக விளைந்தார். இதற்காக சத்திர சிகிச்சை வரை சென்றும் பயனளிக்காமல் போகவே மனம் உடைந்து போனார். எமனுடன் பலமுறை போராடி வென்று வந்தவர், எமனை வேண்டி நின்றார். தன் மனவேதனைகளை என்னுடன் பகிர்ந்து கொள்வார். கடைசி நாட்களில் என்னுடன் வந்திருங்கள் என்று கேட்டும் மறுத்துவிட்டார். ஆனால் தன் இறுதிப் பயணத்தின் போது மட்டும் என்னைத் தன் கூடவே வைத்துக் கொண்டார்.




மம்மியின் உயிர்பிரியும் போது நாங்கள் ஒருவரும் அவர் அருகில் இருக்கவில்லை. என்ன நினைத்தாவோ? யாரைக் கூப்பிட்டாவோ? கஷ்டப்பட்டாவோ? இப்படிப் பல கேள்விகள் தினமும் எங்களைக் கொல்லுகின்றன. ஐந்து பிள்ளைகளைப் பெற்றும் கடைசி நேரத்தில் ஒரு பிள்ளை கூடப் பக்கத்தில் இருக்கவில்லையே என்ற குற்றவுணர்ச்சி எங்கள் மனதை வாட்டிக் கொண்டேயிருக்கின்றது. இதனால் பப்பாவைத் தனியே போகவிடக் கூடாது என்ற ஒரு வைராக்கியம் என்னுள் குடிகொண்டிருந்தது. இறைவனும் எனக்கு அனுக்கிரகம் வழங்கிவிட்டான். பப்பா என்மேல் வைத்திருந்த அந்தப் பாசத்திற்கும் நான் அருகதையுள்ளவளாகிவிட்டேன். நான் பாக்கியசாலி. அவர் உயிர்பிரிவதைக் கண்ணால் பார்த்து, பயனளிக்காது என்று தெரிந்தும் அவரிற்கு முதலுதவி செய்து, என் கைகளால் அவரைக் கட்டியணைத்தபடியே, அமைதியாக வழியனுப்பி வைத்தேன். உயிர்பிரிந்த வேளையிலும் கூட எனக்கு ஒரு பெரிய மனநிறைவைத் தந்தே சென்றிருக்கிறார் என் அருமை பப்பா.


இது ஒன்றே போதும் எனக்கு.
அன்பு மகள்

— ***கலா***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பாசமுள்ள பப்பா

எனது பப்பாவைப் பற்றி எழுதுவதென்றால் நிறைய எழுதலாம். இமயப் புகழ் பெற்ற முத்தான மனிதருக்கு நான் நான்காவது மகளாகப் பிறந்திருப்பது என் பூர்வஜென்ம புண்ணியமே. எவருக்கும் இத்தகையதொரு தந்தை அமைந்துவிட்டால் இறுமாப்புடன் தலைநிமிர்ந்து நடைபோடலாம் என்பது எனது தாழ்மையான கருத்து. வாழ்க்கையில் கிடைத்த பெரிய award என் பப்பா.

சிறுவயதில் இருந்து St Henrys College இல் கல்வி பயின்று அதே பாடசாலையில் பதினாறு வயதிலேயே ஆசிரியராகப் பணியாற்றிய திறமைசாலி. அந்தக் காலத்தில் இளம்வயதிலே கலைத்துறையில் அதிக ஈடுபாடுள்ளவர். M.R ராதாவின் இரத்தக் கண்ணீர் நாடகம் பார்ப்பதற்காக இலங்கையில் இருந்து இந்தியா சென்று பார்த்துவந்த கலைப்பிரியன்.

மேற்படிப்பின் பின் அரசாங்க பல நிர்வாகத்துறையில் வேலை செய்தவர். தன் கடமையில் நின்று அணுவும் பிசகாதவர்.

வாழ்நாளில் எதனையும் திட்டமிட்டு செயற்படும் செயல்வீரர்.

காலம் காலமாக அவர் சேமித்த பதிவுகள், நாடகப்பிரதிகள், கல்வி சான்றிதழ்கள், குழந்தைகளின் குறிப்பேடுகள் இவை அனைத்தும் ஒரு சின்னக் குழந்தை கூட இலகுவாக எடுக்குமளவிற்கு மிக நேர்த்தியாக வைத்திருக்கும் கடமைவீரன்.

தன் வாழ்நாளையே மூன்று குடும்பத்திற்காக அர்ப்பணித்தவர்

1. பெற்றோர், மனைவி பிள்ளைகள், உறவுகள்
2. St Henrys college
3. கலைக்குடும்பம்

எல்லோருக்கும் எந்த நேரம் என்ன தேவை என்று அறிந்து செயற்படுத்தும் செயல்வீரன்.

தர்மநெறி மாறாமல் நடக்கவேண்டும் என்று நல்ல வழிகாட்டியாகவும் தர்மனாகவும் இருந்தவர்.

யாராவது தங்களுக்கு உதவி வேண்டும் என்று கேட்டால் இல்லை என்று சொல்லாமல் அவர் கொடுத்து உதவிய கர்ணனாக வாழ்ந்தவர்.

நல்ல பழக்கவழக்கங்களைக் கூட பக்குவமாய் எடுத்துச் சொல்லக் கூடிய பண்பு கொண்ட நல்ல மனிதர்.

நாடகம் எழுதுவதில் கூட சிரிப்புடன் கூடிய நல்ல சிந்தனையும் நல்ல செய்தியும் பிரதிபலிக்கும். குடும்ப வாழ்க்கையில் மனைவி, பிள்ளைகளுடன் நட்புடன் பழகுவார். மம்மி, பப்பா சண்டை போட்டு, மரியாதை இல்லாமல் கதைத்து கோவித்துக் கொண்டிருந்ததை ஒருநாள் கூட நான் பார்த்ததில்லை. மம்மி, பப்பாவின் வாழ்க்கை எனது வாழ்வின் Roll Model. அவர்களைப் போலவே வாழ நான் ஆசைப்படுகின்றேன்.

ஆனால் பப்பா எண்பது வயது வரை வாழ்ந்தாலும் தலைக்கனம், வஞ்சகம், போட்டி, பொறாமை என்றால் என்னவென்று தெரியாதவர்.

அதேபோல் ஒரு எதிரியைத்தானும் சம்பாதிக்கத் தெரியாதவர்.

நான் சின்னக் குழந்தையாக இருந்த காலத்தில் இருந்து நல்ல வழிகாட்டியாகவும், எனது பருவ காலத்தில் எனக்கு ஏற்ற பண்புள்ள ஒருவரை கணவராக தேர்ந்தெடுத்து பெரியவர்களின் ஆசிர்வாதத்துடன் திருமணம் செய்துவைத்து சில வருடங்களுக்கு பிறகு பிரான்ஸ் வந்தும் இதுநாள் வரை எங்களுடன் சந்தோஷமாக இருந்து எங்கள் குழந்தைகளையும் பக்குவமாய் பாசத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்தையும் கொட்டி வளர்த்தவர். மருமகன் என்று விலகி நிற்காமல் தம்பி என்று கூப்பிட்டு நட்போடும் உரிமையோடும் பழகுவார்.
மம்மி, பப்பா இருக்குமட்டும் வீட்டில் சந்தோஷத்திற்கும், சிரிப்பிற்கும் குறைவிருக்காது. அந்தக் காலம் எமது வாழ்க்கையின் பொற்காலம். மம்மியின் பிரிவின் பின் பப்பா வாழ்ந்தது எனது மகன் அலனுக்காகவே.
பப்பா நோயில் இருந்துபோது அவருக்கு பணிவிடை செய்கின்ற பாக்கியம் எனக்கு கிடைத்தது எனது அதிஷ்டமே. ஒரு நாளைக்கு எத்தனை முறை மகளே ஜீவா என்று கூப்பிடுவார். இனி அந்தக் குரலை எங்கே கேட்பேன்.
ஒவ்வொரு நாளும் என் கையால் ஊட்டினால்தான் தனக்கு சாப்பிட்ட மாதிரி இருக்கும் என்று சொல்லுவார். ஒவ்வொரு நாளும் ஊட்டிவிடுவேன். இனி யாருக்கு ஊட்டிவிடுவேன்.
ஒவ்வொரு நாளும் பப்பாவைக் கொஞ்சுவேன். இனி எப்ப பப்பாவைக் கொஞ்சுவேன்??
சிறுவயதில் அப்பாவின் பாசச்சுமை நாடகத்தில் இறக்கின்ற காட்சியை பார்த்து கதறி அழுது நாடகத்தை குழப்பினேன். நான் அழுவேன் என்று தெரிந்தும் ஏன் விட்டு சென்றீர்கள்?
இவ்வளவு காலமும் பப்பாவை ஒரு பொக்கிஷமாக பொத்தி பொத்தி பாதுகாத்து வைத்திருந்தேன். பப்பா கண் அயர்ந்த நேரத்தில் கடவுள் கூட்டி போய்விட்டார்.
நடிப்பில் வல்லவராக இருந்தும் வாழ்க்கையில் நடிக்காத, நாட்டிற்கும், வீட்டிற்கும் நல்ல குடிமகனாக, குடும்பத்தலைவனாக, சிரிப்பின் நாயகனாக, மீசைவைத்த குழந்தையாக, முகம் மாறாத நல்ல முகத்தானாக வாழ்ந்து என்னை கண்ணீருக்கு சொந்தக்காரியாக்கிவிட்டு, மம்மியோடு இணைந்து இறைவனடி சேர்ந்திருக்கும் என் பாசமுள்ள பப்பாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
அடுத்த பிறப்பு என்று இருந்தால் மீண்டும் பப்பா, மம்மிக்கே மகளாகப் பிறக்க வேண்டும்.

**பிரிவால் தவிக்கும்**
**மகள் ஜீவா, மருமகன் மரியதாஸ்**



## *DEAR GRANDPA,*

*I'm sorry. I'm sorry I didn't get to know you that well, because I realized that once someone is gone, their gone for good. That gave me a jerk back to reality. Even if I didn't know you too well, you were in my life for a brief period of time. You came to Canada when I was 11. During the time you came here, I learned many things. I learned that you shouldn't judge a book by its cover. I didn't talk to you much, because I never enjoyed talking to people during that time anyways. But you called me over, and told me about how you and my mom met. You treated my mom like she was your own daughter and I thank you for that. My mother learned many values from you, as well as I did. My mother passed on the values that you taught her, and I am sure I will too. Thank you for that. Thank you for being such an amazing person. I was blessed to have you in my life, even in that brief period of time. I still regret that I did not get to know you better, because I can't anymore. I pray to god that your soul rests in peace.*

*Your granddaughter,*
***Delana Theiventhiran** (Canada,15)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பப்பாவுக்கு,

மாமா என்று அழைக்க - இல்லை இல்லை
பப்பா என்றே அழை மகளே என்று தந்தையானாய்
சின்ன மகளாய் நல்வாழ்வு வாழ - பற்பல
புத்திமதிகள் பக்குவமாய் உரைத்தாய்
உங்கள் முகத்தில் கோபம் கண்டதில்லை
வார்த்தையில் இனிமை கண்டேன்
பழக்கத்தில் பண்பு கண்டேன்
அறிவினிலே அசந்துவிட்டேன்
புகழின் உச்சியில் இருப்பவர்களுக்கு
பண்பும் தழைத்தோங்குமா
என்ற இந்த கேள்விக்கு
நீங்கள் தான் முதல் விடை பப்பா
எம்பிள்ளைகளும் உங்களைப் போல்
பண்பிலும், கலைவழியிலும், அறிவிலும் உயர்ந்திட
உங்கள் ஆசி வேண்டுகின்றேன்
நீங்களும் மம்மியும் மண்ணுலகில் இன்பமாய்
வாழ்ந்ததுபோல், விண்ணுலகிலும் இறைவனின்
மோட்ஷ பேரின்ப பாக்கியத்தை அடைய
தினம்தோறும் வேண்டுகின்றேன்.

மகன், மருமகள்
**- செல்வா, மஞ்சு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் பப்பா ஒரு பல்கலைக்கழகம்!

எங்கள் பப்பா அரங்கததில் தோன்றுகின்றார் என்று விளம்பரம்பங்களி வெளியாகினால் போதும், குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே அரங்கம் நிறைந்து வழியும் அரங்கம் என்ன அரங்கம்?! வானொலியில் பப்பாவின் குரலைக் கேட்பதற்காககவே குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே வானொலிக்குப் பக்கத்திலேயே வந்து அமர்ந்து கொள்பவர்கள் ஏராளம்! இவைகளைத் தவிர்த்து எப்பொழுதும் பப்பாவைச் சுற்றி நிற்கும் நண்பர்கள் கூட்டம் வீட்டில் இருக்கும் பொழுதும் பிள்ளைகள் எங்கள் எல்லோரையும் தன் பக்கத்தில் உட்காரவைத்து கதைகள் பேசிக்கொண்டே இருப்பார்.

பப்பாவிற்கு கீழ்மட்டத்தில் இருந்து மேல்மட்டம்வரை அனைத்துத் துறையினரும் நண்பர்கள் ஆம் எங்கள் பப்பா ஒரு பல்கலைக் கழகம்.

அறநெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தவர் எங்கள் பப்பா அகந்தை என்னும் சொல்லுக்கு என்றுமே தனது வாழ்வில் இடமழிக்காதாவர் எங்கள் பப்பா எந்த நேரமும் சிரித்த முகத்துடன் இருப்பதுதான் வாழ்க்கையின் வெற்றியின் ரகசியம் என்னும் தத்துவத்தை நம் எல்லோருக்கும் கற்றுத்தந்தவர் எங்கள் பப்பா இப்படி இப்படியாக இன்னும் எத்தனையோ நல்ல விடயங்களையெல்லாம் எங்கள் எல்லோர் மனங்களிலும் விதைத்துவிட்டுச் சென்ற எங்கள் ப்பா ஒரு பல்கலைக் கழகம்!.

வாழ்க்கையில் எல் லோருக்கும் எத்தனையோ பிரச்சனைகள் இருக்கும் இப்படியான நேரங்களில் நாங்கள் சொந்தங்கள், உறவுகள், நண்பர்கள், ஏன் பக்கத்தில் இருப்பவர்களைக்கூட மறந்துவிடுகின்றோம். ஆனால் எங்கள் பப்பாவோ எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் அதையெல்லாம் ஒரு ஓரமாக வைத்துவிட்டு தினமும்எங்களோடு தொலைபேசியில் பேசுவதற்கு மட்டும் மறக்கமாட்டார்! தனது உடல் நலத்தைப்பற்றி சிறிதும் கவலைப்படாமல் எங்கள் உடல் நலம் பற்றி விசாரிப்பார் பேரப்பிள்ளைகளின் உடல் நலம் பற்றி விசாரிப்பார் அவர்கள் கொஞ்சிக் குலாவுவமார், இவையெல்லாம் பிள்ளைகளோடு மட்டுமல்ல? தனது நண்பர்களிடமும்கூட அப்படித்தான்! ஆம் எங்கள் பப்பா ஒரு பல்கலைக் கழகம்!

இப்படியாக எல்லா விதங்களிலும் பெருமைக்குரியவராக வாழ்ந்த எங்கள் பப்பா எல்லோருடனும் சமமாகவே வாழ்ந்து வந்தவர். எங்கள் பப்பா கவிஞர் அப்துல் ரகுமான் அவர்கள் தனது கவிதை ஒன்றில் இப்படிக் கூறியிருக்கின்றார்

மேகம்
கடகடவென்று சிரித்துவிட்டு
மழையாய் இறங்கியது
நனைந்து சிலிர்த்த பூமி சொன்னது
பெருமை
மேலே ஏறுவதில் மட்டுமில்லை !
கீழே இறங்குவதிலும் இருக்கின்றது! ". என்று.

ஆம் எங்கள் பப்பா அந்த மழையைப்போல எல்லோரது மனங்களிலும் இறங்கிச் சென்று நிறைந்து வாழ்ந்தவர். எங்கள் பப்பா ஒரு பல்கலைக்கழகம்!


ஆண்டுதோறும் ஆயிரமாயிரம் மாணவர்கள் வந்து சென்றுகொண்டே இருப்பார்கள்.
ஆனால் பல்கலைக் கழகம் அங்கேதான் இருக்கும்.

பப்பா! நீங்கள் எங்கள் எல்லோரது மனங்களிலும் வாழ்ந்துகொண்டே இருக்கின்றீர்கள்!

**- பிரேம்ராஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லோர் மனதையும் கவர்ந்த கள்வன் பப்பா

உறவினன் என்ற பொழுதும் உங்கள் பாசத்தால் கட்டிப் போட்டவர்.
எந் நிலையிலும் சிரித்த முகத்துடன் காட்சி தருவீர்கள். என்னையும் எனது மனைவியையும் பிள்ளைகள் போல் பார்த்துக் கொண்டவர்.
எங்கு சென்றாலும் எங்களுக்கு என்ன தேவையோ எல்லாம் வாங்கித் தருவார்.
Walking போகும் போது சின்னமகளே வா என்று கூட்டிப் போவார்.
வாழ்க்கையில் ஏற்படும் கஷ்ரதுன்பங்களை எப்படி சமாளிப்பது என்று கற்று கொடுத்தவர்.
பப்பா என்ற சொல்லுக்கே உயிர் கொடுத்தவர்
பப்பா என்றால் படிப்பில் வல்லவர். பண்பில் சிறந்தவர். பாசமான மனிதன் பாட்டாளிகள் நண்பன்.
ஒரு மனிதன் எப்படி மனிதனாக வாழ்வது என்பதை பப்பாவிடம் தான் கற்றுக்கொள்ள வேண்டும்.
இவ் ஜென்மத்தில் உங்களுடன் சேர்ந்து வாழ்கின்ற பாக்கியம் கிடைத்தது. ஆனால் அடுத்த ஜென்மம் ஒன்று இருந்தால் உங்கள் பிள்ளைகளாக பிறக்க வேண்டும்.

**ராஜன் வசந்தி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகத்தார் ஒரு யுகத்தார்!

முகத்தாரென்பார் முத்தமிழ் வித்தகரென்பார் - அவர்
முகத்தைக் காட்டினால் முப்பது லட்சம் கரவொலிகள்
நகைச் சுவையால் ஞாலமெலாம் புகழ் குவித்தார்
பகைக்காமல் நகைக்கும் பண்பால் பாரினை வென்றார்
தொலைக்காட்சிப் பெட்டியில் முகம்தெரிவது புதுமையல்ல
வானொலிப் பெட்டிதனில் தெரிந்ததுதான் புதுமையிலும் புதுமை
அந்த முகம் எங்கள் ஆசானின் சிரிப்பு முகம்
அதுவே எங்கள் முத்தான முகத்தார் முகம்
முகத்தாரின் மருமகனும் மறுமகனும் நானாக - தன்
நிகரற்ற புதல்வியைப் பரிசாய்த் தந்த பாரி வள்ளல்
இகவாழ்வில் இடறி விழாது - என்னை
அகத்தாலும், அறிவாலும், ஆட்கொண்ட யுகத்தாரவர்
தம்பி லோகரென்பார்! கல்லும் கரைந்துவிடும் - மறுகணம்
தம்பி லோ லோ என்பார் தேனிசையே தோற்றுவிடும்
நம்பி வந்த மருமகனை நல்லபடி ஆதரித்து - இப்போ
வெம்பி அழுது நிற்கும் வேதனையை ஏன் தந்தீர்?
தந்தைக்குத் தந்தையாகிச் சிந்தை குளிர வைத்தீர்
தாய்க்குத் தாயாகி வேதனைகள் போக்கி வைத்தீர்
நண்பனுக்கு நண்பனாய் நாலையும் பகிர்ந்து கொண்டீர்
நட்டாற்றில் நிற்கிறேனே நம்மை விட்டுப் பிரிந்ததேனோ?
விழுந்தாலும் எழுந்து நிற்கும் வீர நெஞ்சம் தந்தவரே
விழுதாகி எமைத் தாங்கி நல் வாழ்வு கொடுத்தவரே
தொழுவேன் நான் என்னுயிர் உள்ளவரை - தொடருவேன்
ஏழேழு பிறப்பிலும் முகத்தாரின் மருமகனாய்

**உங்களின் நெஞ்சம் நிறைந்த**
**- மருமகன் லோகன்**
**(இரத்தினம் லோகநாயகம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jemmaline 💔

Grand-père, tu étais content avec nous, tu parler avec nous, tu chantais et tout...
Tu était une vrais vedete. Jusqu'a cet age tu étais content et tut és envolé
dans les cieux content tu toujours etais content, pas de gros mots.
Avec grand-mère là-haut tu nous regarderas
Avant avais mal partout, tu souffrets, t'avais pleins de maladie très graves.
Et la tu es content avec grand-mère.
Il t'on enterrer le jour de mon anniversaire et a mes prochain s'anniversaire
je ne serai pas d'humeur à faire mes anniversaire.
Tu a decéder le 7 novembre quand j'étais à une compétitions de Karaté je ne
savais rien. Le 28 novembre quand j'étais entrains d'arrivée ma mère m'a
dit que tu étais partis là-haut.
Quand je t'ai vus j'étais triste.
Tu es avec grand-mère et ton fils Toujou mama





*We will miss papa*
*very much*
*But we are happy that we were able to spend*
*time with him in the last few years of his life.*
*We were very happy to pray with him and belive he is now*
*in heaven with mami and cunju.*
*We love you lots*

**- Manel and Gloria**



தாத்தா.
நான் தான் உங்கள் மூத்த மகனின்
வாரிசு புலம் வந்த இட்டு ஆட்டு
என் இருப்புக்காய் எல்லாம் பார்க்கவில்லை
சரி இனி பாட்டியுடன் சேர்ந்து
என்னை பார்த்துக் கொள்ளுங்கோ
Bye தாத்தா செலோரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அங்கிளுக்கு,
அன்புடன் கனடாவில் இருந்து உங்கள் மகள் எழுதும் சிறிய நினைவு மலர்
நவம்பர் மாதம் 27ம் திகதி காலையில் நான் வேலைக்கு சென்றுவிட்டேன்.
சிறிது நேரத்தின் பின்பு எனது கணவர் என்னை தொலைபேசியில் அழைத்து அங்கிளின் மரணச்செய்தியை சொன்னார். சிறிது நேரம் என்னால் ஒன்றும் பேசமுடியவில்லை. அதிர்ச்சி அடைந்தேன்.
அப்போது மீண்டும் நாமும் அங்கிள் குடும்பமும் வாழ்ந்த சந்தித்த அந்த நாட்களை பின்னோக்கி பார்த்தேன். அதாவது 1985ம் ஆண்டு திருச்சி விமானநிலையத்தில் நாம் நின்றிருந்தபோது ஒரு மனிதர் தனது மகனுடன் கம்பீரமான தோற்றமுடனும், நடையுடனும் எம்மை நோக்கி வந்தார். தான் திருச்சிக்கு முதன்முறையாக வந்ததாகவும், தமக்கு நல்லதொரு விடுதி எடுத்துத் தரும்படியும் தாழ்மையுடன் கேட்டார். அன்று தொடங்கிய எமது நட்பு இன்று வரை தொடர்ந்து 26 வருடமாகின்றது. நம்பமுடியவில்லை.

அங்கிள், அன்ரி, செல்வா மூவரும் எனது அப்பா, அம்மா, தம்பி என்றுதான் எப்பவும் நினைப்பேன். அதே போல் அங்கிள் என்னைக் கூப்பிடும் போதும் மகள் பபி எனத்தான் அழைப்பார். நாங்களும் அங்கிள் குடும்பமும் ஒரே வீட்டில் கூட்டுக்குடும்பமாகத்தான் இருந்தோம். அந்த சந்தோஷமான நாட்களை ஒரு நிமிடம் எண்ணிப் பார்த்தேன். இனி என்றுமே கிடைக்க முடியாத அந்த நாட்கள் என்னை நிலைகுலைய வைத்தது.
அங்கிளின் பேச்சும், மீசையும், நடையும் திருச்சியில் எமது சுற்றத்தாரை கவர்ந்தன. அவர் வீட்டில் இருந்தால் வீடு ஒரே சந்தோஷமாகத்தான் இருக்கும். நான் கனடாவில் இருந்து பிரான்சிற்கு தொலைபேசியில் தொடர்புகொள்ளும் போது எல்லாம் நாம் திருச்சி நாட்களை தான் நினைவில் கொள்வோம்.
1994ம் ஆண்டு எனது திருமணம் கனடாவில் நடந்தது. எனது கணவர் இளவாலையை சேர்ந்தவர் என்பதை அறிந்தவுடன் அவர்கள் மகிழ்ச்சி இரட்டிப்பாகியது. எப்பவும் நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் முதல் வார்த்தை மகள் எப்படி இருக்கிறாய்? என்பது தான்.
2006ம் ஆண்டு தில்லானா புரடக்ஷனின் அதிசயராகங்கள் வெளியீட்டு விழாவுக்கு எமது அழைப்பை ஏற்று உடல்நிலையையும் பொருட்படுத்தாது கனடா வந்து எமது வெளியீட்டு விழாவை சிறப்பாக செய்ததை என்றும் மறக்கமாட்டோம்.
அங்கிள், அன்ரி இருவரும் எம்முடன் இல்லை. ஆனால் தினமும் உங்களை நினைத்து கவலைப்பட்டுகொண்டிருக்கின்றோம்.
எமது மனதில் என்றுமே நீங்கள் எம்மை விட்டு போகமாட்டீர்கள். போகப் போவதும் இல்லை. உங்கள் ஆத்மா சாந்திஅடைய எல்லாம் வல்ல அந்த இறைவனை வேண்டி எனது இந்த சிறிய நினைவுமலரை உங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.
என்றும் உங்களின்
அன்பும் பாசமும் கொண்ட
பபி - கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மம்மியின் பப்பா ஏன் எங்களை பிரிந்து சென்றீர்கள்?

அன்புள்ள பப்பா,

உங்கள் செல்லப் பேரக்குழந்தைகள் எழுதும் கடிதம்.

பப்பா நீங்கள் இருக்கும் அறையைப் பார்க்கின்றோம். நீங்கள் அங்கில்லை. ஒரு நாளைக்கு எத்தனை முறை அலன், அலன் என்று கூப்பிடுவீர்கள். உங்கள் இருமல் சத்தம் கேட்கவில்லை. வீட்டில் நாங்கள் போய்வரும் போதெல்லாம் கதை கேட்பீர்கள். இப்போது அந்த அறை சிரிப்பு இழந்து, கதை இழந்து, கலை இழந்து கவலையுடன் காட்சியளிக்கின்றது.

ஏன் இப்படி எங்களை மறந்து சென்றீர்கள்?

நாங்கள் சிறுவயதில் இருக்கும் போது School இற்கு வந்து கூட்டி வருவீர்கள். நாங்கள் உங்களை ஏமாற்றி ஒளித்து ஓடி விடுவோம். அதேபோல் Train இல் உங்களை விட்டு ஏறியதால் தொலைந்து போனேன். என்னை தேடி பிடிக்கும் வரை எவ்வளவு கஸ்ரப்பட்டீர்கள். நாங்கள் எவ்வளவு குழப்படி செய்தாலும் எங்களை திட்டியதோ அடித்ததோ இல்லை. நாங்கள் சிறுவயதில் நடனம் ஆடும் போது எங்களை உற்சாகப்படுத்தி முகத்தாரின் மின்மினி வாரிசுகள் என்று சொல்லி பெருமைப்படுவீர்கள்.

நாங்கள் என்ன கேட்டாலும் வாங்கித் தருவீர்கள். உணவுப் பொருட்கள், Play games, உடைகள் எது கேட்டாலும் இல்லை என்று சொல்லமாட்டீர்கள். இனி யார் வாங்கித் தருவார்கள்?

அலன் பிறந்ததில் இருந்து தொட்டிலில் தன்னும் படுக்க விடாமல் அம்மாவிற்கும் உங்களிற்கும் நடுவில் வைத்து தூங்குவீர்கள். அவன் இல்லாமல் தூங்கமாட்டீர்கள். அலனுடைய ஆறு வயது வரை அவனுக்கு இரகசியமாக சூப்பி கொடுப்பீர்கள். இரவிலும், விடியற்காலையிலும் சீக்கிரம் எழும்பி யாருக்கும் தெரியாமல் சூப்பி போத்தலில் பால் கொடுப்பீர்கள். அலனை யாரும் கிண்டல் பண்ணக் கூடாது என்பதில் கவனமாக இருந்தீர்கள். அம்மா இறந்த பிறகு உங்களிற்கு துணையாக நாங்கள் உங்களுடன் உங்கள் அறையில் தூங்குவோம். நாங்கள் தூங்கிய பிறகு Bed sheet இனால் வடிவாக போர்த்தி விடுவீர்கள். தலை தடவி விடுவீர்கள். எங்களை பார்த்து ரசிப்பீர்கள். நாங்கள் வெளியூர் சென்றாலோ, நீங்கள் வெளியூர் சென்றாலோ எத்தனை முறை Phone செய்வீர்கள். எங்களை பிரிந்திருக்கவே மாட்டீர்கள்.

அம்மா இறந்த பிறகு அலனுக்காகவே வாழ்ந்தீர்கள். நீங்கள் கடைசியாக Hospital போகும் வரையும் காலையில் Alarme வைத்து அலனை எழுப்பி அலன் School போக ஆயத்தமாகும் வரை வாசலில் காவல் நின்று காசு கொடுத்து வழியனுப்பி வைப்பீர்கள். சாயங்காலம் எப்ப வருவான் என்று காவல் இருப்பீர்கள்.

நாங்கள் School முடிந்தால் நேரே வீட்டிற்கு வரவேண்டும் என்பதில் மிகவும் கவனம். ஒரு நாள் தன்னும் பிள்ளைகள் சாப்பிட்டார்களா? என்று கேட்க மறந்ததில்லை. கடைசியாக Hospital வெளிக்கிடும்போதும் அலன் சாப்பிட்டானா? என்று கேட்டுத்தான் போனீர்கள். Hospital இலும் எங்களைப் பற்றித்தான் மம்மியிடம் கேட்டீர்கள். இரண்டு நாளில் வீட்டிற்கு வந்துவிடுவேன். அப்படி கொஞ்சநாள் Hospital இல் இருக்க வேண்டி வந்தாலும் அலனின் பிறந்தநாள் வடிவாகச் செய்ய வேண்டும் என்று சொன்னீர்கள்.

அலன் School முடிந்து பப்பாவை பார்க்க வந்துவிட்டான் என்றவுடன் அவனைப் பார்த்து சிரித்து கொஞ்சி அவன் கைகளை இறுக்கி பிடித்து எவ்வளவு சந்தோஷப்பட்டீர்கள். டானியல் அடிக்கடி Hospital வந்து போகின்றான். Car ஓடுவது கவனம் என்று சொன்னீர்கள். அதிக நோயினால் பாதிக்கப்பட்ட போதெல்லாம் சுகப்பட்டு வந்துவிட்டீர்கள். உற்சாகமாக வீட்டில் இருந்துவிட்டு இப்படி போவீர்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை. இப்போ வீட்டில் சிரிப்பு தொலைந்துவிட்டது.

பப்பா நீங்கள் எங்களில் வைத்தது பாசமல்ல. மிகவும் வெறித்தனமான பாசம். இப்படி ஒரு பப்பா எவருக்கும் கிடையாது.

பப்பா உங்கள் பேரன்கள் நீங்கள் விரும்பியபடியே நடப்போம். உங்களைப் போல் நற்பண்புகளோடு உங்கள் பெயர் சொல்லும் அளவிற்கு உயர்நிலையில் இருப்போம்.

எங்கள் எதிர்கால வளர்ச்சிக்கு இறைவன் துணையும், உங்களினதும் அம்மாவினதும் ஆசிர்வாதம் எங்களிற்கு தேவை.

எப்பவும் எங்களுடன் இருந்து வழிநடத்துங்கோ.

நீங்கள் அம்மாவோடு சந்தோஷமாக இறைவனுடன் சேர்ந்திருக்க பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பேரன்கள்

**பிலிக்ஸ் டானியல், அலன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் உயிர் நண்பனே!
# உன் தோளுக்காக ஏங்கிய மலர் மாலை.!

தினமும் உன் தொலைபேசி அழைப்பிற்காக ஏங்கிய நான் நீ எனை விட்டுப் பிரியப்போகின்றாய் என்பதனை உணராமல் முதல்நாள் என் செல்ல மகள் ஜீவாவை தொடர்பு கொண்டேன், அப்போது "நான் லண்டனில் இருந்து வந்துவிட்டேனா" என்ற உனது விசாரிப்பையும் அறிந்துகொண்டேன். அடுத்தநாள் என்னை அழைத்துச்சென்று உன்னோடு உரையாட வைப்பதாகவும் உறுதி சொன்னார்கள். ஆனால்..

அடுத்தநாள் 27ம் திகதி காலையில் என்னைச் சந்திக்காமலேயே நீ மௌனமாக உறங்கிவிட்டாய். மரணத்தின் பிடியிலிருந்து உன் உண்மையான பிரார்த்தனைகளால் என்னைக் காப்பாற்றிவிட்டாய். காப்பாற்றிவிட்டு, அந்த நிம்மதியில் நீ மூச்சுவிட மறந்துவிட்டாய் என்று உணரும்போது என் இதயமே நின்றுவிடும் போலிருந்தது.

*"மாபெரும் சபையில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழவேண்டும்*
*ஒரு மாற்றுக்குறையாத மன்னவன் இவன் என்று போற்றிப் புகழ வேண்டும் .."*
என்ற பாடல் வரிகளுக்கு நீ முற்றிலும் சொந்தக்காரன். உன் இறுதிப் பயணத்தின்போது உன்னை மாப்பிள்ளைக் கோலத்தில் அலங்கரித்து உற்றம், சுற்றம், நண்பர்கள் எல்லோரும் நின்று கதறி அழுதுகொண்டிருந்தார்கள். அப்போது உனக்காகத் தயார் செய்யப்பட்ட அழகிய மாலை தயாராக இருந்தது. மௌனமாக என்னைப் பார்த்து இன்னொரு மலர் மாலை ஏக்கத்துடன் விழித்தது, புரிந்தது எனக்கு.

எங்களையெல்லாம் நீ பிரிந்து செல்லும் நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. ஒரு ஆலமரமாய் நிழல் தந்து, புகழோடு வாழ்ந்து, ஆண்டவன் அழைப்பை ஏற்று பயணம் செய்ய நீ காத்திருந்தாய். அந்த மலர் மாலையின் ஆசையை நிறைவேற்ற உன் குடும்பத்தாரின் அனுமதி கேட்டு நீ அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்த அந்த மண்டபத்தில் காத்திருந்தேன். அந்த மாலையை உன் தோள்கள் தாங்கி நிற்க வேண்டுமென்ற விருப்பமும், எந்தவித தடையுமின்றி நிறைவேற்றப்பட்டதை நினைத்து இறைவனுக்கும் நன்றி சொன்னேன். அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மலர் மாலையின் ரூபத்தில் அலங்கரித்திருப்பது நான்தான் என்றுணர்ந்தேன். அது போதுமையா என் இறுதிவரை.

அப்போதும் ஒரு பாடல்வரி நினைவிற்கு வந்தது
"*மலரே மௌனமா? மௌனமே வேதமா?*
*மலர்கள் பேசுமா? பேசினால்..*"
நீ என் உண்மையான நட்பினை உணர்ந்து கொள்வாய் என பெருமை கொண்டேன்.

உன் தோளுக்காக ஏங்கிய மாலை மட்டுமல்ல என் விரல்கள் தொட்டு அழுத்திய தொலைபேசி, அதற்கும் மேலாக நீ அணிந்திருக்கும் சட்டைப்பையை அலங்கரித்த முத்து முத்தான உன் கையெழுத்தை எழுதும் விதம் விதமான பேனாக்கள், உன் உதவி கேட்டு வருபவர்களுக்கு எந்தவித முகச் சுழிப்பும் இல்லாமல் மூக்குக் கண்ணாடியை அணிந்த வண்ணம் நீ தங்கியிருக்கும் மேல் மாடியிலிருந்து கம்பீரமாய் வரவேற்பறைக்கு இறங்கிவரும் உன் தோற்றமும், இன்னமும் எங்கள் முன்னால் நிழலாடுகின்றது.

"முகத்தான் வீட்டில் அப்புக்குட்டி" என்ற தொடரை A.B.C. வானொலிக்காக நீ எழுதி எங்கள் நண்பன் அருணகிரியை Copitien ஆக நடிப்பதற்காக அழைத்து ஒலிப்பதிவு செய்த நாட்களை எண்ணிப் பார்த்து வியக்கின்றேன்.

இனி ஒரு காலம் எப்போது வரும்? உன் நினைவுகளை இரைமீட்டிப் பார்க்கின்றேன். நீ ஒரு கணக்கியல் நிபுணன். உன் பாதையை ஐந்தொகை பார்த்தாய்? மிஞ்சுவது நட்பு ஒன்றுதான். அந்த நினைவோடு வையகம் உள்ளவரை நான் வாழ்வேன்.

நான் கலந்துகொண்ட கலை நிகழ்ச்சிகள் பலவற்றின் பின்னால் நிட்சயம் உனது பிரதியாக்கங்கள் ஆங்கிலப் பேச்சுக்கள் ஒலிவாங்கியின் ஊடாக பார்வையாளர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கும். உன்னையும் என்னையும்போல் இனியொருவர் நட்புடன் வாழ்ந்திட முடியுமா? என்ற கேள்விக்குறியுடன் நிற்கின்றேன். இனி எவர் துணையை நான் நாடுவேன்?.

மேசையில் உனது திருவுருவத்தை வைத்து உன் ஆசீர்வாதத்துடன் உன்னைப்பற்றியே எழுதுவதற்கு ஆரம்பித்த உன் உயிர் நண்பனின் எழுத்துக்களுக்கு உயிர் கொடுத்து என்னை வாழ்த்து.

நிட்சயம் நீ என்னோடு வாழ்கின்றாய். நாம் இருவருமே இலங்கை வானொலியில் கலைஞர் தெரிவிற்காக காத்திருந்து தெரிவுசெய்யப்பட்ட அந்த மறக்கமுடியாத நன்னாளான ஆடி மாதம் 26ம் திகதி 1966ம் ஆண்டை எப்போதும் இரைமீட்டிப் பார்க்கின்றேன். அன்று ஆரம்பமான எங்கள் கலைப்பயணம் நீ பிறந்த 26ம் திகதி மார்கழி மாதம் 1931ம் ஆண்டுடன் இணைந்துபோக மண்ணிற்காய், மண்ணின் விடிவிற்காய் நீ ஏங்கி அழுத நாட்களை நினைத்துப் பார்க்கின்றேன்.

உன் புனிதமான நினைவுகளை மறக்கப்படக்கூடாது என்பதற்காக நாம் தெய்வங்களாகப் பூசிக்கும் எங்கள் மாவீரர்களின் நினைவு தினத்திலேயே நீ மரணித்திருப்பதுவும் எனக்குக் கிடைத்த பெருமைக்குரிய வரப்பிரசாதமாகும்.

இலங்கை வானொலியில் தொடரான எங்களது பங்களிப்புக்கள் "மத்தாப்பு" "கதம்பம்" "குதூகலம்" மற்றும் அரை மணித்தியால ஒரு மணித்தியால நாடகங்கள், அதற்காக தயாரிக்கப்பட்ட எமது நாடகப் பிரதிகள், போட்டா போட்டியாகப் பதிவு செய்யப்பட்டு தமிழர் வாழ்கின்ற பகுதிகளில் எல்லாம் ஒலிப்பதிவாகி எமக்கெல்லாம் பெருமை சேர்த்திருக்கின்றதென்றால் அது மிகையாகாது.

நீ எழுதும் நாடகங்களில் எல்லாம் நீ விரும்பும்படியாக என்னைத் தெரிவு செய்யும்படியாக மறைமுகமாக தயாரிப்பாளர்களிடம் சிபார்சு செய்த அந்த நெஞ்சம் நிறைந்த அன்பை என்னவென்று சொல்ல?.

நீ உயர் பதவி வகித்த அரச திணைக்களங்கள் உன்னால் உயர்வு பெற்றன. அந்தக் காலகட்டத்திலும் எங்களது சந்திப்புக்கள் மகிழ்ச்சிகரமானது. மறக்கவே முடியாதது. நீயும் நானும் புலம்பெயர் நாடுகளில் மேடையேற்றிய நாடகங்கள்,அதற்கான பயணங்கள், வழிநெடுக நகைச்சுவையான உரையாடல்கள், சிரித்து சிரித்து வயிறு புண்ணான சம்பவங்கள், எதனை மறக்க முடியும்?.

அதனைத் தொடர்ந்து நீ நடித்து ஜனாதிபதி விருது பெற்ற "வாடைக்காற்று" திரைப்படம். அத்தோடு எனதினிய நண்பன் மரிக்கார் எஸ். ராம்தாசின் பிரதி நெறியாழ்கையில் 1976களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிக்கப்பட்ட "கோமாளிகள்" "ஏமாளிகள்" திரைப்படங்கள் வர்த்தகரீதியாக பேசப்பட்டு புகழ் சேர்த்தன. அங்கும் முகத்தாரும் அப்புக்குட்டியும் இணைந்தே பணியாற்றினோம்.

இலங்கையில் இரண்டு நாடக மன்றங்கள் மூலம் அமரர் கணேசபிள்ளையின் பிரதி நெறியாழ்கையிலும், அமரர் கே.எம். வாசகரின் தயாரிப்பு, நெறியாழ்கையிலும் நானும் நீயும் இணைந்து கலைப்பயணம் செய்தோம். எனக்கும் உனக்கும் அத்தனை நெருக்கம். அத்தனை பாசம். என் வீட்டைத்தாண்டி உன் மனைவியின் ஊரான இளவாலைக்குச் செல்லும் வழியில் என் தாயாரின் விருந்தோம்பல்.. இப்படி எதை மறப்பது?.

இலங்கையில் இணைந்த நாங்கள் புலம் பெயர்ந்தும் ஒரே நாட்டில் தஞ்சம் புகுந்து இணைவோம் என்று கனவில்கூட நாங்கள் நினைத்திருக்கவில்லை. ஆண்டவனின் அன்பு எமக்கு நிறையவே கிடைத்து வந்துள்ளது. தனிமரமாக நின்றிருந்த எனக்கு உன் குடும்பத்தினர் நிழல் தரும் மனிதர்களாக இருந்தார்கள்.

நீ சம்பாதித்த மனிதர்களை உனது இறுதியாத்திரையில் கண்டு வியந்தேன். நீ இளவயதில் ஆசிரியராகக் கடமையாற்றிய புனித கென்றி அரசர் கல்லூரியின் பழைய மாணவர்கள் எவருக்குமே கிடைத்திருக்க முடியாத கௌரவம் தந்து பிரியாவிடை கொடுத்து அனுப்பிய காட்சி என்னை குலுங்கிக் குலுங்கி அழவைத்தே விட்டது. என்றும் நினைவில் நிற்கும் காட்சி அது.

அவர்களோடு நீ கலைத்துறையில் பங்களிப்புச் செய்த கலைஞர்கள் அனைவரும் கண்ணீர் விட்டு அழுதவண்ணம் உன் இறுதி யாத்திரையில் கொட்டும் பனி மழையிலும் கலந்து கொண்டிருந்தார்கள். வரலாற்றுப் பதிவு பெறுகின்ற மண்ணின் மாவீரர்களுடன் நீயும் சிறப்புப் பெற்ற நாளை நினைத்துப் பெருமையுடன் உன் பிரிவினைத் தாங்க முடியாது தவிக்கும் உன் இனிய நண்பன் அப்புக்குட்டியனை நினைத்து வானத்தில் இருந்து குரல் கொடு.

இப்போதும் என் வீட்டுத் தொலைபேசி மணி ஒலிக்கும்போதெல்லாம் ஓடிச்சென்று ஏமாற்றத்துடன் திரும்புவேன். என் நெஞ்சிருக்கும்வரை உன் நினைவிருக்கும்.

ஒரு ஆத்மார்த்தமான ஆயட்கால நண்பனின் பிரிவுஆற்றொண்ணாத் துயரைத் தந்தாலும் நாம் ஒன்றாக வாழ்ந்த பதிவு நிறைந்த காலங்களை நினைவில் நிறுத்தி உன் பசுமையான நினைவுகளோடு என்றும் உன் ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்டி இப்படியொரு அற்புதமான அறிவாற்றலும், அன்பும் நிறைந்த "முகத்தானை" ஆயுட்கால நண்பனாக எனக்களித்த இறைவனுக்கு நன்றிகூறி என்றும் உன் நினைவுகளோடு வாழும் உன் இனிய நண்பன்


— அப்புக்குட்டி ரி. ராஜகோபாலன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Papa acting Stage Drama & Movies






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித ஹென்றியரசர் கல்லூரி நிகழ்வுகள்








London - 1997



Canada



in 1999 at home





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலத்தால் அழியாத காவிய நாயகன் திரு. முகத்தார் ஜேசுரட்ணம்

நந்தவனத்தில் இருக்கும் எல்லா மலர்களும் நறுமணம் தருவதில்லை
வானத்தில் இருக்கும் எல்லா நட்சத்திரங்களும் கண்களுக்குத் தெரிவதில்லை
ஞாலத்தில் பிறந்த எல்லா மனிதர்களும் வரலாறு படைப்பதில்லை
"வரலாறு படைத்த காவிய நாயகர்கள் மரணம் அடைவதில்லை"
முகத்தார் ஜேசுரட்ணம்...!
காலம் தந்த பெரும் கலைஞர் - தமிழீழக்
கலைகளின் அழிக்க முடியாத ஆணிவேர்
கம்பீரத் தோற்றமும் நிமிர்ந்த நடையும் கொண்ட மனிதர்
எனினும்,
கனிந்த மனம் கொண்ட குழந்தைப் பிள்ளை அவர்.


இந்தியத் திரைப்படங்களுடனும் பாடல்களுடனும் போட்டி போட்டு
நகைச் சுவையான சிந்திக்க வைத்த பல நாடகங்களைத் தந்தவர்.
சண்டியன் சின்னத்தம்பி, கோப்பாய் டு டுபாய், லண்டன் மாப்பிள்ளை, எனப் பல
நாடகங்களால் மேடைகளைக் கலக்கி எடுத்தவர்.
பருவக்காற்று, கதம்பம், முகத்தார் வீடு.... என
இலங்கை வானொலியிலும் புகுந்து விளையாடியவர்.
பிற எழுத்தாளர்களின் நெறியாழ்க்கையில் நடித்துத் தனிமுத்திரை பதித்தவர்.
தனது கலைத் திறமைகளுக்காய் பல விருதுளைப் பெற்றவர்.
தன் குடும்பத்தில் மிகப் பற்றுள்ளவர்.
இப்படி......
எழுதிக் கொண்டே போகலாம்.
எழுத எழுத வார்த்தைகள் வற்றாத ஊற்றாய் வந்து விழுந்து கொண்டே இருக்கும்.
பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே இறைவன் தந்த காலத்தை
அருமையாகப் பயன்படுத்திக் கொண்டவர் முகத்தார் ஜேசுரட்ணம் அவர்கள்.
பல போராட்டங்களும், தடைகளும்,
இன அழிப்பும், புலம் பெயர்தலும்,
நோய் உபாதைகளும், வயது போதலும்...
எவற்றினாலும்
அவர் கலைப் பயணத்தை முடக்க முடியவில்லை.
இறுதி வரை எழுதிக் கொண்டே இருந்தார் - அதனால் தான் என்னவோ..,
தன் சுய கதைக்கும் அவர் முற்றுப் புள்ளி போடவில்லை.

புன்னகைத்த முகமும் எதையும் முற்போக்காக எடுக்கும் தன்மையும்
எந்தப் பிரச்சினைகளையும் சமாளிக்கும் திறமையுடன் - தன்
சிரிப்பிற்குள்ளும் மௌனத்திற்குள்ளும்
பல விசயங்களை வைத்திருந்த அனுபவசாலி அவர்.
புகழ் அவருக்குத் தலைக்கனத்தைத் தரவில்லை - தாழ்மையையே தந்தது.
வாழ்வு அவரை ஒளித்து வைக்கவில்லை - பிரபல்யப்படுத்தியது.
மரணித்ததால் அவர் மறைந்து விடவில்லை - எங்கள் மனங்களிற்குள் வாழ்கின்றார்.
எங்கள் பழைய மாணவர் சங்கத்தின் வளர்ச்சியில் என்றும் உறுதுணையாக நின்ற
திரு முகத்தார் ஜேசுரட்ணம் அவர்களை...
நன்றியுடனும் கண்ணீருடனும்.....என்றும் நினைவு கொள்ளும்...

**இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம் ம.வி - ப.மா. சங்கத்தினர் - பிரான்ஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# MUHATHAR S' JESURATNAM

An appreciation by Rasa Swampillai

The mortal remains of Santhiapillai Jesuratnam were laid to rest in Gonesse, France on the 4th December 2010. He passed away on the 27th November 2010 at the age of 79 after a life of considerable achievements in Tamil stage, radio and small screen plays, in his career as an administrator, as a prominent Henrician and as a community campaigner. Muhathar Jesuratnam had a fine intellect and a considerable range of interests which he explored with relish. He will be remembered for very many things by those among whom he lived and worked.

I am privileged to have known Mr Jesuratnam for over sixty years. That is quite a long time. He was a few years ahead of me at St Henry's College, and naturally we knew each other during that time. During his brief teaching carrier at College, he was the Third Eleven football team coach and I had the good fortune to be the team vice captain. I had the opportunity then to know him well. As his parents' house was just a stone's throw from College, I have visited their house on several occasions; his parents always welcomed me warmly and I came to know them well too and like them. Soon after, when he entered government service in Colombo, I was also in Colombo as a student at a college there. After his marriage to Irene, as her family and mine have close family ties, my friendship with both continued. Even after I came to England for studies and during the many years I have lived and worked here, we have remained good friends and continued to be in regular contact.

Santhiapillai Jesuratnam was born on the 26th December 1931, the only child of Mr Anthonypillai Santhiapillai of Suruvil, Kayts, a cigar merchant, and Mrs Santhiapillai Mariapillai, a teacher from Ilavalai. Jesuratnam was born in Suruvil and grew up in Ilavalai during his teenage years. At St Henry's he was a bright and popular student, good public speaker in both English and Tamil, and showed keen interest in acting and drama. After completing the Senior School Certificate with good grades, joining government service would have been comparatively easy for him at that time. He sailed through the selection process, by national competitive examination, for the government clerical service with ease. His first appointment was with the Education Department in Colombo.

His amiable nature and friendly disposition made him friends everywhere; at work he was held in high esteem right from the earliest days of his working life. In government service his communication skills, administrative abilities and his diligence to duty were recognised and admired by his colleagues and superiors alike. His progress in the service was steady and promotion to administrative grade was rapid.

In 1951 he married Irene Villavarasingham. Irene grew up in Avisawela where her parents, Mr and Mrs Villavarasingham, owned a rubber plantation. They were to have five children, two girls and three boys who have themselves gone on to become successful and upright citizens whom the parents can be justly proud. Jesuratnam was a loving husband and a caring father, and in turn the devotion of the children to their parents is truly remarkable. It has been a moving experience for me to observe how well the children, together with their families, have cared for both their parents.

Jesuratnam's devotion to St Henry's College was strong always. In Colombo he was an active member of the Old Boys' Association and was an enthusiastic supporter of the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

College Football Teams during the many national championships the teams competed in during the 1970s. He was immensely proud of the achievements of St Henry's in football during that period and has related to me and other Henrician friends about many happy instances connected with these championships. His anecdotes were always entertaining and he would tell them succinctly and with precision in his distinctive manner.

The highpoint of his personal satisfaction and pride in this context was undoubtedly when he was invited by the then Rector, to speak at the reception at Ilavalai to the 1976 Football Team when they returned from the A. N. C. L. Championship Tournament in Colombo. He has recounted this incident in an article in Henricians United Kingdom Anniversary Souvenir 1997, under the heading, A Flash-back of the recent past, and the Present. He wrote: «I can still visualise the mammoth gathering at the facade of the College to honour the victorious St Henry's College 1st Eleven Soccer Team on their return from the A. N. C. L. (all Ceylon) Championship Tournament in 1976. The then Rector, Rev Fr Anton T Rajanayagam seated in a relaxed and rejoicing mood, with the members of the Team seated behind, and I had the honour to be invited to address the assembled multitude. Every student and Teacher from College, almost every resident of Ilavalai, and many more from adjacent villages were there. And that was just one of the many occasions we had, during the middle and late seventies to celebrate great victories in soccer at national level.»

Living in Colombo gave Jesuratnam the opportunity in the 1950s to rekindle his interest in amateur dramatics that had been dormant since his student days at College. He revived this interest by writing short Tamil stage plays and acted in a few too with some success. These activities led to him being accepted as a part-time artiste by Radio Ceylon in 1966. From such small beginnings he progressed steadily and by 1988 he was established as a prominent playwright and actor of Tamil stage, radio and small screen. He had a great following in Sri Lanka and received favourable reviews regularly not only in Sri Lankan newspapers but also in South Indian periodicals like Chinthamani and Ananda Vikatan. For his success as an artiste he was honoured with four awards in Sri Lanka between 1979 and 1982. The first and the most prestigious among these awards was the one he received from the President of Sri Lanka. This prompted Fr Rector writing in his review of College history in 1979 in The Henrician, the College magazine, to say «As if to crown all our efforts at School Mr S Jesuratnam, an active old boy of our school, and who for some time was on the Staff of our College, won the President's first ever award for his supporting role in the film «Vaadaikattu». We congratulate him on his maiden achievement and wish him «Ad Majora». We are proud of his achievement». Another of those awards conferred on him the title of «Muhathar» for his role in «Muhathar Veedu», a weekly radio series which he wrote and acted that ran for two hundred and sixty eight consecutive episodes over more than five years.

But his life in Colombo was not all glamour and success all the time. From the late 1950s onward, civil disturbances, riots and states of emergency occurred with monotonous regularity. During these occurrences normal life was severely disrupted and there was grave danger to life and limb. The worst of these riots was in 1983 when Jesuratnam, as indeed thousands of Tamils in Colombo, had to flee from their homes. He was forced to seek refuge in temples and schools for his personal safety on five different occasions. He faced political problems in his career too. At that time Tamil Government servants faced many problems due to changing political circumstances and many left the service. In order to avoid these problems and to leave Colombo for a place of safety, he resigned his job in 1984 reluctantly after thirty three years of service.

In 1985 he started a new life in exile in South India. Because of his earlier fame in Radio Ceylon plays, he was instantly recognised and made to feel welcome in stage and radio settings there. He engaged in writing stage and radio plays and some acting too and received



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

a prestigious award in Trichy in Tamil Nadu, in recognition of these contributions to Tamil arts and culture. But his heart was really with the Sri Lankan Tamil refugees in Tamil Nadu and he spent a lot of time and effort on improving their life and welfare. He worked closely with UN High Commissioner for refugees and other organisations in Chennai. During this time his children who were already well settled in France were eager for their parents to join them permanently in that country. But his commitment to the cause of displaced Sri Lankan community in Tamil Nadu made it difficult for him to leave. However, after some eight years in Tamil Nadu, and under constant pressure from his children, he moved to France in 1993.

Life in France was in a way a new beginning for Jesuratnam and Irene. After being away from their children for several years, they were now able to be together with all their children and their families. This coming-together made them both very happy. In France two matters dominated his attention. One was support to Henricians France and through that to St Henry's College and the other, active and continuing participation in writing, acting and directing plays for the stage, radio and television. With regard to the first, he was an active supporter of Henricians France and was soon elected President. He worked enthusiastically in strengthening the links of Henricians France with Henrician Alumni Associations in Colombo, United Kingdom and Canada. Many Henricians UK members held Jesuratnam in high esteem. He was Chief Guest at Henricians UK Annual Reunion in September 1994. The Rector, Rev Dr Justin Gnanapragasam and Henricians Colombo President, Mr Anton Jeyanathan, were Special Guests at the same event. As President of Henricians UK then, I felt very honoured and humbled to welcome them all. The four of us had a good opportunity after the event to discuss how the three Associations could help our College which was displaced from Ilavalai at that time. Jesuratnam was President of Henricians France from 1993 to 2001 and was elected Vice Patron in 2001.

With regard to his passion for writing, acting and directing plays during his time in France, his works were accepted regularly for broadcast throughout Western Europe by Tamil Radio and Television (TRT), Asian Broadcasting Corporation (ABC) and International Broadcasting Corporation (IBC). In appreciation of his part in these productions he received four awards in France, two in Germany and two in England. These awards are a lasting testimony to his talents and abilities in the creative arts. In recognition of his contributions to and achievements in the arts, Henricians United Kingdom honoured him with an award during their Centenary celebrations in 2006. Unfortunately he was too ill to travel to London at that time and both his daughters jointly received the award on his behalf.

During the last six years or so he suffered from failing health, and had long and regular stays in hospital. The untimely deaths of his beloved wife in 2005 and his eldest son Maharaj in 1998 were severe blows he endured with fortitude and in silence. In recent years, with worsening health he had to curtail his active role in cultural activities but was always ready and willing to share the benefit of his wide experience with anyone who sought his opinion.

As his family and friends gather together in Gonesse, France for the 31st day service of prayer and thanksgiving for his life and work, Henricians everywhere wish to convey our love and deepest sympathy to his sorrowing children and their families and pray that the good Lord will grant them peace of mind and bless them. We grieve at the loss of this great father, grandfather, father-in-law, relative and friend but we also celebrate the life of one so special. May his soul rest in peace.

**- 28 Dec 2010**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்துக் கலை ஆலமரத்தின் பழுத்த கிளை ஒடிந்துவிட்டது

இறப்பும் பிறப்பும் வாழ்க்கையில் தவிர்க்க முடியாதவை. எம்மிடையே வாழ்ந்த, எம்முடன் வாழ்ந்த, எம்முடன் சிரித்து மகிழ்ந்த, எம்முடன் கலை செய்த ஒரு நல்ல கலைஞன், ஒரு நல்ல மனிதன் தனது இறுதி மூச்சை அடக்கிக்கொண்டான். ஆனால், அவன் வாழ்வில் சிறப்பாக, மகிழ்வாக, செறிவாக, நிறைவான வாழ்வை வாழ்ந்துள்ள அந்தப் பெருமகனை இறப்பில் நிறைவு காண வேண்டுகின்றேன்.

மனித முகங்கள் வித்தியாசமானவை. ஆளுக்கொரு வர்ணமும், நேரத்துக்கொரு குணமும் காட்டுவது தான் அதன் இயல்பு. இது பொது நியதி. தனக்கு வேண்டியவர்களுக்கு அல்லது தனக்குக் கட்டுப்பட்டவர்களுக்கு அல்லது தன்னை விட மேம்பட்டவர்களுக்குச் சாமரை வீசும் அந்த முகம், தனக்கு பயனற்றவர்களை அல்லது தன்னை முந்திவிடக்கூடியவர்களை வெறுக்கும், ஒதுக்கும், நிந்திக்கும் இது நிதர்சனம்.

கலைத்துறையிலே இதைக் கேட்கவே வேண்டாம்.

இன்று உலகம் பூராகவும் கலைஞனை ஆராதித்தாலும் அவனை அறிவுலகம் அங்கீகரிக்க மறுப்பதற்கு அவன் முகத்தின் நவரசங்கள் தான் காரணம்.

புகழால், பணத்தால், பொறாமையால், சுயநலத்தால், தற்பெருமையால், ஆணவத்தால் பொதுவாகவே கலைஞன் எதையுமே மிகையாக அனுபவிப்பவன்.

ஆனால், என் அறுபத்து மூன்று வருட கலைவாழ்க்கையில் நான் சந்தித்த ஒரே மனிதன், கலைஞன் அது முகத்தார் ஜேசுரட்ணம். இது பாராட்டுரையுமல்ல, பரிந்துரையுமல்ல, புகழ்ச்சியுமல்ல. உண்மை!

ஆறுமுகத்தார் என்ற பாத்திரத்தில் நடித்ததால் அவருடன் நிலைத்துவிட்ட பெயர் முகத்தார். ஆனால், அப்பெயர், அவருடன் கலந்துவிட்டதற்குக் காரணமும் அவருடைய நல்ல முகம் தான். முகத்தார் என்றால் பல முகங்கள் என்றும் அர்த்தம் கொள்ளலாம். அவருக்கு அந்த பல முகங்கள் கூட எல்லோரையும் அன்பு செய்யும் திருமுகங்கள் தான்.

எப்படி ஒரு மனிதனால், ஒரு கலைஞனால் இப்படி இருக்க முடிந்தது, முடிகிறது? அது ஆய்வுக்குரிய விடயம். ஆனால் அது விந்தையல்ல. உண்மை.

1960 களில் சந்திக்கும் போதும், 1970 களில் பழகிய போதும், 1990 களில் சேர்ந்தபோதும் அதே நட்பு முகம், அதே அன்புக் குரல், அதே கனிவு, அதே உரிமை, அதே இனிமை.

ஐந்து வருடங்களாக ஒரு வானொலித் தொடர், தொடர்ச்சியாக வானொலியில் ஒலிபரப்பாகி மக்களால் ஆராதிக்கப்பட்டதென்றால் அவரின் கலைத்துறைக்கு வேறு வழிமொழிதல்கள் வேண்டியதில்லை.

அவர் வாடைக்காற்று திரைப்படத்தில் நடித்து ஜனாதிபதி விருது பெற்றதும், நாடகங்களில் நடித்துப் பாராட்டுப் பெற்றதும், வானொலியில் சாதனைகள் புரிந்ததும், உணர்வுடன், உற்சாகத்துடன் இவற்றைத் தொடர்ந்ததற்காகவே பாராட்ட வேண்டும்.

அத்தகைய உயர்ந்த மனிதனை, சிறந்த கலைஞனை பாரிஸ் ஈழநாடு அனுசரணையுடன் ஜேர்மனி இரங்கும் இல்லம் கலைமாமணி பட்டம் வழங்கிக் கௌரவித்திருந்தது.

இப்படிப்பட்ட சிறந்த மனிதன், சிறந்த கலைஞன் இன்று நம்மிடையே இல்லை.

அவர் விட்டுப்போன எச்சங்கள் நம்மிடையே இருக்கின்றன. முகத்தார் எஸ்.ஜேசுரட்ணம் புகழ் என்றும் நிலைத்திருக்கும். அவருடைய இறுதி நாட்களில் அவருடைய நினைவைப் பேணுவதுடன், தொடர்ந்து அவருடைய சாதனைகளையும் நினைத்து , ஈழத்தில் வாழ்ந்த ஒரு பெரும் கலைஞனை மறக்காமல் கலைப்பணி தொடர வேண்டியதுதான் என் போன்ற சாதாரண கலைஞர்களுடைய கடமை.

வாழ்க முகத்தார் எஸ். ஜேசுரட்ணம் புகழ்

- ஏ. ரகுநாதன்

தமிழாள் கூத்தவை

நாடக, திரைப்பட, வானொலி

தொலைக்காட்சி, கலைஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் தெய்வத்தைப் போல நேசிக்கும் மா,மனிதர் "அத்தார்" யேசுரட்ணம்

தாயின் ஏணையில் படுத்திருந்து தாலாட்டுக் கேட்டதில் தொடங்கி, அன்னையைப் பிடித்து, திண்ணையைப் பிடித்து, இவர் நடை பயின்ற காலங்களோ அல்லது பள்ளியில், கல்லூரியில் படித்ததோ பருவகாலத்தில் துடிப்போடு திரிந்ததோ எதுவும் எங்களுக்குத் தெரியாது. பழத்தின் சுவையை மணத்தில் தெரியும் என்பதனைப்போல எங்கள் அத்தாரின் கடந்த கால வாழ்வின் பரிணாமங்களையெல்லாம் இவர் பாரிஸில் வாழ்ந்த இந்த பதினேழு ஆண்டு காலத்தில் நாங்கள் முழுமையாக புரிந்துகொண்டோம்.

முகத்தார் யேசுரட்ணம் என்றால் இவ் வையகத்தில் எந்த மூலை முடுக்கில் வாழ்கின்ற தமிழ் நெஞ்சங்களுக்கும் தெரியாமல் இருக்க முடியாது. அந்த அளவிற்கு அவர் உலகறிந்த ஈழத்தின் உத்தம கலைஞர். இவருக்கும் எனக்கும் உள்ள உறவுகள் எழுத்தில் அடக்கிவிட முடியாதவை.

உங்களின் நாடகங்களை வானொலியில் கேட்கும்போது தென்றல் காற்றிற்கு தமிழ் தாலாட்டு சொல்லிக்கொடுப்பதைப்போல் இருக்கும். அதையே மேடையில் பார்க்கும்போது "பூக்கடைகள் எல்லாம் நந்தவனமாக காட்சியளிப்பது" போல் இருக்கும் இப்பொழுது மேடைகள் எல்லாம் வெறிச்சோடிக் கிடக்கின்றது. வானொலிகள் எல்லாம் அழுதுகொண்டே உங்களது குரலை ஒலிபரப்புகின்றன.

நீங்கள் "விவசாய மன்னர்" என்ற பட்டத்தையும் சுமந்திருக்கின்றீர்கள். எப்படி? இதமான எங்கள் யாழ்ப்பாணத்துத் தமிழை தரமான கலைக்கு உரமாக்கும் தோட்டக்காரனைப்போல இலங்கை முழுவதும் கலைப்பயிர் வளர்த்தீர்களே அதற்காககூட இருக்கலாம். இன்று இந்தப் பயிர்களெல்லாம் உம் பிரிவால் தலை வாடி மண்ணுக்கு வணக்கம் செலுத்துகின்றனவாம்.

நீங்கள் இயக்கி A.B.C. தமிழ் வானொலியில் தொடர்ந்து ஒலிபரப்பாகிய "முகத்தார் வீட்டில் அப்புக்குட்டி" "கின்னஸ் சாதனை" போன்ற நாடகங்களிலும், மேலும் பல மேடை நாடகங்களிலும் இவருடன் இணைந்து நடித்ததை நான் மிகவும் பெருமையாகவே கருகின்றேன்.

இவர் ஒரு முழுமையான மனிதம் நிறைந்த மனிதர். அதாவது மனிதர்களிடத்தில் இருக்கும் பொறாமை, தற்புகழ்ச்சி, நான்தான் சிறந்தவன், என்னால்த்தான் முடியும், என்பன போன்ற இறுமாப்புக்களோ அல்லது மற்றவர்களை தூற்றிப் பேசுகின்ற தரமற்ற செயல்களோ கடுகளவும் இல்லாது எல்லோருடனும் அன்பாகவும், அமைதியாகவும் பேசும் ஒரு சிறந்த மனிதர். அதனால்த்தான் இப்படியான பெரும் குணம் உள்ள இந்த அரிய மனிதரை நான் தெய்வத்தைப் போல நேசிக்கின்றேன்.

ஈழத்து மக்களுடன், ஈழத்துக் கலைஞர்களும் இப்படியானதொரு தெய்வத்தை இழந்து தவிக்கின்ற இவ்வேளையில். அவர்களுடன் இணைந்து இந்த அரிய மனிதரை இழந்து தவிக்கும் இவரின் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்கும் மற்றும் உறவினர்களுக்கும் எனது குடும்பத்தாரின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

(கப்ரன்) அருணகிரி - குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகத்தார் ஜேசுரட்ணம்

காலஞ்சென்ற முகத்தார் யேசுரட்ணம் அவர்களை எனக்கு பல வருடங்களாக தெரியும். அவர் ஒரு சமூகசேவையாளர். சிறந்த நடிகர். இந்தியாவில் தமிழ்நாட்டில் வாழ்ந்துகொண்டிருந்த புலம்பெயர்ந்த எமது மக்கள் மத்தியில் நல்ல பணி செய்தவர்.

ஒரு தடவை (1996ம் ஆண்டு) பிரான்ஸ் நாட்டில் மிகவும் கடுமையான அறுவைச் சிகிச்சைக்கு அவர் உட்படுத்தப்பட்டு சுகயீனமுற்றிருந்த வேளையில், அவரைப் பார்க்க மருத்துவமனைக்கு நான் சென்றிருந்தேன். அவர் அங்கே பல நாட்களாக சுய அறிவை இழந்த நிலையில் இருந்தார். அந்த வேளையில் அவரை கவனித்துக்கொண்டிருந்த மருத்துவர் தனக்கு இவரை காப்பாற்ற முடியாது என்று கூறினார்.

அந்த நேரத்தில் பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்துகொண்டிருந்த இலங்கை தமிழ் கத்தோலிக்கர்களுக்கு ஆன்மீக பணியாளாராக நான் இருந்தேன். ஆகவே அவருக்கு உடனடியாக நோயில்பூசுதல் என்னும் திருவருட்சாதனத்தை கொடுப்பதற்கு ஆயத்தம் செய்தேன்.

1996ம் ஆண்டு நாங்கள் ஏற்பாடு செய்திருந்த புனித நகர் ஜெருசலேம் யாத்திரையில் இவருடைய மூத்த மகள் கலா லோகநாதன் எங்களுடன் பங்கெடுத்தார்கள். அந்த புனித யாத்திரையின்போது இறைமகன் இயேசு பிறந்த ஊராகிய பெத்தலேகெமை நாங்கள் தரிசித்தோம். இடையர்களுக்கு வானதூதர் காட்சி கொடுத்த அந்த குகையில் எங்களுக்கு ஓர் அற்புதமான திருச்சிலுவையை ஒஸ்ரியா நாட்டிலிருந்து வந்திருந்த ஒரு குழுவினர் நன்கொடையாக தந்தனர். அந்த சிலுவையை நாங்கள் மறுநாள் கல்வாரி மலைக்கு சிலுவைப்பாதையின்போது எடுத்துச் சென்று அங்கிருக்கும் திருப்பலி பீடத்தில் அதை வைத்து திருப்பலியும் நிறைவேற்றினோம். என்னோடு இஸ்ராயேலுக்கு யாத்திரையாக வந்தவர்களுக்கு இந்த சிலுவையைப்பற்றி நன்கு தெரியும்.

மறைந்த முகத்தார் யேசுரட்ணம் அவர்களுக்கு நான் நோயில்பூசுதல் கொடுக்கச்சென்றபோது இந்த சிலுவையையும் என்னோடு எடுத்துச்சென்றேன். நோயில்பூசுதல் கொடுத்து முடிந்தபின்பு இந்த திருச்சிலுவையால் அவரை ஆசீர்வதித்தேன்.

இரண்டு மாதங்களுக்குபிறகு எனக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. யேசுரட்ணம் அவர்கள்தான் என்னோடு பேசினார்கள். அவர் எனக்கு ஏழு பக்கங்கள் கொண்ட ஒரு கடிதமும் எழுதியிருந்தார்கள். அதில் தன்னுடைய புதுமையான குணமாக்குதலையும் திருச்சிலுவையினால் ஆசீர்வதித்தபோது தனக்குள் எற்பட்ட உள்ளுணர்வையும் விளக்கமாக எழுதியிருந்தார். ஆம். நான் அவரை சந்தித்தபோது, அவர் அந்த சிலுவையின் மகத்துவத்தைபற்றி தன்னுடைய அனுபவத்தை என்னுடன் பகிர்ந்துகொண்டார்.

எம்மைவிட்டு பிரிந்துசென்ற முகத்தார் யேசுரட்ணம் அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் நித்திய பேரின்பத்தை அருளவேண்டுமென எனது செபத்தில் மன்றாடுகின்றேன்.

அருட்தந்தை சிமியோன் செபமாலை துரம் அ.ம.தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# «MUHATHTHAR»

## continues to live...

Jesuratnam – We grew up together for over seventy years. He was my neighbour at Ilavalai. Let me

Take you back to some memories of him. I knew Jesu was a play boy taking life too easy. I never knew him as one who would sit at his desk to study. When he was to take up his Class II exam in clerical service, I had to buy the necessary books for him and go all the way from Colombo to Ilavalai every week-end to make him study. I helped him in Accounts. When I got the message that Jesu got the

Highest marks in Accounts, I was surprised; and that was Jesu! When Jesu came over to Colombo on transfer, he had served in several departments and once expressed his desire to work with me. I was hesitant but still helped him to get him to where I was. He, being the most senior officer in his grade in my Department, I kept him as my ' Financial Assistant' and in my room too, and I was always on pins. I had to give him responsibilities hesitantly, but Jesu never let me down. He was always at his desk and discharged his responsibilities to complete satisfaction. When he left office at 4.30 at the end of work,

he was different- he was a play boy; he was an actor; he was a dramatist; he was a playwright and all what he was till he answered his call.

When he was at Ilavalai, he took great interest in the upliftment of the village. He was responsible for setting up a library and for inviting the Canadian Ambassador for the opening ceremony.

It was a great privilege for me to have had him at my home as my guest when he was invited to Canada to be the Chief Guest at the St. Henry's Old Students' Association Annual General Meeting. But, two years later, when I went to France to meet him, I lost everything in me when I saw him in hospital-totally blind- a medical misadventure. Yet, Jesu was a happy boy. He recognized my voice and called me the way he called me always –» Ema – dey machchan» and this brought back all my seventy years of memory and I was in tears. He never mentioned about his loss of sight. He looked happy. He was happy as always. He was inquiring about the College and its progress. He held important positions in the O.B.A. Ilavalai and Colombo. He founded the O.B.A. branch in France and was its President and later its Patron.

All expected him to recover and get back is sight. But God willed otherwise. Jesu has gone to receive his reward but 'Muhaththar' continues to live in our memory. May his soul rest in peace.

- S.M.J
Emmanuel
Canada





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்லூரி அன்னையின் பெருமைக்காய் உழைத்த கலைஞன் முகத்தார் யேசுரட்ணம்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்கணமாகி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் ஒன்றாகி விட்ட மகாமேதை, இளவாலை மண்ணின் மைந்தன், அமரர் முகத்தார் யேசுரட்ணம் இன்று யாவர் மனதிலும் இடம் பிடித்த ஓர் அற்புதக் கலைஞன்.

அமரர் ஈழத்துக் கலை ஆலமரத்தின் ஓர் பெருங்கிளை. வானொலி நாடகத்தின் மூலமாக இலங்கையில் மட்டுமல்ல, உலகில் எந்த இடத்திலும் பேசப்பட்டு வரும், எவராலும் மறக்க முடியாத ஓர் அபூர்வப் பிறவி என்றே குறிப்பிடலாம். கலைஞன் என்ற பார்வையில் மட்டுமல்ல, மனித நேயம், நேர்மை, நீதி, நிதானம் யாவற்றுக்கும் பிறப்பிடம். தன்னை உருக்கி மற்றையோருக்கு உதவுவதன் மூலம் ஆத்மீகத் திருப்தி பெறும் ஆளுமைக் கோலம் பூண்டவர்.

இவ்வாறெல்லாம் பேசப்படக் கூடிய அமரர் அவர்களது சேவைக்கும், எமது கல்லூரி அன்னையின் வளர்ச்சிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. நூற்றாண்டு விழாக்கண்ட பெருமை உடைய இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியின் வளர்ச்சிக்காக நிதி உதவியும், சரீர உதவியும் வழங்கிய மாபெரும் வள்ளல். வானொலி நாடகத்தில் நகைச்சுவை விருந்தளித்து உள்ளங்களைக் கொள்ளை கொண்டது போன்று எம் கல்லூரி சார்ந்த மலர் வெளியீடுகளில் தன் கலைத்திறனை வடித்துக்காட்டவும் தவறியதில்லை. சிறந்த பேச்சாற்றல், நடிப்பாற்றல் என்பவற்றோடு, எழுத்தாற்றலும் வாய்ந்தவர். நகைச் சுவை வாய்ந்த அன்போடு கூடிய வார்த்தைகளால் அளவளாவும் என் ஆத்ம நண்பனாக விளங்கினார் என்று கூறும் போது என் கண்கள் பனிப்படைகின்றன.

இளவாலை மண்ணிற் பிறந்து எம் கல்லூரியின் பழைய மாணவராக இருந்ததனாலும், கல்லூரியை அயல் வீடாகக் கொண்டதனாலும் என்னவோ? கல்லூரி வளர்ச்சி பெற வேண்டும், கல்லூரியின் புகழ் எட்டுத்திக்கும் பரவ வேண்டும் என்பதில் கவனம் மிக்கவராக இருந்த ஒரு பெரியோன். பிரான்ஸ் நாட்டில் எம் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் மூலம் செயற்திறன் மிக்க சேவைகளை எம் கல்லூரிக்காய் வழங்கி வந்தவர். எம் கல்லூரி அன்னையின் வளர்ச்சிப் பணியில் சிறந்த பதிவுக்குரியவர்.

அமரர் அவர்கள் இன்று எம்மத்தியில் இல்லை என்ற துன்பம் எம்மை வாட்டுகின்றது. எனினும் கலைஞன் ஒரு போதும் இறப்பதில்லை. அவன் புகழ் கலை உலகம் இருக்கும் வரை மடிவதில்லை. என்றும் அமரர் முகத்தார் யேசுரட்ணம் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டே இருப்பார். அவர் சேவை என்றென்றும் எம்மால் நினைவு கூரப்படும். அமரரது வழித் தோன்றல்களும் அவர் புகழ் கூறிட வாழ வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி அமரர் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.



அருட்திரு.யோ. அ. யேசுதாஸ்,
அதிபர்,
யா/ புனித கென்றியரசர் கல்லூரி,
இளவாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Revd.Dr. Justin B. Gnanapragasam**
BTh (Pune) MA(Hull)Ph.D in Ed
(Southampton)
VICAR GENERAL

Bishop's House
Jaffna
Sri Lanka

Tel: 021-222-2161(O)
021-222-8518 (P)

Email: frjustin@e-mnet.com



17th December 2010


It is with great sadness that I learnt of the death of a great Old Boy of St.Henry's College, Illavalai, Mr.S.Jesuratnam, popularly known as Muhathar. I came to know him from 1976, ever since I stepped into Illavalai, and our relationship has grown, over the years, very steadily. I knew that he was ailing for sometime but he always found time to ring me up and inquire after my health and the work in the diocese.

When I moved to St.Patrick's College in 2002, Mr.Jesuratnam was shocked that it had happened too quickly. But he always had the diocese of Jaffna in his heart and was able to tell me that he was proud that a Henrican (myself!) was called upon to do the rescue work. That's the humorous and generous side of Mr. Jesuratnam.

Mr. Jesuratnam was a tower of strength to St.Henry's College. Be it as a member of the Old Boys' Association of Colombo or France, he was interested in the development of the College and always supported the Rectors. As President of France OBA he was instrumental in collecting lots of funds for the progress of the College, especially when the school was functioning as a displaced school in Manipay. He was always very amenable and had a pleasant character that helped him to be a mediator in all disputes.

As the father of his family he showed tremendous love and concern for each child and was very understanding of their problems. He loved his wife and children and loved the College and the Church with the same strength. We, the Henricians, will miss his bright smile and advice. May we commend him to the Lord and pray for the children and relatives of Mr. Jesuratnam.
«Well done good and faithful servant, enter into the joy of the Lord».

**Revd. Dr. Justin B Gnanapragasam**
Vicar General – Jaffna Diocese
Rector Emeritus – St.Henry's College, Illavalai.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்த குரலுக்குரிய மகோன்னதக் கலைஞன் முகத்தார் எஸ். ஜேசுரட்ணம் நிம்மதியாகத் தூங்குகிறார்

ஒரு நிலையில்லாத வாழ்வினை நிலையானது என எண்ணி அதனோடு நாளாந்தம் பின்னிப்பிணைந்து போராடிக்கொண்டிருக்கிற மனித மனங்களே என் எண்ணத்தை விரிவுபடுத்திப் பார்க்கிறேன், மகா கவியின் கூற்று என்னை எங்கோ கொண்டு சென்று சேர்க்கிறது. "மரணம் என்பது மனதை நிலைகுலையச் செய்வதுதான். உணர்ச்சி பூர்வமாக உலகைப் பார்ப்பவர்களுக்கு ஒரு பூச்சியின் தற்செயல் சாவு கூட ஓர் இழப்புத்தான்". அந்த மகாகவியின் வார்த்தையை மீண்டும் மீண்டும் மீட்டிப்பார்க்கிறேன். ஒரு பூச்சிக்கே அந்த நிலை என்றால், என்னோடு கலையுலகில் பிரகாசித்த ஒரு கலைஞனின் இழப்பு எத்தனை தூரம் சந்தோசத்தை இழக்கச் செய்திருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்கிறேன்.

பிரான்ஸிலிருந்து தொலைபேசியில் அழைத்த தம்பி ராஜென் "அக்கா உங்களுக்குச் செய்தி தெரியுமா" என்று கேட்டார். நாள்தோறும் உழைத்துக் களைத்து சற்று நேரம் கண்ணயரலாம் என்று இருந்த நிலையில் தம்பி ராஜெனின் அந்தத் தகவல் என்னை நிலை குலையச் செய்துவிட்டது.

"எந்த மனிதனின் மரணமும் எமது மனித உணர்வுகளைச் சிறிதளவேனும் குன்றச் செய்கிறது" என்பதும் ஓர் அறிஞனின் கூற்றுத்தான்.

ஒருமனிதனின் இறப்பு என்பது அந்த மனிதனின் பௌதிக இழப்பு மாத்திரமல்ல, இறப்பு என்ற சொல் இற என்ற சொல்லின் அடியாகவும் வருவது, இற்றுப்போனதென்பது அதன் கருத்து. இப்படி மரணத்தைப்பற்றி ஒரு விளக்கத்தைத்தந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களை நினைத்துப்பார்க்கிறேன்.

எத்தனை பெரிய தத்துவங்களை எல்லாம் எத்தனையோ பேர் சொல்லியிருந்தாலும் கூட, இறப்பு என்கின்றது சோகம் தாங்க முடியாத ஒன்று. இப்படியெல்லாம் சொல்லி வைப்பது வேறு எதற்கும் அல்ல, கலையுலகைவிட்டு நிரந்தரமாக பிரிந்து நிற்கின்ற ஓர் ஆன்மாவின் நினைவலைகள் வந்து மோதி நிற்கின்றன. இந்த சோகம் ஆற்ற முடியாதது, தாங்க முடியாதது. காரணம் என்னவென்றால், ராஜெனின் அழைப்பில் நான் ஐரோப்பிய கலைச்சுற்றுலா மேற்கொண்ட போது நான் தங்கியிருந்த இடம் தேடிவந்து என்னை ஆரத்தழுவி சொந்தம் கொண்டாடியதை நினைத்துப்பார்க்கிறேன்.

எப்படி உங்களால் இந்த கலையுலகை விட்டுப் பிரிய முடிந்தது? எப்படி உங்களுடன் சேர்ந்து பணியாற்றிய கலையுலக நண்பர்களை மறந்து போனீர்கள்? கேள்வி கேள்வியாக என்னுள் பல கேள்விகள் எழுந்து நிற்கின்றன.

எது எப்படியாயினும், பிறப்பு என்று ஒன்று இருந்தால் நிச்சயமாக இறப்பு என்று ஒன்று இருந்துதான் ஆகும். இறைவனின் ஆணையை நாம் மீற முடியாது. ம்..... என்ன செய்வது?

உறங்க ஜேசுவுக்கு நேரம் வந்துவிட்டது. அதனால் ஜேசு படுக்கைக்குச் சென்றிருக்கிறான். குழப்பிவிடாதீர்கள் அவன் நிம்மதியாகத் தூங்கட்டும். ஜேசு உறங்குகிறான் என்று நினைத்துக் கொள்வோம். தயவு செய்து எழுப்பிவிடாதீர்கள். அவன் நிம்மதியான நித்திரையைக்கண்ட நாள்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவை.

இலங்கை ரசிகர்களையெல்லாம் மேடை, வானொலி மூலமாகக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்த அந்த குரலுக்குரிய மகோன்னதக் கலைஞன் வேறு யாருமல்ல. முகத்தார் எஸ்.ஜேசுரட்ணம் அவர்கள் தான்.

ஐயா நீண்ட நெடுந்துயில். நிம்மதியாகத் தூங்கும்.

அவரது குடும்பத்தாருக்கு எனது குடும்பத்தார் சார்பிலும், இலங்கைக் கலைத்துறையினர் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்கள்.

**- ராஜேஸ்வரி சண்முகம்**
சிரேஸ்ட ஒலிபரப்பாளர் இலங்கை வானொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்
இளவாலை அமுதுப் புலவர்
போட்ட வேலியில்
நல்லோர் மதிக்கும் நாடகமணி

# முகத்தார் எஸ். ஜேசுரட்ணம்

எல்லார் வாயிலும் நல்லதோர் நடிகனென நயம்படப் பேசப்படுகிறவர் முகத்தார். வருவோர்கள் வாழ்த்துவதும் போவோர்கள் புகழுவதும் அங்கே கேட்கலாம்.

இலங்கை வானொலியைப்பற்றி இரண்டு மூன்று வரிகள் படித்தவர்கள்கூட முகத்தாரைப்பற்றி அறியவில்லையென்றால் அது அதிசயம்தான்.

ஒரு நாடகம் இலங்கை வானொலியில் 585 வாரங்கள் தொடர்ந்து நடைபெற்றதென்றால் அது முகத்தார் யேசுரட்ணம் அவர்கள் தானே தயாரித்து நடித்த "முகத்தார் வீடு" தான். வானொலித் துறையில் இதை ஒரு சாதனை என்று கூறலாம்.

"ஆயரின் மெழுகுவர்த்தி" என்ற ஆங்கில நாடகத்தை இளவாலை கென்றியரசர் கல்லூரியில் நடித்தார். அந்த அபூர்வமான நாடகத்தில் கள்வனுக்கு நடித்து முடித்தபோது கண்கள் கூட கைதட்டின

அரசாங்கத்தின் உச்சக் கிளைகளில் ஏறியிருந்தபோதும் ஒலிபரப்புத் துறையில் ஓயாமல் ஈடுபட்டு வந்தார். எனது "சுதந்திர தாகம்" என்ற நாடகத்தையும் நடித்தார்.

இவருடைய தடித்த குரல், முகபாவம், மீசை, வசீகரமான சிரிப்பு, யாழ்ப்பாணத் தமிழ், அதற்கேற்ற உச்சரிப்பு எல்லாம் அவரை உச்சிப்படிகளில் ஏற்றிவிட்டன.

யான்தான் இளமையில் ஊக்கமும், ஆக்கமும் தந்ததாக அவர் எழுதியிருந்தாலும் நடிப்பு அவரோடு கூடப்பிறந்த பிறவி. இவருடைய தாயார் ஒரு ஆசிரியை செந்தாமரையால் முகம் கழுவிய தோற்றமுள்ளவர். தேனை நாவில் பூசிக்கொண்டு பேசும் சீதை.
மாமி என்று மனையாள் அழைக்கும்போது அந்தப் பாசக் குரலில் எள்ளுப்பாகின் இனிமை தெரியும். வெள்ளித்தட்டில் நெல்லுச்சோறு போட்டு அள்ளித் தீத்தி வளர்த்த செல்லப்பிள்ளை

சண்டியன் சின்னத்தம்பி, லண்டன் மாப்பிள்ளை, மாடிவீட்டு மருக்கொழுந்து, போச்சுடி பத்தாயிரம், என்று பல பிரபலமான நாடகங்களால் கொடிகட்டியவர். இவருடைய நாடகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை வேளைகளில் வீடுகளில் மாத்திரமின்றி தெருவிலும், வயல்வெளிகளிலும், இலை குழைகளிலும்கூடக் கேட்டது.

இவருடைய வசனங்களை பனை வட்டுகள்கூட பாராயணம் செய்தது. நாடகங்கள் பூவில் நெய்த சேலைகள். விரித்தால் பூஞ்சோலைகள். வசனங்களில் நகைச்சுவை ததும்பும். குடும்பங்களில் அவை அடுப்படி போல கிட்டடியில் இருந்து சுவை நீட்டும்.

முகத்தார் இலங்கையில் "வாடைக்காற்று" என்னும் திரைப்படத்தில் நடித்து ஜனாதிபதி விருதையும் பெற்றவர். இப்போது பாரிஸ் நகரில் வாழ்ந்து வருகின்றார்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனங்கள், வானொலி நிலையங்கள் என்பனவற்றில் இவரின் கைவரிசை தெரிகின்றது. இளவாலை மக்கள் சார்ந்த கூட்டங்களில் பேசும்போது என்னையும் சேர்த்துக் கொள்ளாவிட்டால் அவருக்குப் பத்தியப்படாது. தனது பேச்சுக்கும், எழுத்துக்கும் உப்புப் போட்டது போல கதைக்காகச் சேர்த்துகொள்வார்.

அடியேன் பாரிஸ் நகரத்துக்கு எந்த விழாவிற்குப் போனாலும் அங்கே வண்ணை தெய்வம் என்ற முத்தமிழ் அறிஞரையும், தம்பி முகத்தார் யேசுரட்ணம் அவர்களையும் காணலாம்.

எனது நூல்களிலும், எழுத்திலும், பேச்சிலும் உண்மையான ரசிகத்தன்மையும், அன்பும் பெருமதிப்பும் வைத்துக்கொண்டு என்னை ஊக்கப்படுத்தும் பேரன்பர்களில் ஒருவராய் இருப்பவர்களில் முகத்தாரும் ஒருவர்.

புலம் பெயர்ந்த நடிகர்கள் முகத்தாரில் நகைச்சுவையின் நாடி நாளங்கள் ஓடுவதைக்கண்டு ஆராதிக்கின்றார்கள்.

"கலைமாமணி", "கலைப்பூபதி" என்று பல பட்டங்களைக் கொடுத்து கலையுலகம் இவரை பாராட்டியுள்ளது.

வாழ்க முகத்தார்.

2006ல் அமரர் இளவாலை அமுது அவர்கள் எழுதிய "இந்த வேலிக்கு கதியால் போட்டவர்கள்" என்னும் நூலில் 174ம் பக்கத்தில் முகத்தார் யேசுரட்ணம் அவர்கள் பற்றிய கட்டுரை இது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேஜர் சுந்தரராஜன் பாராட்டிய "பொன்னுக்கிழவன்" ஜேசுரட்ணம் கலையுலகிலிருந்து விடைபெற்றார்

அன்பு முகத்தார், பண்பு முகத்தார், பாசமுகத்தார், நம் நேசத்துக்குரிய முகத்தார் இன்று நம்மிடையே இல்லை.

ஒருவருடைய நல்ல பக்கத்தை மட்டுமே பார்க்கும் காலம் அவரது மரணத்தை அடுத்து வரும் என்பது உண்மை. ஆனால், அன்புச்சகோதரர் ஜேசுரட்ணம் அவர்களைப்பற்றி நான் அறிந்த பக்கங்கள் எல்லாம் அவரது நற்பண்புகளைப் பறைசாற்றும் பக்கங்களே அன்றி வேறில்லை.

ஓர் அறிவிப்பாளராக 1967ம் ஆண்டு அறிமுகமாவதற்கு முன்னரேயே நான் வானொலி நாடகக் கலைஞனாக நேயர்களுக்கு அறிமுகமானவன். அப்படிப்பட்ட எனக்கே அவரும் ஒரு சக நாடகக் கலைஞனாகவே அறிமுகமானார். ஆம், 1970களின் தொடக்கத்திலேயே அவரை வானொலி நிலையத்தில் சந்தித்தேன். பொதுவாக எந்த ஒரு கலைஞனுக்குள்ளும் இருக்கும், அல்லது இருக்கவேண்டிய வித்துவச்செருக்கு அவரிடமும் இருந்தது. ஆனால், அதனை பக்குவத்தோடு காட்டும் பண்பும் கூடவே இருந்தது என்பதை ஆரம்பத்திலேயே கண்டுகொண்டேன்.

திரைப்படங்களில் நடிப்பவர்களுக்கு முதல் திரைப்படத்தின் வெற்றியைத்தொடர்ந்து அத்திரைப்படத்தின் பெயரும் அவர்களுடைய பெயர்களுடன் இணைந்து கொள்வதுபோல் "முகத்தார் வீடு" வானொலி நாடகத்தின் கருப்பொருளாய் அமைந்த பாத்திரத்தின் பெயரால் அறியப்பட்டவராகத் திகழ்ந்தவர். அந்தளவு எந்த ஒரு பாத்திரத்தோடும் ஒன்றிப்போகும் தன்மையும், இயல்பான நடிப்புத்திறமையும் அவரிடம் குடிகொண்டிருந்தது.

ஒரு சுயம்புவாகத் தன்னை வளர்த்துக்கொண்டவர். வெறுமனே ஒரு நடிகராக மட்டுமன்றி சிறந்த படைப்பாற்றல் கொண்ட எழுத்தாளராகவும் தனது கலை ஆளுமையைக்காட்டியவர். அவர் எழுதிய வானொலி நாடகங்கள் சிலவற்றை இலங்கை வானொலி தேசிய சேவைக்காக நெறிப்படுத்தித்தயாரிக்கும் பாக்கியமும் எனக்குக் கிடைத்துள்ளது. அவற்றுள் அவர் எழுதிய "யூலியசீசர்" வரலாற்று நாடகம் இன்னமும் இவர் பெயர் சொல்லும் சாட்சியாக, ஒலி நாடாவாக வானொலி நிலையத்தில் இருக்கிறது.

பலரும் அவர் எழுதிய வட்டார வழக்குச் சமூக நாடகங்களைத்தான் அறிவார்கள். ஆனால், வரலாற்று நாடகங்களில் அவர் எழுதிய அந்தச்சொல்லாட்சி ஒரு தயாரிப்பாளனாக என்னை அன்று பிரமிக்க வைத்தது.

வானொலி, மேடை மட்டுமன்றி திரைப்படங்களிலும் தன் பங்களிப்பை வழங்கியவர். "வாடைக்காற்று" திரைப்படத்தில் அவர் அந்தப் பாத்திரமாகவே வாழ்ந்து நடித்த திறனை மேஜர் சுந்தரராஜன் போன்ற புகழ் பெற்ற கலைஞர்களே பார்த்துப்பாராட்டியபோது நான் உடன் இருந்து மகிழ்ந்த நாட்களையும் நெஞ்சம் மறக்கவில்லை.

"நில அளவைத்திணைக்களம்" "கல்வித்திணைக்களம்" "வன இலாகா" "சந்தைப்படுத்தல் திணைக்களம்" எனப் பல அரச நிறுவனங்களில் பணிபுரிந்து கொண்டே எஞ்சிய தன் வாழ்வின் பொன்னான பொழுதுகளை கலைக்காகவும், தமிழுக்காகவும் அர்ப்பணித்து வாழ்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது மண்ணில் சூழ்ந்த இருள்மேகம் எல்லோரையும் போல் அவரையும் புலம் பெயர்ந்து அந்நிய மண்ணில் வாழ நிர்ப்பந்தித்தது. ஆயினும், அவரது கலைத்தாகம் மறையாமல், படைப்பாற்றல் திறமையோடு பல பங்களிப்புக்களை அங்கும் தொடர்ந்தவர்.

முதுமையும் நோயும் சேர்ந்து வந்த போதும்,அவரது மூச்சு கலையுணர்வோடுதான் இறுதிவரை இருந்தது என்பதை அவ்வப்போது சக நண்பர்கள் சொல்லிக்கேட்டிருக்கிறேன். அவரிடமுள்ள தனிச்சிறப்புடைய குண இயல்பு, வயது வித்தியாசமின்றி தனக்குப்பின்னே வந்த தலைமுறையோடும் சம வயதொத்தவராகக் கலகலப்போடு பழகியதுதான். அவருடைய நகைச்சுவை உணர்வு என்றும் எவரையும் புண்படுத்தாத ஒன்று.

அவர் சுடு சொல் பேசி நான் கேட்டதில்லை. புறங்கூறுதலையும் நான் அறிந்ததில்லை. தான் சாதித்தவைகளைப்பற்றி, தன் திறமைகளைப்பற்றி தம்பட்டம் அடிக்கும் தன்மையையும் அவரிடம் நான் கண்டதில்லை.

"வந்தவரெல்லாம் தங்கிவிட்டால் - இந்த மண்ணில் நமக்கு இடமேது?" என்ற பாடல் சொல்லும் நியதிப்படி அவர் நம்மை விட்டுப்பிரிகிறார். நாம் கூட இங்கு நிரந்தரமாகத் தங்கப்போவதில்லை.

சில மதங்கள் சொல்லும் நம்பிக்கையின்படி, என்றோ ஒரு நாள் நாம் மறுமை வடிவில் ஒன்றாய் சந்திப்போம். அதுவரை அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்வோம்.

அவரை இழந்து வாடும் உறவுகளுக்கு நம் அனுதாபங்களைத் தெரிவிப்போம்.

இளவாலை சந்தியாப்பிள்ளை ஜேசுரட்ணம் அவர்களே நீங்கள் ஆற்றிய கலைப்பங்களிப்புக்களுக்காக எமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**-பி.எச்.அப்துல்ஹமீட்**
உலக தமிழ் ஒலிபரப்பாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலைமுத்து முகத்தார்
# கண்மூடும் வேளையிலும்
# கலை என்ன கலையோ



எத்தனை ஜேசுரட்ணம் எங்கள் மத்தியில்?
"முகத்தார்" பாத்திரம் ஏற்றல்லோ முகத்தார் ஜேசுரட்ணம் எமக்கு கிடைத்தார்
வாடைக்காற்றிலும் வாடாத முகம் படைத்த முகத்தார்
தன் பெயர் சொன்னால் தெரியாத யாரென்று
தன் நடிப்புத்திறன் பாத்திரத்தையே
தன் பெயராக விளங்க வாழ்ந்தது சிறப்பு

சிறு சிறு பாத்திரங்கள் திறம் செய் சங்கதிகள்
விறுவிறுப்பான துடிப்பசைகள்
உடல் களைக்காத நடிப்பலைகள் - இனி
உனக்கு வேண்டும் ஓய்வெனலாம்

இவனுக்கு இது இறப்பல்ல!
இருப்பவரை சிந்திக்க விட்டு
படுத்திருந்து பார்த்து ரசிக்கும்
பகிடிக்கான நேரமிது!
மகுடிக்கே பாம்படங்கும் - இவன்
மடிமேலே கலை படுத்துறங்கும்!


இடிமேலே இடி வீழ்ந்தாலும்
இடையிற்தன் நடிப்பு நிறுத்தாத
முடிசூடா கலை மன்னன்
முகத்தார் மூச்சடங்கலாம்
முந்தி இவர் விட்டுச்சென்ற
முத்துக்கள் மின்னல் அடங்காது
மின்னிக் கொண்டே இருக்கும்
எம்மை பின்னிக் கொண்டே சிறக்கும்
மீண்டும் வா காத்திருப்போம்
உன் தோளுக்கு மாலையாக பூத்திருப்போம்

அன்புத் தம்பி
ஈழத்து மெல்லிசை மன்னன்
M.P பரமேஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர் சொல்ல வாழ்ந்த முகத்தார் யேசு!



எல்லா மனிதர்களும் பிறக்கும்போது சாதாரண மனிதர்களாகத்தான் பிறக்கின்றார்கள். மிகச் சிலர்தான் சரித்திரம் படைக்கின்றார்கள். அந்த மிகச் சிலரில் ஒருவராக வாழ்ந்தவர் முகத்தார் அவர்கள்.

எங்களில் பலர் நாம் பிறந்த ஊரை மற்றவர்களுக்கு சொல்லி தெரியவைப்போம். ஆனால் ஊரைச் சொன்வுடனேயே அவரது பெயரையும் நினைவுக்கு வரவைப்பவர்கள் மிக குறைவு. ஆனால் இளவாலை என்றவுடன் அங்கு வாழ்ந்தவர்களின் பெயரையும் சொல்லும்படியாக வாழ்ந்தவர்களில் முகத்தார் அவர்களும் ஒருவர்.

பெயர் என்பது ஒரு மனிதனுக்கு வழங்கப்படுகின்ற அங்கீகாரம். ஆனால் சிலருக்கு சொந்தப் பெயருக்கு முகவரி இல்லாமல் போய் பட்டப்பெயர்களே அங்கீகாரம் பெற்றுவிடுகின்றன் அப்படி பெற்றோர்கள் சூட்டிய யேசுரட்ணம் என்ற செல்லப் பெயரையும் மீறி கலைவாழ்வில் கிடைத்த முகத்தார் என்னும் பெயரைச் சொன்னால்த்தான் இவரைத் தெரிந்து கொள்ள முடியும் என்னும் விதமாக கலைத்துறைக்கு பெருமை சேர்த்து வாழ்ந்தவர் முகத்தார் அவர்கள்.

இவை எல்லாவற்றிகும் மேலாக இவர் எங்கள் நண்பர் என்பதில் பெருமைப்படுகின்றோம் என்றும், இவரோடு இணைந்து செயல்பட்டதில் பெருமைப்பட்டுக் கொள்கின்றோம் என்றும் எல்லோரையும் இணைத்துச் சொல்லிக்கொள்வதில்லை. அப்படியாக வாழ்ந்தவர்கள் மிகச் சிலராகத்தான் இருப்பார்கள். முகத்தாருடன் இணைந்து நடித்ததில் நாங்களும் பெருமைப்படுகின்றோம் என்று சொல்லும்படியாக வாழ்ந்த முகத்தார் அவர்கள் பெருமைக்குரியவர்.

இவரின் பிள்ளைகள் தாங்கள் முகத்தாரின் பிள்ளைகள் என்பதில் நிச்சயம் பெருமைப்பட்டுக் கொள்வார்கள்.

மறைந்தும் மறையாதவர்களாக வாழ்பவர்கள் மிகச் சிலரே.
அந்த வரிசையில் எங்கள் முகத்தாரும் இணைந்துவிட்டார்
வாழ்க அவர் புகழ் !

**அன்பன்**
**பெஞ்சமின்-இமானுவல்**



# நிறைவான வாழ்வு! நியாயமான மரணம்!

நாம் எப்போது பிறந்தோமோ அப்போது இருந்தே நாம் பயணத்தை தொடங்குகின்றோம். அது மரணத்தை நோக்கியதாம்!

இப்போதும் இறக்கலாம்! எப்போதும் இறக்கலாம்! இறப்பிற்கு காலமில்லை, அது மாறிடப் போவதுமில்லை

பூவாகி, காயாகி, கனிந்து வருவதும். பின் பழம் மரத்தில் இருந்து வீழ்வதும்தான் நியதி! அதில் ஏன் என்ற கேள்விக்கு இடமே இல்லை.

பிறந்து வருவதும், இறந்து மறைவதும் ஆண்டவன் சித்தம்! அதிலும் ஏன் என்ற கேள்விக்கு இடமே இல்லை!

பிறப்பை மகிழ்வோடு ஏற்றுக்கொள்கின்ற நாம் இறப்பில் மட்டும் சோகப்பட்டுக் கொள்கின்றோம். இது என்ன நியதி?

ஐயா ! நீங்கள் நிறைவான வாழ்வை வாழ்ந்து மரணித்ததால் உங்கள் மரணம் நியாயமானது.

ஆதலால் உங்களின் அடுத்த வாழ்வான வாழ்வு சொர்க்கத்தில் அமைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

என்றும் உங்கள் மரியாதைக்குரிய

**கல்லாறு -சதீஸ்**
சுவீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகத்தார் என்றொரு மனிதர்

சில மாதங்களுக்கு முன்பு முகத்தார் திரு. யேசு றட்ணம் அவர்களை சந்தித்தபோது, அவர் இறந்துவிடக்கூடாதா என்று என் மனசு குரூரமாக இரங்கியது. அவரது நிலை அப்படி இருந்தது. தனிமை, கண் பார்வையில்லை, தனது பாசமிக்க மனைவியும் இழந்திருந்த நிலை! அவரைப் பார்த்தபோது எனக்கு அப்படித்தான்தோன்றியது. மனதார அப்படித்தான் வேண்டினேன்.

27.11.2010 அதிகாலையில் அவர் இறந்த செய்தி வந்தபோதும் நான் அதிர்ச்சியடையவில்லை. மனதுக்குள் ஓர் திருப்தி. கேட்ட செய்தியோடு குளிக்கப்போனேன். நீர் சிதறல்களோடு முகத்தார் ஐயா பற்றி என் நினைவுகளும் சிதறின. நான் கண்ணீரில் நனைந்தேன். எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

எமது வாழ்க்கையில் மனிதர்கள் என்று சிலரைத்தான் எங்களால் அடையாளப்படுத்தமுடிகிறது. அந்த விரல்விட்டு எண்ணக்கூடிய மனிதர்களுள் முகத்தார் அய்யா அவர்களும் எனக்குள் ஒருவராகிப்போகிறார்.

பாசத்தை வடித்தெடுத்த மனிதராக, பண்புமிக்கவராக, கலைஞராக எம்முன்விரிகிறார். முகத்தார் ஜேசு றட்ணம் அவர்கள் எமக்கெல்லாம் ஓர் பாடப்புத்தகம். அவரிடம் நாம் கற்றுக்கொள்ள நிறைய விடயங்கள் இருக்கின்றன.

எங்கே எப்படி உறவாடுவது? சகமனிதர்களுடன் உறவைப்பேணுவது எப்படி?, சகமனிதர்கள் மனம்நோகாது பழகுவது எப்படி?, போட்டி, பொறாமை விட்டொழிந்து வாழ்வது எப்படி?, பாசத்தை பங்குபோடுவது எப்படி? போன்ற ஆழமான விடயங்களையெல்லாம் அவரது பண்பிலிருந்து நாம் ஆய்தறிந்து கற்றுகொள்ளவேண்டியிருக்கிறது. அறுபது ஆண்டுகளுக்கு மேலாக கலையுலகில் சஞ்சரித்திருக்கிறார். ஒரு எதிரியையாவது சம்பாதித்திருக்கிறாரா? மலைப்பாகத்தான் இருக்கிறது? எப்படி அவரால் முடிந்தது. சின்னச்சின்ன விடயங்களுக்கெல்லாம் சண்டைபோட்டு, மிடுக்காய் விமர்சனம் செய்து, தேவையற்று நெஞ்சை நிமிர்த்தி பின், கூனிக்குறுகிநிற்கும் நாங்கள் எங்கே? முகத்தார் அய்யா எங்கே? இவ்வளவுக்கும் தன் கடைசிக்காலம் வரை சும்மா சோம்பிக்கிடந்தவருமில்லை. கடைசிவரை கலையுலகில் சஞ்சரித்துக்கொண்டே இருந்தவர்.

**எங்கே அய்யா இந்த வித்தையைக் கற்றுக்கொண்டீர்கள்?**
**எங்களுக்கும் கொஞ்சம் சொல்லித் தந்திருக்கக்கூடாதா?**

முகத்தார் அய்யா அவர்களின் கலைவாழ்வில் எனக்கும்ஓர் சிறு பங்குண்டு என்பதில் பெருமைதான். அவருடன் இணைந்து பணியாற்றியதில் அவரிடமிருக்கக்கூடிய கலைநுணுக்கங்களை அறியும் சந்தர்ப்பம் கிட்டியது. தாகம் வீடியோ குறுந்திரைப்படத்தில் அவரிடமுள்ள ஆளுமையை வெளிக்கொணர முயன்றேன். அவரது அபாரமான ஆளுமையையும், கலைநேர்த்தியையும் விபரிக்கப்போய் அது என்னைப்பற்றிய விளம்பரமாகவும் முடியலாம் என்ற அச்சத்தில் தவிர்த்துக்கொள்கிறேன். ஈழத்துக்கலைப்பரப்பில் அவரது கலைஆளுமை தவிர்க்கமுடியாத பதிவு என்பதில் ஐயமில்லை.

பதினைந்து வருடங்களுக்கு முன் முகத்தார்அய்யா இந்தியாபோய் வந்தவேளை எனக்கு ஒரு சாரமும், சேர்ட்டும் அன்புப்பரிசாக தந்திருந்தார். இதுபோல பலரோடும் அவர் தன் அன்பைப்பகிர்ந்திருப்பார். அந்த சேர்ட்டை நான் மடித்துவைக்கும் அநேக வேளைகளில் அவரோடு தொலைபேசியில் உரையாடியிருக்கிறேன்.

"அடேய் இன்னுமாடாப்பா அதை வைத்திருக்கிறாய்" என்று சிரிப்பார். அவரது வசீகர மீசைக்கூடான கள்ளங்கபடமற்ற அந்தச்சிரிப்பு தொலைபேசியினூடு என் காதுகளில் கலகலக்கும். நினைக்கும்போது இப்போதும் கண்கள் பனிக்கின்றன. அதற்குப்பின் நான் எத்தனையோ சேர்ட்டுகளும், சாரங்களும் வாங்கி இருந்த இடமும் தெரியாமல் போய்விட்டன. ஆனால் முகத்தார் அய்யாவின் அன்புப் பரிசு என்னிடம் இன்னமும் இருக்கின்றது. அது அவரது அன்பின் அடையாளம். அவரது பண்பின் அடையாளம். நான் அவரிடம் கற்றுக்கொள்ளவேண்டிய விடயங்களை நினைவுபடுத்தியபடி அவை எப்போதும் என்னுடன் இருந்துகொண்டேஇருக்கும்.

- மனோ (ஓசை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாகாத சரித்திரக் கலைஞன்
# முகத்தார் எஸ். ஜேசுரட்ணம்



இளவாலை மண்ணில் உதித்த தவப் புதல்வனே
சந்தியாப்பிள்ளை ஜேசுரட்ணம் அண்ணனே
முகத்தார் என்ற அடைமொழியோடு
அரிதாய்க் கிடைத்த அமுதசுரபியே

குளிரான உன் பார்வைக்குள் உறைந்து
இதயம் குளிர்ந்து கிடந்தவன் எழுதுகின்றேன்
"டேய் விக்கி " என்று உதிரும் உந்தன் வார்த்தைக்காக
ஏங்கித் தவம் கிடக்கிறேன்

வரங்களெல்லாம் தவமிருந்த காரணத்தால்
வந்துதித்த எங்கள் காலக் கலைஞனே

உன்னிடம் பயில வந்த மாணவர்களுக்கு
கை கொடுத்து நிழல் தந்த தெய்வப்பந்தலே

அன்பை இழைபிரித்து கட்டிய இதயத் தொட்டிலே
மரணத்தின் நிழலுக்குள் உன் புகழ் மறைந்தா போகும்
மீண்டும் பிறப்பெடுப்பாய் முகத்தார்

சாகாத சரித்திரக் கலைஞனாக
ஒவ்வோர் உயிர்க் கலங்களிலும்
அரும்பிக் கொண்டே இருக்கிறீர்கள்

உங்கள் அன்புக்குள் தவழ்ந்து
மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையில்
வாழ்ந்து கொண்டிருக்கும் அன்புள்ளங்களோ
உங்கள் நினைவால் வாடுகிறார்கள்

இலையுதிர்கால மழையை
வானம் அழுது தீர்ப்பதுபோல்
உங்கள் நினைவுகள் தாங்கிய
இரத்த உறவுகளெல்லோருமே
கண்ணீரில் மிதந்து கொண்டிருக்கிறார்கள்

உங்களோடு கரம் தொடுத்து வந்த கலைஞனாம்
அப்புக்குட்டி ராஜகோபால் பிரிவால் துடிக்கிறான்
கப்ரின் அருணகிரி கண்ணீர் வடிக்கிறான்

இலங்கை வானொலி தந்த கலைஞனே
நீ கணை தொடுத்த நடிப்பின் உச்சம்
எங்கள் தாகங்களுக்கு தடாகமானது

உன்னை எப்போதாவது சந்திப்பேனா?
உன்னுடன் ஒரு வார்த்தை கதைப்பேனா?
என்று ஏங்கித் தவமிருந்த காலத்தில்
பிரான்ஸ் ஏ.பி.சி வானொலியால்
அன்று உன் அறிமுகம் கிடைத்தபொழுது
ஆனந்தத்தின் எல்லையைக் கண்டேன்

அண்ணா என் ஆகாய கங்கை கவிதைத் தொகுப்பிற்கு
முகவுரை தந்து முன்னின்று வெளியிட்டு வைத்தாய்

என் மகளின் திருமண வரவேற்பு வைபவத்திற்கு
வருகை தந்து என்னை மகிழ வைத்தாய்

உங்கள் பிரிவின் அதிர்ச்சியிலிருந்து மீளாமல்
என் மனவிளக்கின் வெளிச்சத்தில் தங்கிவிட்ட
உங்கள் நினைவுகளை தனிமையிலே வருடுகிறேன்

ஓலமிடும் உணர்வுகளின் உள்ளெழும் வார்த்தைகளை
உள்நிறுத்தி வைத்துக்கொண்டு மௌனமொழி பேசுகிறேன்


அண்ணா உன் பாசமுகத்தைத் தேடுகிறேன்
நீயோ கல்லறைக்குள் ஒளிந்து கொண்டாய்
கல்லறையே உன் கதவை ஒருமுறை திறந்து கொள்
ஐந்தடி இமயத்தின் உருவத்தை ஒருமுறை பார்க்க

கண்ணீரில் என் இமைகளோ கரைந்து நிற்க
என் வெதுவெதுப்பான கரங்களோ
உங்களுக்கான மலர்களைத் தாங்கி நிற்க
எங்கள் பாசத்திற்குரிய தெய்வமே அண்ணனே
உன்னை அர்ச்சித்து வணங்கி நிற்கிறேன்

மண்வாசனைக் கவிஞன் விக்கி நவரட்ணம்
(சுவிஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## G.TV தமிழ் தொலைக்காட்சி..

ஊடகங்கள், கலைஞர்கள் வளர்வதற்கு தளம் அமைத்துக் கொடுக்கின்றது என்பது உண்மைதான். ஆனால் அந்த வாய்ப்புக்களை உரிய முறையில் பயன்படுத்தி தங்களை வளர்த்துக் கொள்பவர்கள் மிகச் சிலரே. இந்த மிகச் சிலரில் முகத்தார் முதன்மையானவர்.

முகத்தார் அவர்கள், தான் இலங்கை வானொலிக்குள் நுளைவதற்கு பட்ட கஸ்ரங்களை பலமுறை வெளிப்படையாக சொல்லியிருக்கின்றார். இது அவருடைய பெருந்தன்மை

ஆனால் தனது பெருந்தன்மை காரணமாக தான் சொல்லாமல் விட்டு நாமாகவே புரிந்து கொள்ளவேண்டிய இன்னொரு விசயமும் அங்கே இருக்கின்றது. அது முதலில் பன்னிரண்டு வாரங்களுக்கு மட்டும்தான் என ஆரம்பிக்கப்பட்ட முகத்தார் வீடு நாடகம் பின்னர் இருபத்தி நான்கு வாரங்களாக மாற்றப்பட்டு அதன் பின்னர் ஐம்பத்திரண்டு வாரங்களாக நீட்டப்பட்டு அதன் பின்னர் காலம் குறிப்பிடாமலேயே தொடர்ந்து.. ஐந்து வருடங்களைத் தாண்டியிருக்கின்றது என்றால் யேசுரட்ணம் என்ற இந்தக் கலைஞன் தனது முகத்தார் வீடு நாடகத்தால் கிராமப்புற மக்களின் இல்லங்களிலும் இலங்கை வானொலியை கொண்டு சென்ற பெருமைக்கு சொந்தக்காரராகியிருந்தார் என்பதனால்த்தான்.

பின்பு கதம்பம், மத்தாப்பு என நிகழ்ச்சிகள் தொடரும்போதும் அவைகளை தயாரிப்பதற்கு இலங்கை வானொலிக்கு முகத்தார் தான் தேவைப்பட்டிருக்கின்றார். ஆம் முதலில் இலங்கை வானொலி முகத்தாருக்கு தேவையாக இருந்தது. பின்னர் இலங்கை வானொலிக்கு முகத்தார் தேவையாக இருந்தார்

முகத்தார் அவர்கள் புலம் பெயர்ந்து வந்த பின்னரும் அப்படித்தான் அனைத்து ஊடகங்களும் முகத்தார் அவர்களை தங்கள் சொத்தாக வைத்துக்கொள்ளவே ஆசைப்பட்டன. இவரின் நாடகங்களை ஒலிபரப்புவதன் மூலமாக அந்த ஊடகங்கள் பெருமைப்பட்டுக் கொண்டன.

அந்தப் பெருமையில் G.TV யும் பங்கு கொள்கின்றது. தன்னால் முடியாத அந்தக் கடைசிக் காலத்திலும் G.TV க்காக சில நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பித்திருக்கின்றார்.

இப்படியான ஒரு சிறந்த கலைஞரை நாம் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவில்லையோ? என்ற ஏக்கமும் எம்மிடத்தில் இருக்கின்றது. அந்த ஏக்கத்தை நிறைவு செய்ய வரும் காலங்களில் முகத்தார் அவர்கள் நடித்த படைப்புக்களை திரையிட்டு அவருக்கு மரியாதை செய்வோம்.

வாழ்க முகத்தார் அவர்களின் நாமம்.

- G.T.V.
பிரான்ஸ் கலையகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய கலைப்பணியாளன் முகத்தார் எஸ். ஜேசுரட்ணம் மௌனித்துத்தூங்குகிறார்.



2010 நவம்பர் 27ம் திகதி காலை வேளையில் தகவல் கிடைத்த நேரத்திலிருந்து ஈழத்துக்கலைத்துறை சார்ந்த பலருடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டேன், தகவலைப் பரிமாறினேன், எல்லோருமே அதிர்ச்சியில் உறைந்தார்கள். இப்படியொரு செய்தியை அவர்கள் கேட்கவேண்டி நேரிடும் என்று அவர்கள் எவருமே எதிர்பார்க்கவில்லை. அழுதார்கள், ஆறுதல்கூற என்னாலும் முடியாதிருந்தது. அவர்கள் எல்லாம் இந்தக்கலைப் பெருமகனை எப்படி நேசித்தார்கள், அவரோடு எப்படி எப்படியெல்லாம் பழகிவந்தார்கள் என்பதை சொல்லிச் சொல்லியே அழுதார்கள். "எங்கள் கலைச்சீமான் பிரான்ஸில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்" என்ற இறுமாப்போடு நாம் இருந்தோம். இன்று இந்த இடிவிழுந்த செய்தி வந்துவிட்டதே? என்று ஏங்கினார்கள், குமுறினார்கள்.

மண்வாசனைக்கலைஞனை எங்கள் மண் இழந்து நிற்கிறது. ஈழத்தின் கலைப்பெருமக்கள் தொடர்ச்சியாக விடைபெற்றுச் செல்கிறார்கள். அண்மையில் நடிகை மணிமேகலை அவர்களின் இழப்பு, பல்துறைக் கலைஞர் சிறிதர் பிச்சையப்பா அவர்களின் இழப்புக்களால் நொந்துபோய்க்கிடக்கும் ஈழத்துக் கலைத்துறைக்கு மேலும் ஓர் பேரிழப்பு.

வானொலி நாடகக் கலையின் வித்துவான், ஈழத்துக்கிராமியச் சொற்களஞ்சியம், விவசாயிகளின் தோழன், ஈழத்துக் கலைத்துறையின் கலங்கரை விளக்கம், நித்திய கலைப்பணியாளன் எம் "முகத்தார" எஸ்.ஜேசுரட்ணம் அவர்கள் மௌனித்துத் தூங்குகிறார்.

தனது மரண அறிவித்தலை நான் தான் ஐபிசி வானொலியில் வாசிக்க வேண்டும் என்று பல ஆண்டுகளுக்கு முன்னர் நகைச்சுவையோடு கூறியது இன்று நியமாகிவிட்டது.

அவருடன் நாம்பழகிய காலங்கள் பொன்னானவை. எந்த வேளையில் சந்தித்தாலும் வானொலிக்கலை, நாடகம் என்பவை பற்றியே பேசுவார். எப்பொழுதும் வானொலி நாடகம் பற்றிய கரு ஒன்று அவருக்குள் வட்டமிட்டுக் கொண்டே இருக்கும். "முகத்தார்" அவர்கள் எந்தச் சூழ்நிலைக்குள் இருக்கிறாரோ அதனை அவர் தனது சிந்தனைக்கு ஏற்ப நாடகத்துக்கான கருவாக்கி பாத்திரங்களைப் படைத்துவிடுவார்.

"ஆறாம் வாட்டில் ஆறுமுகத்தார்" என்ற நாடகத்தை வைத்தியமனையில் இருந்த நிலையிலேயே எழுதினார். அவரைப் பார்க்கச் செல்லும் கலைஞர் பெருமக்களுக்கெல்லாம் அந்த நாடகப் பிரதியை வாசித்துக்காட்டியே மகிழ்வித்துக் கொண்டிருந்தார்.

"முகத்தார்" எஸ்.ஜேசுரட்ணம் என்கின்ற ஓர் உயர்வான ஈழத்துக்கலைப் பெருமகனின் கலைவாழ்க்கை வரலாறு முடிந்துவிட்டது. இனி அந்த வரலாற்று நூலில் உள்ளவற்றை எதிர்காலச்சந்ததி கற்று கலைத்துறையில் சாதனைகள் புரியவேண்டும்.

ஈழத்துக்கலையுலகம் என்கின்ற ஒன்று இயங்கும் வரை "முகத்தார" எஸ்.ஜேசுரட்ணம் அவர்களின் புகழும் நிலைத்திருக்கும் என்பது என்னுடைய நம்பிக்கை.

எஸ்.கே. ராஜென்
ஒலிபரப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவாலை தந்த மைந்தனே உங்கள் இழப்பாலே எங்கள் இதயம் கனக்கின்றது



தமிழுக்கு தலைவாழை இலை போட்டு
தொண்டு செய்த இளவாலையின் மைந்தனே
அகத்தாலும், முகத்தாலும்
முகத்தார், முகத்தார்தான் என்று
எல்லோரது அன்பினாலும் கட்டுண்ட
கலை மனித மகானே
யேசுரட்ணம் அண்ணாவே
உங்கள் இளவாலை (இழப்பாலை)
இதயம் கனக்கின்றது நமக்கெல்லாம்.

பதினாறு வருடங்களுக்கு முன்
பேரனும், அப்பப்பாவுமாய்
நாங்கள் இருவரும் நடித்திருந்த
"ராஜாவின் ராகங்கள்" திரைப்படத்தில்
நடித்த புகைப்படம் உயிரோட்டமாய்
எங்கள் வீட்டு முகப்பில்

உங்கள் முகதரிசனத்தோடுதான் - நான்
தினமும் வெளியில் செல்கின்றேன்
உங்களின் ஆசி தினமும் எனக்கு
நல்லதையே செய்தன - இது
உங்களுக்குக் கூட தெரியாது
உங்களை என் மானசீக குருவாகவே
நேசித்து வருகின்றேன்

புகலிடத்தில் நாங்கள் இணைந்து நடித்த
வானொலி, மேடை, நாடகங்கள்
எத்தனை எத்தனை?
மீண்டும் மீண்டும் என் நினைவில்
உங்கள் ஆரோக்கியமான நாட்கள்தான்

27-11-2010 வானம் விடிந்தாலும்
கருக்கல் கலையாத அந்த அதிகாலையில்
எங்களிடம் இருந்து விடைபெற்றிருக்கின்றார்
இன்நாளின் சிறப்புக்கள் சில'

உலகின் புகழ்பெற்ற கோடீஸ்வரர்களில் ஒருவரான
முகேஸ் அம்பானி, 27 மாடிகள் கொண்ட உலகின்
விலை உயர்ந்த பங்களாவைக் கட்டி
கிரகப்பிரவேசம் செய்துள்ளார்.

அமரத்துவமடைந்த உலகப் புகழ் பெற்ற நடிகர்
புரூசிலியின் 70வது பிறந்தநாளை
அவரது ரசிகர்களும், சினிமாப் பிரமுகர்களும்
மிக விமர்சையாகக் கொண்டாடினார்கள்.

அதையும் தாண்டிய சிறப்பு கார்த்திகை 27
இது ஈழத் தமிழ் மக்களின் புனிதநாள்
இன்னாளில் தமிழனோ, தமிழிச்சியோ
பிறப்பதோ, அல்லது இறப்பதோ
அவர்கள் செய்த புண்ணியமாகும்

அந்த சிறப்பு மிக்க மாவீரர் நாளில்
உங்களது மரணம் அதனால்தான்
பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
தமிழீழ தேசிய விருதுக்கு ஒப்பான
"ஈழத் தமிழ் விழி" என்னும் விருதை
உங்களுக்கு முதலில் தந்து
கௌரவித்தார்களோ என
எண்ணத்தோன்றுகின்றது

உங்களின் புகழில் மகிழ்ச்சிகொண்ட
உங்களது மறைவில் மனது நொந்த
உங்களை மானசீகமாக நேசிக்கின்ற மாணவன்

கே.பி. லோகதாஸ்
(ஊடகவியலாளர் - பல்துறை ஆர்வலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைச்சக்கரம் இயங்குநிலையை நிறுத்திக்கொண்டது..


மண்ணையும் மக்களையும்
மனதார நேசித்த
தமிழ்க் கலை வித்தகர்
கண் அயராது கலைப்
பணி புரிந்த மாமனிதர்
தன் நடிப்பாலும் எழுத்தாலும்
எண்ணற்ற தமிழ் இதயங்களில்
வதிவிட உரிமை பெற்றவர்

இவரது கலை ப் பூங்காவில்
நகச்சுவை பூக்களே ஏராளம்
வானொலி இவரது குத்தகை
நிலமாய் நீண்ட காலம்
கலை விளைச்சலுடன் விரிந்து
மலர்ந்து வான் பரப்பில்
நறு மணம் வீசிக் கொண்டது

ஈழத் திரைப் பட வரலாற்றில்
அழியாத முத்திரை "வாடைக் காற்று"
வானொலி நாடகத்தில் "முகத்தார்
வீடு" எட்ட முடியாத தூரத்தில்
சாதனைக் கம்ப உச்சியில்....
நிலையாகிக் கொண்டது
நேசிப்பும் அரவணைப்பும்
கூடப் பிறந்தவை - தட்டிக்
கொடுப்பதில் தத்துவ ஞானி!
சிரிப்பே இவரது சிம்மாசனம்

கலை உலகம் கலங்கி நிற்க
கலங்கரை விளக்கு கண் அயர்ந்தது
தாங்கிக் கொள்ள மனம் மறுக்குது
முறுக்கு மீசை முன்னால் தெரியுது
நறுக்கான நளினம் நர்த்தனம் புரியுது
கறுப்புக் கண்ணாடி காட்சிக்கு வருகுது
கைத்தடி கை தட்டி கூப்பிட
எப்படி உங்களை நாம் மறப்போம்?
மறவா வரம் பெற்ற முகத்தாரே
கார்த்திகை இருபத்தியேழின் சிறப்புக்குள்
நிறைவான பதிவாகிக் கொண்டீர்..
வாழ்க நின் நாமம்
பிராத்திக்கின்றோம்.

துயரினைச் சுமந்தபடி
ரி. தயாநிதி குடும்பம்.
*4. 12. 2010*



# நாடகத்தின் முகத்தை இழந்தோம்

ஈழத்து நாடகக் கலைஞனாகவும்
புலத்திலும் முத்தமிழை முதுமையற்று
ஆளுமையாக்கிய அற்புதக்கலைஞன்
முகத்தார் யேசுரட்ணம் !
முகத்தார் விழி மூடி முழுத்தூக்கம்
கொள்ளும் வேளையிது - நாடக
கலைச்சிறப்பையும் தனித்தன்மையான
மெய்யான நகைச்சுவையையும் வீடும் நாடறியும்
காலத்தால் களைப்படையாத நாடகக் கலைஞன்!
பேச்சாலும் நடிப்பாலும் என்றுமே
சிரித்திட திகைத்திட வைத்தவர்
முகத்தார் வீடும் கலையுலகத் தோழரும்
அகத்தில் அவர் ஆற்றலை நினைந்தும்
தேறுதல் ஆறுதல் தருகின்றோம் !
மக்களின் மனங்களில் மலர்ந்தவர்
நட்பின் புன்னகையாகத் தவழ்ந்தவர்
நெஞ்சங்களில் நெருப்புப் பொழியும் நேரம்
பஞ்சமில்லாத பன்னீராகவே பரிமளித்தவர் முகத்தார்!
"தேர் போன்ற தமிழீழம் சிதைகின்றதே !
ஊரெல்லாம் புதைகுழியாய் கரைகின்றதங்கே !
தேன்நிலவாய் இருந்த இனம் தேய்பிறையாய் மாறி வர
பாலகனே நீ பக்குவமாய் தூங்கு !
-முகத்தார் -கவி வரியிது
எண்ணமும் இலக்கும் காணாது
இன்று உறங்கிப் போன கலைஞரிடமும்
ஏக்கமும் தாகமும் தமிழோடு வாழ்ந்தது
ஆன்ம சாந்திக்கான கவி வணக்கம்

கவிதாஞான வாரிதி : கோசல்யா - சொர்ணலிங்கம்
ஜேர்மனி

*(2-12-2010)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாஜனக்கல்லூரி பழையமாணவர் சங்கம்– பாரிஸ்
ASSOCIATION DES ANCIENS ELEVES DU COLLEGE MAHAJANA - PARIS



# மானுடத்தை நேசித்த மாபெரும் கலைஞர் முகத்தார் எஸ். ஜேசுரட்ணம்

ஈழத்து கலை உலகில் முகத்தார் ஜேசுரட்ணம் அவர்கள் அகலக் கால் பதித்து சாதனைகள் பல புரிந்ததோடு, 1979 இல் இலங்கை ஜனாதிபதியினால் பரிசு கொடுத்துக்கௌரவிக்கப்பட்டவர். தாய்நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக புலம் பெயர்ந்து பிரான்சில் வாழ்ந்து வந்தாலும் அவர் மனதால் ஈழத்திலேயே வாழ்ந்து கொண்டிருந்தார் என்பது அவருடைய படைப்புகளுக்கூடாக நாம் கண்டுகொண்டோம். புலம்பெயர் தேசத்திலும் அவரது கலைப்பணி சிறப்பாக ஒளிவீசிய வண்ணமே தொடர்ந்தது. இவர் கலைப்படைப்புக்களாலும் அன்பாலும் மானுடத்தை நேசித்த மாமனிதன்.

1996 இல் நடைபெற்ற மகாஜனமாலை நிகழ்வில் "அரோகரா" என்ற நாடகத்தினை அரங்கேற்றி அதில் பிரதான கதாபாத்திரத்தினைத் தானே நடித்துக்கொடுத்தது எம்மைப் பெருமை கொள்ளவைத்தது. எமது சங்க நிகழ்வுகளில் நாம் அழைத்தபோதெல்லாம் ஆர்வத்தோடு கலந்து சிறப்பித்து உற்சாகமூட்டிய கலைமாமணி இன்று எம்மை விட்டுப்பிரிந்த செய்தி எண்ணுங்கால் மனமுருக வைக்கின்றது.

இளவாலை கென்றி அரசர் பாடசாலைத் தலைவராக கடமையாற்றிய காலப்பகுதியில் இளவாலை தெல்லிப்பழை கிராமங்களுக்கிடையிலான ஒட்டுறவான பழக்க வழக்க ஒற்றுமைப்பாடுகள் சார்ந்து இனிமையாகப் பேசிக்கொண்டே இரண்டு சங்கங்களிற்கிடையிலான உறவினைப் பலப்படுத்தியவர். எமது கல்லூரியின் நூற்றாண்டினைப்பற்றி நீண்ட காலமாக ஆர்வத்துடன் உரையாடி வந்தவர். எமது சங்கத்தால் 14.11.2010 அன்று நடாத்தப்பட்ட நூற்றாண்டு விழா நிகழ்வில் கலந்து கொள்ள முடியாமல் போனது எமக்கு மிகுந்த கவலையினை ஏற்படுத்தியது.

கலைத்துறை சார்ந்த ஆளுமை மட்டுமல்லாது பல்துறை ஆர்வமும் மனிதநேயமும் நிறைந்த கள்ளம் கபடமற்ற குழந்தையுள்ளமும் தற்பெருமை பேசாத நற்சிந்தனையும் அன்பும் குடிகொண்ட கலைப்பணிச் செல்வரை இழந்து நெஞ்சுருகுகின்றோம்.
நல்ல மானிடநேயம் கொண்ட படைப்பாளி ஒருபொழுதும் மரணிப்பதில்லை அவர் எமது நெஞ்சில் என்றென்றும் வாழ்வார்.
அன்னாரின் பிரிவால் துன்பம்கொள்ளும் உற்றார் உறவினர் நண்பர்களோடு நாங்களும் கலந்து துயரினைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

*மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்*
*பிரான்ஸ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் கண்ட முகத்தார் ஐயா...

முகத்தார் என்ற மகத்தான மனிதர்
இம்மண்ணுலகை விட்டு
கார்த்திகை இருபத்தேழன்று மாமனிதராய்
விண்ணுலகெய்தினர்.
அப்பழுக்கற்ற சிரித்த முகம்
மிடுக்கான நடை,
எடுப்பான தோற்றம்,
எப்போதுமே இன்சொலால் பேசும்
இனிமையான சுபாவம்.
எவரையும் யாரிடமும் புறங்கூறாமை,
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு - இவைதான்
முகத்தார் ஐயாவிடம், நான் கண்ட
இலக்கண இலட்சியங்கள்.
நாம் இவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய,
கற்கை நெறிகள் ஏராளம்!
தனக்காக மட்டும் வாழாமல் - தம் வாழ்வை
கலைக்காகவும் அர்ப்பணித்து - இன்று
நம் உள்ளங்களில் மலைபோல் உயர்ந்து நிற்கும்
மா மனிதர் அவர்.
தான் பிறந்து வளர்ந்த மண்ணில் மட்டுமல்லாது,
புலம்பெயர்ந்து வாழ்ந்த இவ் ஐரோப்பிய மண்ணிலும்,
வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம்,
மேடையென
இவர் ஆளுமை பதியாத ஊடகங்கள் தானுண்டோ?
கலைத்துறையில் பல்வேறு சாதனைகள் புரிந்து
காலம் பதிவு செய்ய,
பல்வேறு விருதுகளைப் பெற்று,
நாடகக் கலைக்கு முத்திரை பதித்த
முதுமரம் அவர்.!
புலம்பெயர்ந்த மண்ணில்
எமது தயாரிப்பில் உருவான
முகம் திரைப்படத்தில்,
பொருத்தமான பாத்திரமேற்று, - தன் முகத்தை
முகத்தில் பதிவுசெய்த தந்தை அவர்.
எங்கள் ABC தமிழ் வானொலியில்,
நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளராய்,
அனைவர்க்கும் வானொலியின் தந்தையாய்,
துணைநின்று வழிகாட்டி,
நெறியாள்கை செய்த படைப்பாளி அவர்.
கண்முன்னே காணும் நிகழ்வுகளைக் கருவாக்கி,
பலநூறு நாடகங்களை அதிலுருவாக்கி,
நகைச்சுவை உணர்வோடும்,
மண்வாசனை கமழும் தொனியோடும்,
வாரம் தோறும் வானொலியில்,
வலம்வரச் செய்த நல்லாசான் அவர்.
வானொலி நாடகத்தின் முன்னோடியுமவர்
பாத்திரத்திற்கேற்ப இயல்பாய் நடிக்கும்
திறனுமுள்ளவர்,
இதனால்த்தான் என்னவோ, முகத்தார் என்ற
பாத்திரமும்
முத்தாய்ப்பாய் - இவர் பெயர் முன்னால்
முடிசூடிக் கொண்டதோ!
எனது பிஞ்சுநிலா இசைத்தட்டு,
வெளியீட்டு விழா, பாரீசில் இடம்பெற்ற வேளையிலே,
தகைமையுடன் தலைமைப் பொறுப்பேற்று,
உவகையுடன் தரமாக அந்நிகழ்வதனை,
நடாத்திய பெருமைதனை, மறக்க முடியுமோ?
- இன்றும்
அப்பசுமையான இனிய நினைவுகளை
மீட்டிப் பார்க்கின்றேன்
நம்மண்ணில் கொடூரமாய் யுத்தம்,
நடைபெற்ற வேளையிலே,
அன்றாடம் செய்திகளை அறிவதற்காய்
தொலைபேசியூடாக என்னைத் தொடர்புகொண்டு,
செய்திகளை அவ்வப்போது கேட்டறிதலில்,
அவருக்கிருந்த ஆர்வமும் ஆதங்கமும்
மண்மீதும், மக்கள் மீதும் அவர்கொண்ட
பற்றுதலைப் பறைசாற்றின.
நம்மக்கள் சொல்லொணாத் துயரங்களையும்,
பேரவலங்களையும் சந்தித்த வேளையிலே,
அவரின் உள்ளம் பட்ட வேதனை - அன்று
அவர் குரலில் தொனித்தது - இத்தகைய
மனித நேயம் நிறைந்த, மகத்தான மனிதரை,
மகளே! மகளே! என்று உரிமையோடு
எனை அழைத்த முகத்தார் ஐயாவை,
கலைஞர்களுக்கெல்லாம் வழிகாட்டியாய் இருந்த
எம் கலைத் தந்தையை, - இன்று நாம்
இழந்து நிற்கின்றோம்.
மரணம் என்பது அனைவருக்கும் பொதுமை தான்
- ஆனால் மரணத்துக்கே சவால்விட்டு மரணமாகியும்
மரணமாகாத மாமனிதராய் - இன்று நம்
மனங்களில் அவர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.
காற்றோடு கலந்து, காதோடு கைகுலுக்கி
தித்திக்கும் அவரது தீங்குரல்,
ஒப்பனைக்கு ஒத்த திருவுருவம்
உயிர்ப்பூட்டும் அவரது முகபாவம்
மெருகூட்டும் அவரது கதாபாத்திரம்
அன்றாடம் பேசும் பேச்சுத் தமிழில்
அள்ளித் தெளித்து நற்கருத்துக்களை
அற்புதமாய் படைத்த நல்லாசான்.
நகைச்சுவை மூலம் அனைவரும் சுவைத்து மகிழ்ந்திட
படைத்த படைப்புக்கள் - என்றும்
அழியாத பொக்கிசங்கள். இன்று
அவரது உடல் எம்மை விட்டுப் பிரிந்திருக்கலாம் -
ஆனால் அவர் விட்டுச் சென்ற கலைப்படைப்புக்கள்
என்றுமே அழிவில்லாதவை.
அவரது தூய ஆன்மா எம்மை வாழ்த்தி
வழிநடத்திச் செல்லட்டும்.....

**- நவா ஜோதி**
**வானொலி நிகழ்ச்சி**
**தயாரிப்பாளர், அறிவிப்பாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இழந்து விட்டோம் ஈழத்தமிழ்த்தாயின் இணையற்ற கலைமகனை!

ஈழத்தமிழ்த்தாயின் இணையற்ற கலைமகனாய் இதயத்தில் நின்றாய் ஐயா
வாழும் இயலிசை நாடகத் தமிழுக்குத் தனியான வளர்ச்சியைத் தந்தாய் ஐயா
நாளுமே உங்களின் நல்லாற்றல் கண்டுநாம் நனிதேனை உண்டோம் ஐயா
பாழும் இந் நாளிலே பறிகொடுத்துங்களின் பாசத்தால் அழுதோம் ஐயா
அரிவாளை ஒத்ததோர் அழகான மீசைக்குள் அரும்பிடும் புன்சிரிப்பு
புரியாதோர் தன்னையும் புரிந்திட வைத்திடும் புதுப்புதுக் கதையமைப்பு
சரியான நகைச்சுவை கொண்டதோர் நாடகக் கலையின் வடிவமைப்பு
வருநாளில் தொடர்ந்திட வகையின்றித் தவித்திடும் வகையான நிலையெமக்கு
சொல்லுக்குள் வார்த்தையைச் சுருக்கியே வைத்திடும் சூத்திரம் தான் கொண்டனை
வில்லுக்கு விசயன் எனும் வித்தகக் கலைஞனாய் விண்ணுயர் புகழ் வென்றனை
அள்ளக் குறையாத அரியதோர் கருத்துக்கள் அகிலத்தில் தான் வைத்தனை
அழுகின்ற நிலை தந்து அரனடி தனைக் காண அவசரம் ஏன் சென்றனை
மண்ணுலகில் எங்களை மகிழ்விக்க தந்திட்ட மணியான நாடகங்கள்
விண்ணுலகில் பரமனும் விரைந்து தான் பார்த்திட விரும்பியே நின்றதாலோ
கண்ணுக்கினிமையாய் கருத்தினில் உயர்வதாய் காசினி தன்னைக் கட்டும்
எண்ணக் குறையாத எங்களின் முகத்தாரை இன்று நாம் இழந்த தென்ன
கருவேலங்காட்டிமைக் கற்பக விருட்சமெனக் கலைஞனே உங்கள் வருகை
பருவங்கள் மாறினும் பழகின்ற பாதையின் பண்பினில் உயர்ந்த இனிமை
வருமெங்கள் சந்ததி வாழ்ந்திடும் வாழ்க்கைக்கு வகையான நல்ல வழமை
இருக்கின்ற போதிலே இனிமையாய்ச் சமைத்திட்ட இயேசுவின் தனி முத்திரை
புலத்திலும் புலம்பெயர் நிலத்திலும் கலைக்கென கடைசி வரை பணியாற்றினாய்
நிலத்திடை மாந்தரின் நிலைதன்னைக் கருவாக்கி நீள்கலை உருவாக்கினாய்
புலம்பெயர் எம்மவர் வாழ்வையும் நாடகக் கலைகளின் வடிவில் தந்தாய்
உளத்திடை இனிமையும், உணர்வினில் எளிமையும் உண்மையின் உருவாக்கினை
காலங்கள் வாழ்த்திடும் கனிவான கலைஞனெனக் காசினி தனை வென்றவா
ஞாலத்தில் உங்களின் அன்பிற்குள் நமைக் கட்டி நற்பணி செய்ய வைத்தாய்
காலத்தின் கோலமதா கண்ணான முகத்தாரைக் கண்ணீரில் விடை கொடுக்க
கணமேனும் மனமொன்றிக் கனிகின்ற நாளெனக் கணக்கிட்டுப் பார்க்கவிலையே
பத்தோடு ஒன்றெனில் பாதையில் வழிசெய்து பரமனைத் தொழுது நிற்போம்
முத்தான கலைஞனாம் முகத்தார் ஐயா எங்கள் முழுதான சொத்தல்லவா
நித்தமும் உங்களின் நினைவோடு நாம் இங்கு நிலத்திடை எண்ணி நிற்போம்
வித்தாரக் கலைஞனே விரைந்திங்கு வந்திட்டால் விளக்கிட இன்பமுண்டோ?

இதயத்தோடு ஒன்றிவிட்ட இனிய கலைஞனின்
ஆன்ம இளைப்பாற்று வேண்டிப் பிரார்த்திக்கும்
**- இலங்கையர் கனகசபை அரியரட்ணம் பாரிஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானொலி நாடகத்தின் மூலம் புகழ்பெற்ற கலைஞன் முகத்தார் ஜேசுரட்ணம்

எனது நீண்ட கால கலையுலக நண்பரும், தாயக மண்ணின் மாபெரும் கலைஞர்களில் ஒருவருமான முகத்தார் எஸ். ஜேசுரட்ணம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நான் மிகவும் பதைபதைத்துப் போனேன்.

1968ஆம் ஆண்டு நான் இலங்கை வானொலியில் பணியாற்ற ஆரம்பித்த காலத்தில் இருந்து அவருடன் மிகவும் நெருக்கமான தொடர்புகளை மேற்கொண்டு நிறைய வானொலி நாடகங்களைத் தயாரித்திருக்கின்றேன். அந்த நாட்களில் இலங்கை வானொலியில் எஸ். ஜேசுரட்ணம் என்றே என்னோடு அறிமுகமானார்.

இலங்கை வானொலியில் விவசாயத்திணைக்களம் வழங்கிவந்த விவசாய நிகழ்ச்சியில் "முகத்தார் வீடு" என்ற நாடகத்தின் மூலம் எஸ். ஜேசுரட்ணம் என்பவர் ஆறுமுகத்தார் என்ற பாத்திரத்தின் ஊடாக முகத்தாராகவே மாறியிருந்தார். பின்னர் எங்கள் தொடர்பும் முகத்தார் என்ற பெயரிலேயே தொடர்ந்தது. அந்தப் பாத்திரப்பெயர் அவருடைய இயற்பெயருக்கு ஈடாக ஒட்டிக்கொண்டது.

அந்த முகத்தார் என்ற கலைஞன் காலமெல்லாம் நிலைத்திருப்பார் என்பதையும் கலையுலகம் உணர்த்தி நிற்கின்றது.

முகத்தார் வீடு நாடகத்தை நான் தயாரித்தளித்தேன். ஆனால் அதன் பிரதி ஆக்கம், இயக்கம், பாத்திரத்தெரிவுகள் எல்லாம் அவருடையதாகவே இருந்தன.

நான் புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டுக்கு வரும் வரை முகத்தார் வீடு நாடகத்தை தயாரித்தளித்தேன். முகத்தார் எஸ். ஜேசுரட்ணம் அந்த நாடகத்தின் மூலம் கொடிகட்டிப்பறந்தார், புகழின் உச்சிக்கே சென்றார் என்று என்னால் கூற முடியும்.

அவருடைய எழுத்துக்கள் வெறும் நகைச்சுவையுடன் மட்டும் நின்றுவிடவில்லை, கருத்துச் செறிவையும் அது கொண்டிருந்தது. அதனால் அவருக்கு ஈழத்து கலையுலகில் ஓர் உயரிய அந்தஸ்தும் கிடைத்தது என்று கூறுவேன்.

பிரான்ஸ் நாட்டில் மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நாம் சந்தித்துக்கொண்ட வேளையில் எமது நட்பின் அர்த்தத்தை புரிந்துகொள்ளக்கூடியவாறு இருந்தது. இலங்கை வானொலியில் ஏற்பட்ட உறவில் எந்த மாற்றமும் இல்லாமல் எங்கள் நட்பு தொடர்ந்தது.

எப்பொழுது சந்தித்தாலும் கலகலப்புடனேயே பேசும் சுபாவம் அவரிடத்தில் மாற்றம் பெறவில்லை. வயது வித்தியாசமின்றி அவர் பழகிக்கொண்ட விதம் என்னை மென்மேலும் நெகிழ வைத்தது.

நாடகத் தயாரிப்பு வேளைகளில் கலையகத்தில் அவர் வழங்கிய ஒத்துழைப்பு, நடிப்பில் அவர் காட்டிய அக்கறை, கலைமீது கொண்டிருந்த பற்றுதல் என்பவற்றை எல்லாம் நினைத்துப் பார்க்கவைத்துவிட்டார்.

முகத்தார் எஸ். ஜேசுரட்ணம் அவர்களின் இழப்பு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்ல, ஈழத்தின் முழுக்கலைத்துறையினருக்குமே பேரிழப்பாகும்.

அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தின் துயரத்தில் நானும் பங்கெடுத்துக்கொள்கின்றேன். அவரின் ஆன்மா சாந்தி பெற அனைவரும் பிரார்த்திப்போம்.

- டேவிட் ராஜேந்திரன்
முன்னாள் நிகழ்ச்சி தயாரிப்பாளர்
இலங்கை வானொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரதியின் மீசைபோல் இவரது மீசைக்கும் பெருமை உண்டு

**நான் ஜேசுரட்ணம் அவர்களின் ரசிகன்**

முகத்தார் வீடு நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கிராம சஞ்சிகை நிகழ்ச்சியில் தொடர்ச்சியாக ஒலிபரப்பாகி வந்த நாடகம். அந்த நாடகத்தின் முகத்தார் பாத்திரம் ஜேசுரட்ணம் அவர்களோடு ஒட்டிக்கொண்டுவிட்டது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தேசிய சேவை நாடகங்களிலும், மேடை நாடகங்களிலும், இலங்கைத் திரைப்படம் "வாடைக்காற்று" பிரான்சில் வானொலி , தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் என்பவற்றில் பங்குபற்றி தொடர்ச்சியாக கலைத்துறையில் ஈடுபட்டுவந்தவர் ஜேசுரட்ணம்.

பாரதியின் மீசைபோல் இவரது மீசைக்கும் பெருமை உண்டு.

யாழ் இளவாலையைச் சேர்ந்த ஜேசுரட்ணம் அவர்கள் நிலஅளவைத் திணைக்களத்தில் பணியாற்றியவர். கம்பீரமான தோற்றமுள்ளவர்.

வானொலி நாடகமானாலும் சரி, மேடை நாடகமானாலும் சரி, தொலைக்காட்சி நாடகமானாலும் சரி, திரைப்படமானாலும் சரி, ஏற்கும் பாத்திரத்தில் முத்திரை பதித்துவிடுபவர் தான், ஜேசுரட்ணம் அவர்கள்.

நூற்றாண்டு கண்ட இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் கல்வி கற்றவர். அந்தக் கல்லூரியில் சில காலம் ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

என்ன ராசியோ தெரியவில்லை. ஈழத்தில் சாதனைகள் புரிந்த நாடகக் கலைஞர்கள் பின்னாட்களில் பிரான்ஸ் நாட்டில் தான் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள்.

நன்றியுள்ள மனம், சிந்திக்கும் இருதயம், அன்பான புன்னகை, இனிமையான வார்த்தை, உதவும் உள்ளம் இவைதான் ஜேசுரட்ணம்.

வானிலிருந்து பூமழை ஒன்று மண்ணில் உதிர்ந்தோட
மந்திரமேகம் சந்ததி செய்து மங்கள இசைபாட
ஆந்தை, மந்தைகள், ஆடுகள் எல்லாம் ஆயனைக் கொண்டாட
அந்தரமீதில் சென்று நடந்தார்
தந்தையைக் கண்டாட யேசு காவியம்

முகத்தார் எஸ். ஜேசுரட்ணம் அவர்களின் ஆன்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**- கலைஞர் "சோக்கெல்லோ" சண்முகம் - கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை மனம் கொண்ட

# பிள்ளை ஒன்று

ஒரு மனிதனுக்கு வாழ்க்கையிலே கிடைக்கும் சிறப்பு விருது அவரோடு ஒட்டிக்கொள்ளும் பெயராகும்.
அப்படி சிறப்புப் பெயரோடு 80 வயது வரையும் வாழ்ந்தவர் எங்கள் முகத்தார் யேசுரட்ணம் அவர்கள். சுமார் 5 வருடங்கள் (262 வாரங்கள்) இலங்கை வானொலியில் முகத்தார் வீடு என்னும் நகைச்சுவை நாடகத்தின் மூலம் உலகம் முழுவதும் வாழ்ந்த தமிழ் நெஞ்சங்களை சிந்திக்க வைத்த, சிரிக்க வைத்த நாடகத்தின் மூலம் வாழ்ந்தார். வாழ்ந்துகொண்டிருக்கிறார். வசதியான குடும்பத்திலே பிறந்து வளர்ந்து வாழ்ந்தவர். உயர்கல்விபெற்று அரசபதவிகளில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர். இன்னும் அவர் உழைப்பால், உயர்ந்திருக்க முடியும். ஆனால் பாடசாலைப் பருவத்தில் இருந்தே முத்தமிழிலே நாடகத்தமிழை வளர்ப்பதற்கு பெரும்முயற்சி எடுத்தவர். மேடை நாடகங்கள், வானொலி நாடகங்களை எழுதி, நெறிப்படுத்தி தயாரித்து அளித்தவர் எங்கள் முகத்தார் அவர்கள்.

நாடகத்தமிழின் ஆர்வமிகுதியால் பல திரைப்படங்களிலும் நடித்துப் பெயர்பெற்றவர். பல புதிய பல கலைஞர்களை உள்வாங்கி தமிழுக்கு புகழ்சேர்த்தவர். இலங்கையில் வாழ்ந்த போது இலங்கை ஜனாதிபதியின் அதிஉயர் விருதோடு பல விருதுகளை, பட்டங்களை, கௌரவங்களை பெற்றவர். ஒரு நடிகனுக்கு இருக்க வேண்டிய அத்தனை பண்புகளையும் ஒருசேரப் பெற்றவர். கோபம் என்பதை அறியாதவர். அதனால்தான் கவிஞனின் பாடல்வரிக்கு ஒப்ப குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்ற இலக்கணத்துள் வாழ்ந்தவர். அதனால்தான் என்னவோ அகத்தின் அழகு முகத்தில் தெரியும்படி வாழ்ந்தவர். 1984 இல் புலம்பெயர்ந்து தென்னிந்தியாவில் சுமார் 8 ஆண்டுகள் வாழ்ந்த காலத்தில் அங்குள்ள நாடக சினிமா கலைஞர்களோடு இறுக்கமான தொடர்புகளைப் பேணிக்கொண்டதனால், நாடகத்துறையிலும், சினிமாத்துறையிலும் பல புதுமைகளையும், யுக்திகளையும், பலவிதமான எண்ணக் கருக்களையும் வளர்த்துக் கொண்டவர். 1993ல், பிரான்ஸ் நாட்டுக்கு புலம்பெயர்ந்த போது தாய்நாட்டில் நாடகத்துறையில், வானொலியில், சினிமாத்துறையில் தன்னுடன் இருந்த பல கலைஞர்களைச் சந்திக்கின்ற பெரும் பாக்கியம் கிடைக்கப் பெற்றவர். பழைய நண்பர்கள் மீண்டும் சந்தித்தால் கேட்கவும் வேண்டுமா?
முகம் தெரியாத பல புதிய இளம் கலைஞர்களை எல்லாம் சந்தித்தார். புலப்பெயர்வில் தமிழ்மொழியும், தமிழ் கலாச்சாரமும் அழிந்துவிடாதிருக்க மிகப் பெரிய ஆயுதமான கலைகளை வளர்க்க ஏனைய கலைஞர்களோடு இணைந்து பாடுபட்டார். இவைகளுக்கு பெரும் வாய்ப்பாக அமைந்த வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களை பயன்படுத்திக் கொண்டார். மேற்படி ஊடகங்களுக்கு பொறுப்பாகவும், இயக்குனராகவும், நெறிப்படுத்துபவராகவும் இருந்து பெரும்பணியாற்றியவர் முகத்தார் அவர்கள்.
திரைப்படம், குறும்படம், மேடை, வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள் போன்றவைகளில் நடித்தது மட்டுமல்ல, எழுத்தாளனாக, இயக்குனராக, தயாரிப்பாளராக பல பரிமாணங்களை எடுத்தவர் முகத்தார் அவர்கள். உடல்நோய் பல தடவைகள் இடங்கொடுக்காத போதும் அன்னைத்தமிழுக்கு பணிசெய்ய எப்போதும் அயராது உழைத்தார். படுக்கையில் பல தடவைகள் படுத்த போதிலும் தமிழ் கலைபற்றிய தனது எண்ணக் கருத்துக்களை, அபிலாசைகளை, பரிமாறிக் கொண்ட ஓர் உன்னத கலைஞர் முகத்தார் அவர்கள்.

புலம்பெயர் வாழ்வில் கலைத்துறை விருதுகள் பலதைப் பெற்றுக் கொண்டவர் மட்டுமல்ல. பல பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டார். அவைகள் எல்லாவற்றுக்கும் மேலாக அவர் நேசித்ததும், மக்கள் நேசித்ததும் முகத்தார் என்ற அடைமொழியைத்தான். இந்த அடைமொழிச் சிறப்பை யாராலும் எளிதில் பெற்றுக் கொள்ள முடியாது. அப்படிப் பெற்று பெரும் மதிப்பும் மரியாதையும் பெற்ற ஓர் உன்னத கலைஞர் முகத்தார் அவர்கள்.
அவரது இழப்பு தமிழ் உலகிற்கு, தமிழ் கலைஞர்களுக்கு, புலம்பெயர் தமிழர் வாழ்விற்கு மிகப் பெரிய இழப்பாகும். அவரது இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள், கலைக்குடும்பத்தினர் யாவரோடும் திருமறைக் கலாமன்ற பாரிஸ் கிளையும் தனது ஆழ்ந்த கவலைகளை பகிர்ந்து கொள்கின்றது.


**- திருமறைக்கலாமன்றம்**

பாரிஸ் கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தின் மூத்த நாடக, திரைக் கலைஞன் "முகத்தார்" யேசுரட்ணம் காலம் ஆகினார்



ஈழத்தின் தமிழ்க் கலைப் பதிவேட்டில் தனக்கானதொரு தனியனான பதிவினை தொடர்ந்து வைத்திருந்த "முகத்தார் யேசுரட்ணம்"அவர்களின் பதிவு முற்றுப்பெற்றுள்ளது. அவரின் படத்தின் கீழ் திரு சந்தியாப்பிள்ளை யேசுரட்ணம் - முகத்தார் யேசுரட்ணம் (26.12.1931 - 27.11.2010) எனக் குறிப்பிட்டாயிற்று. 04.12.2010 அன்று பாரிசின் வடக்கே அமைந்த கார்ஜ் லே கோணேஸ் என்ற கிராமத்தில் இவரது மண்ணுடல் மண்ணில் சங்கமிக்கும் நாளாகவும் குறிப்பிடப்பட்டாயிற்று.

இப்போது நினைவுத் தடங்களில் மட்டும் தொடர்ந்த பயணத்தைக் கொள்ளும் முகத்தார் யேசுரட்ணம், ஈழத்தின் திரை, நாடக வரலாற்றில் தனக்கானதொரு தனி முத்திரை பதித்தவர். 1970களில் இலங்கை வானொலியில் இவரது எழுத்து, நடிப்பு, இயக்கத்தில் ஒலிபரப்பான பெரும் புகழ்பெற்றிருந்த "முகத்தார் வீடு" நாடகத்தால் இவருடன் "முகத்தார்" இறுக்கமாக ஒட்டிக் கொண்டது. இவர் காலம் ஆகிய பின்னரும் இந்த அழகிய "முகத்தார்" யேசுரட்ணமாக தொடர வைத்திருக்கிறது. யாழ்ப்பாணப் பேச்சு வழக்கின் ஒலிக் குரலாக வானலையில் தவழ்ந்து வந்து காது குளிர அள்ளிச் சென்ற கலைப் படைப்பு முகத்தார் வீடு. 1990களில் தனது புலப் பெயர்வின் பின்பும் அவரது கலைப் பயணம் புதிய தளத்தில் தொடர்ந்தது. இதனால் "முகத்தார் வீடு" பிரான்சில் திரைச் சித்திரமாகவும் தயாரிக்கப்பட்டது.

1979ல் வெளியான "வாடைக்காற்று" திரைப்படத்தில் பொன்னுக்கிழவன் என்னும் பாத்திரத்தில் திறம்பட நடித்திருந்ததால் அன்றைய ஜனாதிபதி திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனா அவர்களினால் இவருக்கு ஜனாதிபதி விருது கிடைத்தது. மேலும் இலங்கையில் தயாரான "கோமாளிகள்","ஏமாளிகள்" போன்ற திரைப்படங்களிலும், பாரிஸில் தயாரான "சத்தியகீதை, இன்னுமொரு பெண், முகத்தார் வீடு, ராஜாவின் ராகங்கள்" போன்ற திரைப்படங்களிலும், நூற்றுக்கும் மேற்பட்ட மேடை, வானொலி நாடகங்களிலும் நடித்தவர். குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் அதிக அக்கறையுடன் கவனம் பெற்றுள்ள குறும்பட முயற்சிகளிலும் இவரால் தடமிடப்பட்டது. ஒசை மனோவின் நெறியாள்கையில் வெளிவந்த "தாகம்" குறும்படத்தில் இவரது பாத்திரம் மொழி பேசாது திரை மொழியாக படையலிட்டது. புலம்பெயர் சூழலில் தனிக் கவனம் பெற்ற இன்னுமொரு குறும்படமான இயக்குநர் பராவின் நெறியாள்கையில் வெளியிடப்பட்ட "பேரன் பேத்தி" அறிமுக விழாவில் "முகத்தார் யேசுரட்ணம்" சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு மூத்த கலைஞர் கௌரவிப்பைப் பெற்றிருந்தார். கலையுலக ஆர்வலர்களின் பாராட்டுதல்களையும் நேசிப்பையும் பெரிதும் பெற்றிருந்தார்.


தனது வாழ்வுப் பயணத்தில், ஈழத் தமிழ் கலைத் தடையத்தை பதிந்து சென்றுள்ளார் "முகத்தார் யேசுரட்ணம". விடைபெற்றுச் சென்றுள்ள முகத்தாரின் கலைத் தடங்களில் எமது குவிந்த கைகளால் மலரிடுகிறோம்.



**- சலனம் முகுந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய விருது பெற்ற திரைப்படக் கலைஞன் இலங்கை வானொலி முகத்தார் ஜேசுரட்ணம்

இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் கடமையாற்றி வந்த நண்பர் சிவதாசன் (வாடைக்காற்று திரைப்படத் தயாரிப்பாளர்களில் ஒருவர்) கமலாலயம் என்ற ஒரு நாடக மன்றத்தை நடாத்திக் கொண்டிருந்தார். அந்த நாடக மன்றத்தில் நான், எஸ். எஸ். கணேசபிள்ளை போன்ற எங்கள் மன்றத்தைச் சேர்ந்தவர்களும் சென்று நடித்தோம். அப்போது எங்களுக்கு அறிமுகமான ஒரு கலைஞர்தான் எஸ். ஜேசுரட்ணம்.

இவர் நிலஅளவைத் திணைக்களத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்த காலகட்டம், நாம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தோம். அப்படி அரசாங்க ஊழியர்கள் இணைந்து நாடகங்கள் நடாத்திய காலகட்டம் அது.

அந்தக் காலகட்டத்தில் அவர் மிகவும் வாட்டசாட்டமான தோற்றமுடையவர். முறுக்கிய மீசை, உரத்த தொனி, நுனிநாக்கினால் ஆங்கிலம் பேசும் வல்லமை இவற்றால் அனேகமாக நாடகங்களில் ஒரு பணக்கார தகப்பன் வேசமே கொடுப்பார்கள். பல நாடகங்களில் அவர் பணக்காரத் தந்தையாக நடிப்பார்.

நானும் அவரும் முதன்முதலில் இணைந்து நடித்த நாடகம் "பாசச்சுமை."

இந்த நாடகத்தில் புகழ்பெற்ற இலங்கை வானொலி அறிவிப்பாளர்கள் விமல் சொக்கநாதன், வி.என். மதியழகன் போன்ற பலரும் நடித்திருந்தார்கள். இதில் ஏழைத் தந்தையாக நான் நடிக்க, எனக்கு ஒரு பணக்காரச் சம்பந்தியாக ஜேசுரட்ணம் நடித்தார். இது போல பல நாடகங்களில் நாம் நடித்துக் கொண்டிருந்தோம்.

இதே காலத்தில் வானொலி நாடகங்களில் நடிக்கத் தொடங்கிய பொழுது, வானொலி நாடகத்துறை என்பது அப்பொழுது தேசிய சேவை, வர்த்தக சேவை, கிராமிய சேவை ஆகியவற்றில் இடம்பெற்று வந்தது.

நானும், என்னைப் போன்ற மற்றைய கலைஞர்களும் வர்த்தகசேவையிலும், தேசிய சேவையிலும் நாடகங்களில் நடிக்க ஆர்வம் காட்டிக்கொண்டிருந்த காலகட்டத்திலே, இளவாலை

எஸ். ஜேசுரட்ணம் கிராமிய சேவையிலே தனக்கென ஒரு முத்திரையினைப் பதித்து நாடகங்களை எழுதி, இயக்கி நடித்துக் கொண்டிருந்தார்.

அப்படி அவர் எழுதி நடித்து புகழ்பெற்ற நாடகம் தான் முகத்தார் வீடு. ஜேசுரட்ணம் தான் முகத்தாராக நடிப்பார். அந்த கிராமிய பாசை அவருக்கு மிகவும் சிறப்பாக வரும்.

நுனி நாக்கினால் ஆங்கிலம் பேசி நடிக்கும் பணக்காரத்தந்தையான இவர் மிக அழகாக கிராமியப் பாசையை மொழி நடையாகப் பேசுவார்.

அவருக்கு வாகடம் என்ற ஒரு விடயம் நன்றாகத் தெரியும். வாகடம் என்பது மிருகங்கள், மனிதர்களுக்கு வைத்தியம் செய்கின்ற சித்த வைத்திய முறை. அது பாடல் வடிவிலே இருக்கும். அதனை அவர் பாடலாகவே படிப்பார். அவரது அனேகமான நாடகங்களில் முத்திரையாகவே இந்தப்பாடல்கள் இருக்கும்.

இவர் எழுதி நடித்த நாடகங்களைக் கேட்டு ரசிக்க மிக அதிகமான ரசிகர்கள் இருந்தார்கள்.

தான் எழுதிய நாடகங்களை எல்லாம் தொகுத்து ஒரு புத்தகமாகக் கட்டி வைத்திருந்து எனக்குக் காட்டி மகிழ்ந்தார். தன் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கட்டிக் காப்பாற்றி வைத்திருக்கும் பண்பு அவரிடமிருந்தது.

"வாடைக்காற்று" திரைப்படத்தில் நானும் அவரும் நடித்ததும் ஒரு சுவாரசியமான விடயம் தான். அதில் அவர் பொன்னுக்கிழவனாகவும், அவரது பேரன் விருத்தாசலமாக நானும் நடித்தேன். "வாடைக்காற்று" திரைப்படம் அவருடன்தான் ஆரம்பிக்கின்றது. இதில் பல காட்சிகளில் ஜேசுரட்ணம் நடிக்கிறார்.

"வாடைக்காற்று" திரைப்படத்திலே ஒரு முக்கியமான அனுபவம். அதில் ஜேசுவும் நானும் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தப்பட்டோம். நீண்டதோர் காட்சி , ஒரு வளைவில் கமரா வைக்கப்பட்டிருக்கின்றது. ஒரே தடவையில் நாம் நடித்துவிட வேண்டும். தொழில்நுட்பவியலாளர்கள் எதிர்பார்த்தவண்ணம் நடித்துவிட்டோம். அத்தனை பேரும் எழுந்து நின்று கைதட்டி உற்சாகப்படுத்தி மதிப்பளித்தார்கள். ஜேசுரட்ணம் இப்படிப் பல சாதனைகளைப் புரிந்திருக்கிறார்.

1978ஆம் ஆண்டு முதன்முதலாக ஈழத்து தமிழ்த்திரைப்படம் ஒன்றுக்கு தேசிய விருது கிடைத்தது. அது "வாடைக்காற்று."

திரைப்படத்துக்குத்தான். அதிலே பொன்னுக்கிழவனாக நடித்த எஸ். ஜேசுரட்ணத்திற்கு சிறந்த துணை நடிகருக்கான தேசிய விருதும் கிடைத்தது. அதனை 1979ம் ஆண்டில் தான் வழங்கினார்கள். பின்னர் எஸ். ராம்தாஸ் தயாரித்த "கோமாளிகள்", "ஏமாளிகள்" ஆகிய திரைப்படங்களிலும், புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டிற்கு வந்ததன் பின்னர் பல தொலைக்காட்சி சித்திரங்களில் நடித்திருக்கிறார். இவரது "முகத்தார் வீடு" தொலைக்காட்சிப் படமாக கலைஞர் இரா. குணபாலனால் தயாரிக்கப்பட்டது. அதில் பல கலைஞர்கள் சேர்ந்து ஜேசுரட்ணத்துடன் நடித்திருக்கிறார்கள். அவருக்கு ஏற்பட்ட நோய் காரணமாக அவரது பல முயற்சிகள் தடைப்பட்டுப்போய்விட்டன.

அடிக்கடி தொலைபேசியூடாகப் பேசிக்கொள்வோம். பல மனக்கஷ்டங்களையும் என்னோடு அவர் பகிர்ந்திருக்கிறார்.

2006ம் ஆண்டளவில் ஜேசுரட்ணம் கனடாவுக்கு வருகைதந்த போது எனக்கு ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தினார். எனது "வொண்டபுள் வைத்திலிங்கம்" தொலைக்காட்சி நிகழ்ச்சியின் 100வது தொடர் பாராட்டு விழாவில் நேரடியாகக் கலந்து கொண்டு விருது வழங்கி என்னைப் பாராட்டி மகிழ்வித்தார். மகிழ்ந்தார். இதில் ஒரு சொற்பொழிவினையும் நிகழ்த்திச் சென்றார். இதுவே ஜேசுவை நான் கடைசியாகச் சந்தித்த சந்தர்ப்பம்.

இப்படிப் பல சிறப்புகளுக்குரிய அந்தக் கலைஞனை இழந்து நிற்கும் அவரது குடும்பத்தினரின் துக்கத்தில் ஈழத்துக் கலையுலக நண்பர்களுடன் சேர்ந்து நானும் பங்கெடுத்துக் கொள்கின்றேன்.

-அண்ணை றைற்
கே. எஸ் பாலச்சந்திரன்
நாடகபிரதியாளர், மேடை- வானொலி - தொலைக்காட்சி - திரைப்பட நடிகர்



## GREEN KINGS SPORTS CLUB
## கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகம்

### கலைகளின் மரணங்கள்

எனது சகோதரர் அமரர் கிறேகரி தங்கராசா அவர்கள் அமரர் முகத்தார் ஐயா அவர்கள்மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தவர். தனது "கலைக்கோவில்" நிறுவனத்தின் மூலமாக ஐயாவிற்கு "கலைப்பூபதி " என்னும் விருதினை வழங்கியும் கௌரவித்திருந்தார்

அமரர் முகத்தார் ஐயா அவர்களும் எங்கள் சகோதரர் அமரர் கிறேகரி தங்கராசா அவர்கள்மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தவர்

இவர்கள் இருவருமே கலை என்றால் குடும்பத்தையே மறந்துவிடுபவர்கள். கலை அரங்கங்கள்தான் இவர்களின் இல்லங்களாக இருந்தன. இவர்களின் மரணங்கள் சாதாரண மரணங்கள் அல்ல. கலையே மரணித்த மரணங்கள்.

சென்ற இடத்தில் இருவரும் இணைந்து கலைப்பணி ஆற்றட்டும்!


இங்கிருந்து நாம் அந்த கலைத் தெய்வங்களுக்கு ஆராதனை செய்வோம்.

- டேவிற் - குமார்
தலைவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




School photo - 1946





college photo - 1946






23rd Birthday 26.12.1954



25th Birthday 26.12.1956



Govt. officer in Colombo - 1960




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# Papa getting Awards












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாய்நிலத்தை
நாடகத்தால் உழுது பண்படுத்திய
நாடக உழவன்
விதைப்பதை நிறுத்திக் கொண்டான்
இலங்கை வானொலியில்
நாடக விருந்து படைத்த
கதம்பக் கலைஞன்
விருந்து படைப்பதை நிறுத்திக் கொண்டான்
முகத்தார் வீட்டு விவசாயத்தின்
மரக்கறியின் மணம்
எமது மனங்களில் இப்பொழுதும் மணக்கின்றது
வாடைக்காற்றில்
திரைத்தென்றலாக வீசிய காற்றை
கட்டிப்போட முடியுமா?
தமிழுலகில் வீசிக்கொண்டேயிருக்கும்
வில்லியே.லு.பெல் வீதிகளில்
தள்ளாத வயதிலும் தடியூண்டி
முதுமைக்கால வாழ்வை வாழ்ந்து காட்டிய
மூத்த முன்னோடி
முகத்தான் வீடு கண்சிவந்து கிடக்கின்றது
துயர்சுமந்திருக்கும் எம் உறவுகளே
உங்கள் துயர் எங்கள் துயர்
திரு ஜேசுரத்தினம் ஐயாவின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

**Villier le bel பிராங்கோ தமிழ் சங்கம்**

ஆசை மகளே இவ்வா!


BIRTHDAY GREETINGS

நாற்பத்திரண்டு (42) ஆண்டுகளாம்
அணி அணியாய் முடித்தாலும்
இருபத்து (20) ஆண்டுடைய
பறவைபோல பணிபுரியும்
உருவத்தோய்! உள்ளத்தோய்!
உயர்ந்தெழுந்த கோபுரமே!
இருபத்து நூறாண்டு
உயர்ந்து நீ வாழியவே!!!

உன் நிழலில் வாழும்
PAPPA.



'முகத்தார்' எஸ். ஜேசுறட்ணம்
'Mukaththar' S. Jesu Ratnam
2, Rue de L'Egalite
95500 Gonesse - FRANCE



# கண்ணீர் அஞ்சலி

இளவாலையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை ஜேசுரட்ணம் அவர்கள் 27-11-2010 புதன்கிழமை அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை கொள்கின்றோம்.

நிலஅளவைத் திணைக்களம், கல்வித்திணைக்களம், வன இலாகா, சந்தைப்படுத்தல் திணைக்களம் என்பவற்றில் உத்தியோகத்தராகப் பணியாற்றிய யேசுரட்ணம் அவர்களை நாடக நடிகராகவே நாடறியும். திரைப்பட நடிகராக, வானொலி நடிகராக, மேடை நாடக நடிகராக, தொலைக்காட்சி நடிகராகத் திகழ்ந்த ஜேசுரட்ணம் அவர்கள் ஒரு எழுத்தாளருமாகி தனது பன்முகப் பரிமாணங்களினால் மக்கள் மத்தியில் பேசப்பட்டவர். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கைத் தமிழ்மக்கள் மத்தியில் பேசப்பட்ட சிறந்த நடிகர்களுள் முகத்தார் ஜேசுரட்ணமும் ஒருவர் என்பதே இவருக்கான கௌரவமாகும்.

1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தேசிய சேவையில் நாடக கலைஞராக தமிழ் நேயர்களுக்கு அறிமுகமான ஜேசுரட்ணம் "முகத்தார்வீடு" என்ற தொடர்நாடகத்தில் தனது முத்திரையை பதித்துக்கொண்டார். இதனால் இவர் முகத்தார் ஜேசுரட்ணம் என்று அழைக்கப்பட்டார். அன்றைய காலகட்டங்களில் "முகத்தார்வீடு" நாடக நேரத்துக்காக வானொலிக்கருகில் குழுமியிருந்த காட்சி இன்றும் பசுமையாக எங்கள் முன்னால்... ஆனால் முகத்தார் மட்டும்......

"வாடைக்காற்று" திரைப்படத்தில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்த ஜேசுரட்ணம் யாழ்ப்பாண வட்டாரவழக்கு சொற்களை சரளமாகப் பாவித்து மக்களின் வரவேற்பைப் பெற்றமை மறக்க முடியாத செய்தியாகும். வட்டார வழக்குச் சொற்களை பேச்சுத் தமிழில் நகைச்சுவைக்காக மட்டுமன்றி காத்திரமான படைப்புகளிலும் கையாள முடியும் என்பதை எடுத்துக்காட்டியவர்.

தனது நடிப்பாற்றலால் இளையதலைமுறை நாடக நடிகர்களுக்கு வழிகாட்டியாய் திகழ்ந்த ஜேசுரட்ணம் அவர்களின் மறைவு பேரிழப்பாகும். ஜேசுரட்ணம் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், அவரது கலையுலக நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி

தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி
Tamilischer Schriftsteller Verein - Deutschland
Tamil Writer`s Association - Germany



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்புடன் அப்பா யேசுவுக்கு,

உங்கள் அன்புப் பிள்ளையின், ஆவிக்குரிய நிலையில் இருக்கும் உங்களுக்கு எழுதும் கடிதம்.
இயேசுவின் பிறப்பு எம் எல்லோர் பாவங்களையும் போக்கி, எம்மை சுத்திகரிக்க எமக்கு கிடைத்த கி.பி என்ற காலத்தில் வாழ்ந்த பெருமை எமக்குண்டு.
அன்பின் இருப்பிடம் அவர். அவர் அன்பைப் பெற்று, அதைப் பகிர்ந்து எமக்கு நீங்கள் தந்த அன்பில் எல்லோரும் நிலைத்திருக்கின்றோம்.
கிறீஸ்து இயேசுவின் வாக்குப்படி அவர் திரும்பவும் வருவார்.

1. இரகசிக வருகை
2. பகிரங்க வருகை

அவரை முழுமையாக ஏற்றுக் கொண்டவர்களுக்கே இக்கூற்றை ஏற்றுக் கொள்ள முடியும்.
கிறீஸ்துவின் வருகையானது எவராலும் மறைக்க முடியாத உண்மை. அது இப்போது தீர்க்க தரிசனம்தான்.
அது எப்போது வேண்டுமானாலும் நிறைவேற முடியும். அவரது வருகை பற்றிய குறிப்புக்கள் நம்மை காத்திருக்க அழைப்பு விடுக்கின்றன.
கிறீஸ்துவுக்கான காத்திருப்பு என்பது வானத்தை அண்ணாந்து பார்த்து வாளா இருப்பதல்ல.

அவருக்காக இருளுக்கு எதிராக வாளாகப் போராடுவது ஆகும்.
அவரது வருகையைப் பற்றி உறுதியுடைய விசுவாசிகளின் சுவடுகளில் சுறுசுறுப்பு இருக்கும்.
குறுகிய வாழ்நாட் காலத்தில் மிகுதியாக உழைக்க துரிதப்படுவர்.
கிறீஸ்து எப்போது வந்தாலும் அவர்கள் கலங்குவதில்லை.
ஒருவேளை சில ஆண்டுகள் கூட தாமதித்தால், வாழ்க்கை ஓட்டத்தை முடிக்கும் தருவாய் ஏற்பட்டால் பரதீசின் நிழலில் இளைப்பாறுவோம்.
அங்கும் அவரது காத்திருப்பு தொடரும், மகிழ்ச்சி என்னவென்றால் அவர்வரும் நாளில் முதலில் எழுவது மரித்தோர் அல்லவா? *(1 தெச 4:15)*

அன்புடன்
சாம்சன், ஜெயந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யேசு(வின்) ரத்தினம்

**தமிழ்அரங்கு**

Tamlisches Théâter e.v/Théâtre Tamoul / Tamil Theatre

ஒரு மாபெரும் கலைஞனாய், படைப்பாளியாய், அரங்கைச் சிரிக்க - சிந்திக்க வைக்கும் பேச்சாளனாய், பாசமிகு தந்தையாய், தலைவனாய், அனைத்திற்கும் மகுடமாய் ஒரு நல்ல மனிதனாய் வாழ்ந்தவர் ஜேசுரட்ணம் அவர்கள்.
எந்தக்காலத்திலும், எந்தச்சூழலிலும் முகம்மூடி அணியாது தன்முகத்தோடு வாழ்ந்தவர். அதனால் தான் அவர் என்றும் எல்லோருக்கும் முகத்தார்.
அவர் கால்பட்ட அரங்குகள் சிரித்து மகிழ்ந்தன. அவரது சீர்மிகு கருத்துக்களால் எழுந்துநிமிர்ந்தன.
சோர்வைக்களைந்து விழித்துக் கொண்டன.
வானொலியும், அரங்க வெளிப்பாடும், அவரது கலைமுக நட்பால் கைகுலுக்கிக் கொண்டன.
கார்த்திகை 27 தமிழர் இதயங்கள் கண்ணீர் சிந்தும் நாளன்று. எங்கள் முகத்தாரும் கண்மூடிக்கொண்டார் என்ற செய்தி கேட்டு தமிழ்அரங்குகளும் ஒரு கணம் செயலிழந்து ஆறாத்துயரில் தம்மையும் இணைத்துக் கொண்டன.

நம்புவோம் நாம் - இனி
எங்கெல்லாம் எம்மவர் அரங்குகள் ஆற்றுகை புரியுமோ
அங்கெல்லாம் எங்கள் முகத்தார் மறைவாய் அமர்ந்திருந்து
பார்த்து ரசிப்பார் - மகிழ்வார் - ஆசிர்தருவார்
உண்மைதான்
மக்களை நேசித்து வாழ்பவர்களுக்கு ஏது மரணம்
ஆயினும் ஐயனே
அத்தான் என்று நான் அழைக்கும் போதெல்லாம்
தொலைபேசியின் மறுமுனையிலிருந்து டேய் அரியம்
என்று பாசம் தோய்த்து, கம்பீரம் கலந்து வருமே
உங்கள் குரல் - அதை இனிநான் கேட்கப்
போவதில்லையே??
எனது வாழ்நாள் வரை அது எனக்கு ஆறாத துயரம்தான்

என்றும் மறவாத மனதோடு
- **எம் அரியநாயகம்**

Willem-van-vloton str.7
44263 - Dortmund - Germany
30,rue de tourville
93600 Aulnaysous Bois - France

Sekretar:/Sec.
Karthikesu: Nallaiah (France)
Kassiere;/tres
Singarajah Santhiogu (Germany)
Stellvertr.vorsitzender:
vorsitzender: Ariyanayagam Manuelpillai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கலைஞர்களுள்

# முதல் மனிதர்

## முகத்தார்

இலங்கை வானொலியில் பணிபுரிந்த பலர் வானொலி நட்சத்திரங்களாகப் பிரகாசித்திருக்கின்றார்கள். அப்படிப் பிரகாசித்த பல நட்சத்திரங்கில் வெள்ளி நட்சத்திரமான எங்கள் அத்தார் அவர்கள் ஐந்து ஆண்டுகள் தொடராக "முகத்தார் வீடு" என்னும் நாடகத்தை எழுதி இயக்கி நடித்த அந்த நாடகம் ஒரு சாதனை அல்ல அது வரலாறு.

இவர் மேடை, வானொலி, தொலைக்காட்சி, சினிமா என எல்லாத்துறைகளிலும் புகழ் பூத்த நட்சத்திரக் கலைஞராக வலம் வந்தார். அவர்தான் அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் எங்கள் "முகத்தார்" எஸ். யேசுரட்ணம் அவர்கள்.

என்றும் சிரித்த புன்னகை மன்னனான இவர் புலம் பெயர்ந்து பிரான்ஸ் வந்த பின்பு அவரை எனக்கு அறிமுகம் செய்துவைத்தவர் நண்பர் எஸ்.கே.ராஜன் அவர்கள்.

இவர் இங்கு வந்ததும் இவருடைய "முகத்தார் வீடு" நாடகத்தை எங்களது ஆர்.ரி.எம். பிறதேஸ் நிறுவனம் சார்பாக சின்னத்திரைக் காவியமாக்கினோம்.

தொடராக அவரோடு I.B.C., A.B.C. வானொலி மற்றும் T.T.N. தொலைக்காட்சியோடு மேடைகள் சின்னத்திரையென இந்த மாபெரும் கலைஞனுடன் நான் இணைந்து நடித்தது எனக்க கிடைத்த வரப்பிரசாதம் என்றே நான் கருதுகின்றேன்.

இந்த நிகழ்வுகளே எனது கலைத்துறை பதிவுகளுக்கு மணி மகுடமாக நான் கருதுகின்றேன்

அத்தார்
பூவோடு இணைந்து புகழ்பெற்ற வாழைநார் போல
உங்களோடு இணைந்து நடித்த பெருமையில்
நாங்களும் மகிழ்வு கொள்கின்றோம்

உங்கள் இழப்பில் எங்கள் குடும்பமே
மகிழ்விழந்து நிற்கின்றது

நீங்காத் துயருடன்
இரா-குணபாலன் (குடும்பத்தினர்)
(ஆர்.ரி.எம்.பிறதேஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**லண்டன் தமிழ்வானொலி - வியாழன் கவிதை - 02-12-2010**

*அமரர். சந்தியாபிள்ளை - யேசுரட்ணம்*
*"கலைமாமணி" முகத்தார். யேசுரட்ணம்*
*மண் மகிழ- 26-12-1931 கண் கலங்க - 27-11-2010*
*இறுதிக்கிரிகைகள் 4-12-2010 சனிக்கிழமை - பாரிஸ் - பிரான்ஸ்*

# முகத்தார் என்னும் கலைவள்ளல்!....

*(கவிதை இல- 335)*

சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் நாடகத்துறைக்கு அரும்பணி புரிந்தவரும், கலை இலக்கியவாதியும், எழுத்தாளரும், தமிழ்ப்பற்றாளருமாகப் பல்துறைகளில் பரிணமித்த கலைமாமணி முகத்தார் யேசுரட்ணம் அவர்களுக்கு எனது அஞ்சலிக்கவிதை...

பல்வளம் கமழும் இளவாலை ஊரில் பிறந்தவரே
சொல்வளம் கமழும் முத்தமிழ் வித்தகரே
எல்லைகள் தாண்டி பாரிசில் வாழ்கையிலே
பொல்லாத காலனவன் உம் உயிரைப் பறித்தானே...

தாய்மண்ணில் வாழ்ந்த காலத்தில் நீங்கள்
மாய்ந்து உழைத்தீர் முத்தமிழ் உயர்ந்திடவே
தேய்திடாத நட்புக்களுடன் ஒன்று சேர்ந்தே
ஓய்ந்திடாமல் கலை உலகைக் கட்டி வளர்த்தீரே...

நகைச்சுவை உணர்வால் உலகை ஆண்டாய்
பகைவர்களையும் நண்பராக்கி பகைதனை ஒழித்தாய்
தகைசார் அறிவாளிகளையும் உன்வசம் சேர்த்தே
தொகையான கலைஞர்களையும் உருவாக்கி மகிழ்ந்தாய்...

தேடற்கரிய பொக்கிஷமாம் தமிழ்க் கலைகளில்
நாடகத்துறைக்கு நீங்கள் ஆற்றியதோ ஐம்பது ஆண்டுகள்
ஊடகங்களிலும் இனிய குரலால் கொள்ளை கொண்டீரே
வாடா மல்லிகையே வான்புகழ் கலைஞனே ___ உம்பிரிவால்....

உலகத்தமிழ்க் கலைஞர்கள் வாடி நிற்கிறார்கள்
பலகாலம் உம்மோடு வாழ்ந்த கலை நட்புக்களும்
கலக்கமடைந்து உம் நினைவுகளைச் சுமக்கையில்
விலகியே செல்கின்றீர் விடைபெறும் நாயகனே....

தணியாததாகம் தந்து இலங்கை ரசிகர்களைக் கவர்ந்தீர்
துணிவோடு மேடை நாடகங்களில் மூவினங்களையும் கவர்ந்தீர்
பணியாது சமூகக் கருத்துக்களைகூறி சிந்தனையை வளர்த்தீர்
மணிபோல் ஒலித்த உம்குரலை நாம் இனி எங்கே கேட்போம்....

மாசுபடாக் கலைஞனே மானசீகத் தமிழ் மைந்தனே
காசு பணம் பாராது கலையைக் கட்டிவளர்த்த மாமேதையே
யேசு என்னும் திருநாமம் கொண்ட ஒளிவிளக்கே
வீசுவாய் என்றும் தென்றலாய் கலை உலகப்பரப்பில்....

**லண்டன் தமிழ் வானோலி நேயர்கள், ஜேர்மனி மண் சஞ்சிகையின் வாசகர்கள் சார்பில் கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்..**
**வ.சிவராசா டியூஸ்பேர்க், ஜேர்மனி** ***01.12.2010.***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100/65 புள்ளி பெற்ற பொன்னுக்கிழவர்

இலங்கையில் தயாரான தமிழ் திரைப்படங்களில் மிக தரமான திரைப்படமென ரசிகர்கள், பத்திரிகைகள், விமர்சனர்களால் பாராட்டுப்பெற்ற படம் "வாடைக்காற்று". அந்த திரைப்படத்தில் பொன்னு என்னும் கிழவன் பாத்திரத்தில் முகத்தார் யேசுரட்ணம் அவர்கள் நடித்திருந்தார். இப்படத்தைப்பற்றி விமர்சனம் எழுதியிருந்த பத்திரிகைகள் அனைத்தும் பொன்னு பாத்திரத்தைப்பற்றி குறிப்பிடாமல் விட்டதில்லை. 09-04-78ல் வெளியான சிந்தாமணி பத்திரிகையில் விமர்சகர் கு.ம.சுந்தரம் அவர்கள் ஆனந்தவிகடன் பாணியில் இப்படி விமர்சனம் எழுதியிருந்தார்.

கமலாலயம் கலைக்கழகம் தந்த நடிகர்கள் படத்தில் நன்றாக சோபித்தார்கள். ஜவாகர், லடீஸ் வீரமணி, வசந்தா ஆகியோர் தம் பாத்திரங்களை நேர்த்தியாக செய்துள்ளார்கள். A.E. மனோகரன், டாக்டர் இந்திரகுமார் ஆகியோரைவிட K.S.பாலச்சந்திரனே மனதில் நிற்கின்றார். அவர் தோன்றும் காட்சிகள் இயற்கையாக இருக்கின்றன. சிறப்பாக நடித்திருப்பவர் யேசுரட்ணம்தான். அவர் நடிப்பில் நிறைந்து நிற்கின்றார். தந்தை பிரான்ஸிசை விட தாய் வசந்தா சிறப்பாக நடித்துள்ளார்.
ஜவாகரும், லடீஸ் வீரமணியும் நன்றாக நடித்துள்ளார். நடிகர்களில் 10 பேரைத் தெரிவு செய்தால் அவர்களுக்கு பின்வருமாறு புள்ளி வழங்காலம்.

| | | |
|---|---|---|
| 01 | எஸ்.யேசுரட்ணம் | 65 |
| 02 | கே.எஸ். பாலச்சந்திரன் | 60 |
| 02 | கே.ஏ.ஜவாகர் | 58 |
| 04 | வசந்தா-அப்பாத்துரை | 56 |
| 05 | லடீஸ் வீரமணி | 50 |
| 06 | ஏ.ஈ.மனோகரன் | 45 |
| 07 | சந்திரகலா | 40 |
| 08 | ஆனந்தராணி | 35 |
| 09 | டாக்டர் இந்திரகுமார் | 30 |
| 10 | எஸ்.எஸ். கணேசபிள்ளை | 28 |



இப்படியாக நூற்றுக்கு அறுபத்தைந்து புள்ளிகள் வாங்கி கலைப்பள்ளியில் முதல் மாணவனாக வந்த முகத்தார் அவர்கள் அந்த பொன்னுக்கிழவன் பாத்திரத்திற்கு தான் தேர்வான விடயத்தை ஒரு செவ்வியில் இப்படிக் கூறுகின்றார்.

## சில்லையூரான் போட்ட பிச்சை பொன்னுக்கிழவன்!

"உண்மையில் நடிகர் தேர்வில் நான் தேர்வாகவில்லை அன்றைய நாட்களில் இலங்கையில் வானொலியிலும், சினிமாத்துறையில் சில்லையூர் செல்வராசனுக்கு இருந்த செல்வாக்கும், அனுபவமும் காரணமாக அவரைத்தான் அந்தப் பாத்திரத்தில் நடிக்கவைப்பதாக இருந்தார்கள். ஆனால் சில்லையூரான்தான் இந்தப் பாத்திரத்திற்கு எங்கள் யேசுரட்ணம்தான் பொருத்தமாக இருக்கும் எனக்கூறி தனக்குக் கிடைத்த அந்த வாய்ப்பை எனக்கு தானமாக தந்தார். உண்மையில் சில்லையூரான் போட்ட பிச்சைதான் பொன்னுக்கிழவன் பாத்திரம்.

## ஜனாதிபதி விருதும், விவசாய மன்னர் பட்டமும்

1978ம் ஆண்டு சிறந்த திரைப்படத்திற்கான விருதை இலங்கை அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொண்ட வாடைக்காற்று படத்தில் பொன்னுக்கிழவனாக நடித்த யேசுரட்ணம் அவர்களுக்கு சிறந்த துணை நடிகருக்கான ஜனாதிபதி விருதும், பின்னர் விவசாய மன்னர் பட்டமும் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு. முகத்தார் ஜேசுரட்ணம் அவர்கள் எனது மானசீககுரு

திரு முகத்தார் ஜேசுரட்ணம் அவர்கள் எனது மானசீக குரு. அவர்களை 1987ம் ஆண்டில் இருந்தே எங்களுக்கு தெரியும். முதன் முதலில் நாங்கள் திருச்சியில் வசித்தபோது «ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்» நடாத்திய இளைய ஈழம் கலை சந்திப்பு எனும் நிகழ்ச்சி 1987 திருச்சி சுசு சபா மண்டபத்தில் நடந்தபோது திரு முகத்தார் ஜேசுரட்ணம் அவர்கள் எங்களை எல்லாம் கூட்டி சிரிக்கும் சிலைகள் என்னும் நாடகத்தை நடாத்தினார். அதில் கி.ஆ.பெ விஸ்வநாதம் அவர்களின் தலைமையில் எங்கள் குழுவினருக்கு முதல்பரிசு கிடைத்தது. அன்று முதல் இவருடனான தொடர்பு வேர்விட்டு வளர்ந்தது. அதன் பின்னர் நான் 1989ம் ஆண்டு எனது சிவில் எஞ்சினீரிங் படிப்பு தொடர்பாக சென்னை சென்றபோது நடந்த சம்பவங்கள் என்னால் இன்றுவரை மறக்க முடியாதவை.
முதன்முதலாக நான் சென்னை சென்றபோது சென்னையில் எனக்கு யாரையுமே தெரியாது. அப்பொழுது திரு. ஜேசுரட்ணம் அவர்கள் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகத்தில் திருச்சி மண்டல பிரிவில் பொறுப்பாளராக இருந்து சென்னைக்கு வந்திருந்தார். நான் அவரிடம் உதவி என கேட்டபோது அவர் திரு. சந்திரகாசன் ஐயா அவர்களையும் செல்வி சூரியகுமாரி அவர்களிடமும் பேசி என்னை அவர்கள் அலுவலகத்தில் இலவசமாக தங்கிக் கொண்டு கல்லூரி செல்லவும், சனி, ஞாயிறு கிழமைகளில் அதே அலுவலகத்தில் வேலை செய்யவும் அதற்கு ஒரு சம்பளம் பெற்றுக்கொண்டு எனது படிப்பைத் தொடர உதவியதை மறக்க முடியாது. கிட்டத்தட்ட 1987ம் ஆண்டு முதல் அவர் பிரான்ஸ் வரும்வரை அவருடன் ஒரே அலுவலகத்தில் படுத்து, உறங்கி, சாப்பிட்டு வாழ்ந்த வாழ்க்கை எனக்கு மட்டுமே கிடைத்தவரம்.
அவருக்கு பிடித்தது என்ன? பிடித்த சாப்பாடு என்ன? பிடித்த உடுப்பு என்ன? என மட்டுமே நன்றாகத் தெரியும். அதே வேளை எனது லீவு நாட்களில் அவரிடமிருந்து நிர்வாகத்தந்திரம், ஆங்கிலம், கலை அறிவுகள் என்பவற்றை கொஞ்சம் கொஞ்சமாகக் கற்றுக் கொண்டதை நான் என்றுமே மறக்க முடியாது. எத்தனை இரவுகள் நாங்கள் இன்பமாக சிரித்து வாழ்ந்திருந்தோம் என்பது எனக்கு மட்டுமே தெரியும். அது மட்டுமல்லாது அவருடன் பல அகதிமுகாம்கள், திருச்சி, திருநெல்வேலி, மதுரை, ஈரோடு, சேலம் போன்ற இடங்களுக்கு கார், வான், ரயில் போன்ற வாகனங்களில் ஒன்றாக பயணித்து மகிழ்ந்திருந்தோம்.
மிக முக்கியமாக அவரது சகாக்கள் «வாடைக்காற்று» புகழ் ஈழத்து இரத்தினம், வானொலி மாமா இரு இரா. பத்மநாதன், நான், திரு. அரு. கோபாலன், இசையமைப்பாளர் வி.எஸ். உதயா, டாக்டர். ஜெயலச்சுமி, தேவராஜா போன்றவர்கள் ஒன்றாக இணைந்து கலைக்கழகம் ஒன்றை ஆரம்பித்து அதற்கென அகதிகளின் அவல வாழ்க்கைகளை பிரதிபலிக்கும் பல பாடல்களை உண்டாக்கி அதனை பல தமிழக அரசியல் தலைவர்கள் முன்னிலையில் பாடி வரவேற்புகள் பெற்றோம். அத்துடன் பல அகதி மாணவர்களுக்கு கலைப் பயிற்சிகளும் வழங்கினோம். இப்படிப்பட்ட சம்பவங்களில் நான் அவருடன் கூட இருந்தது இயங்கியது மறக்கவே முடியாத சம்பவம். மற்றவர்களை விட, எழுதுவதற்கு எனக்கு நிறைய விஷயம் இருந்தாலும் எழுதுவதற்கு வார்த்தைகள் வரவில்லை. அவரால் பயனடைந்த என்னைப் போன்ற சில மாணவர்களும், பல்லாயிரம் இலங்கை அகதி மக்களும், மாணவர்களும் முகத்தார் ஜேசுரட்ணம் அவர்களை மறக்கவே முடியாது. அவர் ஆற்றிய சேவைகளும், உரைகளும் என்றென்றும் பசுமரத்து ஆணிபோல் பதிந்து இருக்கின்றன.
ஜேசுரட்ணம் அங்கிள் நன் உங்களை ரொம்பவே மிஸ் பண்ணுகின்றேன். நீங்கள் அடிக்கடி என்னை கூப்பிடும் «பண்டி» எனும் வார்த்தை என் காதில் ஒலித்தபடியே உள்ளது....

இப்படிக்கு கேசவன்
Mairie dea Lillas







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பின் சொந்தக்காரன் முகத்தார்



முகத்தார் யேசுரட்ணம் கலைமாமணி
கலைபூபதி கலைவேள் கலைமுரசு
கலைப்பணிசெல்வன் கலையுலகம்
கொடுத்தபட்டம் விருதுகள்
ஆங்கிலத்தின் ஆசிரியன் நாடகவாசிரியன்
மேடைநாடக வானொலிநாடக நடிகன்
முகத்தார்வீடு முகத்தாருக்கு பெயர்கொடுத்தது
முகத்தார் என் மண்ணுக்கும் என் தமிழுக்கும்
புனிதகென்றிஸ் பாடசாலைக்கும் புகழ்கொடுத்தார்

முகத்தார் என்பது சிரிப்பு - சிரிப்பு என்றால் முகத்தார்
சிரிப்பென்ற தேசத்தின் உரிமையாளன்
சிரிப்பே இவரது கலை சிரிக்கத்தெரிந்த
ஒரேயொரு உயிர் மனிதவுயிர் என்பதை உணர்ந்தவர்
சிரிக்கவைத்தே கலைஞர்களை தன்வசம்
இழுத்துக் கொண்டவர்
மிகுந்த தத்துவஞானி சிரிப்பே சிரிப்பே
எங்கு இருக்கிறாய்
ஒருமுறை உம்சிரிப்பின் ஒலிகேட்க
விரும்புகிறேன் மறுமுறை நாம் நிரந்தரம்
ஆனவர்களில்லை என்பதை உம்பிரிவில்
சிரிப்பில் புரிகிறேன்
உம்மைவழியனுப்ப வந்தவர் அழுதுவடித்தனர்
நீர் சிரிக்கவைத்தீர் இவர்கள் அழுதுவடித்தனர்
அறிந்தேன் சிரிப்பின் அர்த்தத்தை
உமக்கு எதிரியேயில்லை எதிர்ப்பவருமில்லை
கோபமும் வருவதில்லை வந்ததுமில்லையென
உமது குடும்பத்தவரும் நண்பர்களும் உறவுகளும்
பெருமைகொள்கிறார்கள்
என் கலையுள்ளம் பெருமையடைகிறது
கலைஞனே கலைகளுக்கு தகுதிபெற்றவரே
நற்பண்புகளை மனிதவுணர்வுகளில் விதைப்பதே
சாந்திபெறுவதாகும் புரிந்தவள் நான்
முகத்தாரே உமது கருப்பு கண்ணாடியும்
நீண்டமீசையும் வெள்ளைவேட்டியும்
வெள்ளைசிரிப்பின் அடையாளமாகும்
மற்றவர் துன்பத்திலும் ஏழ்மையிலும்
கடமையாற்றியவரே மனிதம் நிறைந்த
மனிதனாக எண்ணி மகிழ்கிறேன்
முகத்தாரே உம் முகத்திற்கு முன்னே
பலமுறை பாராட்டினேன்
இன்றும் பாராட்டுகின்றேன்
இன்று நீர் பிரிந்து நாற்பத்தொரு நாளாவது துக்கநாள்
உமக்கு பிரிவேயில்லை மரணமில்லை
சிரிக்கத்தெரிந்த ஒவ்வொரு மனதிலும் வாழுகின்றீர்
சிரிக்கவைத்த உம்மை சிரித்தமுகத்துடனேயிருக்கும் உம்மை
சிரிப்பிற்கு விருதுபெற்ற உம்மை
சிரித்த முகத்துடனே வழியனுப்ப முடியாது
நானும் சினந்து நின்றேன்
சிரிப்பின் தந்தையே உம்
சிரித்த காவியம் என் கைகளில்
காவியமாகிறது தந்தையே முகத்தாரே
சிரிப்புடனே செல்லுங்கள் விடைதருகின்றேன்
மரணித்தும் மனிதன் மண்ணில் வாழவேண்டும்
என்ற வாக்கியத்தை நிஜமாக்கியவரே
விடைதருகிறேன் சிரிப்புடனே செல்லுங்கள்

**ஜெயா பத்மநாதன்**
*(பிரான்ஸ்)*
*(18. 12. 2010)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகத்தாரின் மனைவி தெய்வானையாக ஜேசு அங்கிளுடன் நடித்ததில் பெருமையடைகிறேன்

- ஏ. எம். சி. ஜெயஜோதி

இலங்கை வானொலியில் ஐந்து வருடங்களுக்கு மேலாக ஒலிபரப்பாகி வந்த "முகத்தார் வீடு" நாடகத்தில் முகத்தாராக நடித்து பல்லாயிரக்கணக்கான நேயர்களின் நெஞ்சங்களில் குடி கொண்டிருக்கும் எஸ்.ஜேசுரட்ணம் "அங்கிள்" இறந்துவிட்டார் என்ற செய்தியை எஸ்.கே.ராஜென் அவர்கள் மூலம் அறிந்து ஆழ்ந்த கவலையடைந்தேன்.

"முகத்தார் வீடு" நாடகத்தில் முகத்தாரின் மனைவி தெய்வானையாக ஜேசுரட்ணம் அங்கிளுடன் நடித்தேன்.

எனது அன்புத் தம்பி சரவணையாக எழில்வேந்தனும் நடித்தார். நாம் மூவரும் ஒரு குடும்பத்தின் அங்கத்தினர் போலவே எல்லோர் முன்னிலையிலும் காட்சியளிப்போம்.

ஜேசுரட்ணம் அங்கிள் எனக்கு எழுதும் கடிதங்களில் எல்லாம், "எனது அன்புத் தெய்வானைக்கு" என்று தான் விழித்து எழுதுவார்.

பழகுவதற்கு இனிய பேர்வழி, நடிப்புக்கு இமயமலைச் சிகரம். நடிப்பில் ஏற்ற இறக்கம், ஏனைய நுணுக்கங்கள் என்பவற்றை சிறியவளாகிய நான் அவரிடமிருந்து கற்றுக் கொண்டேன்.

விவசாய நாடகங்களில் மட்டுமல்லாது எல்லோரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் "கதம்பம்", சனிக்கிழமை இரவு 9.30க்கு ஒலிபரப்பாகும் கிராம சஞ்சிகை நாடகங்கள் போன்றவற்றிலும் ஜேசுரட்ணம் அங்கிளுடன் நான் இணைந்து நடித்ததை என் உயிருள்ளவரை மறக்க முடியாது.

முகத்தாரின் மகள் கலாவும் நானும் இளவாலை சென் ஹென்றிஸ் பாடசாலையில் அட்வான்ஸ் லெவெல் படித்தோம். அவரது அப்பாவின் மனைவியாக நாடகத்தில் நடிப்பதையிட்டு அந்தக்காலத்தில் சிரிப்போம்.

ஜேசு அங்கிள் நல்ல நிலையில் இருந்த ஒரு கலைஞன். இன்றும் கூட அவரைப்பற்றி ஏனைய கலைஞர்கள் கதைப்பார்கள். அவரோடு நடித்தவர்கள் எல்லாம் அவரைப்பற்றித்தான் கூறுவார்கள். அவரின் நடிப்பு, வார்த்தைகளை வெளிப்படுத்தும் விதம், அவரது கிராமியச் சொல்லாடல்கள் என்றெல்லாம் சிலாகித்துப் பேசிக் கொள்வார்கள்.

தான் இறந்த பின் தனக்கு என்னென்ன நடக்கும் என்பதை "பயணம்" என்ற நாடகத்தின் மூலம் முன்னர் வெளிப்படுத்தியிருந்தார். அந்த நாடகத்தில் நடிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அந்த நாடகத்தைக் கேட்டு நானே அழுதேன். அந்தளவுக்கு உருக்கமான நாடகம்.

ஜேசு அங்கிளின் இடத்தை நிரப்ப எவரும் இல்லை என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். அவர் ஒரு மாபெரும் கலைஞன். அவர் இல்லை என்று எண்ணும் போது துயரம் தாங்க முடியவில்லை.

ஜேசு அங்கிளை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை மனத்துடையோன்
நல்ல குணத்துடையோன்
முழுமதி எங்கள் "முகத்தார்" யேசுரட்ணம்

வாடாத முகத்தோடு வரவேற்கும் முகத்தானே
வாயார வாழ்த்துவோனே
கூடாத கொள்கைகளை கொள்ளா மனத்தோனே
குவலயம் போற்றுவோனே
இளவாலை என்னும் இனிய ஊர் பெற்றெடுத்த
இன்பமே யேசுரட்ணமே
கல்வியில் தீரனாய் கலைகளில் சூரனாய்
காட்டிநின்றீர் உம் திறமைகளை.

ஐந்தாறு தடவைகள் கொழும்பிலே நின்றீர்
வன்செயல்கள் பாதிப்பினால்
கலவரங்கள் கண்டாலும் அகதியாய் நின்றாலும்
கலங்காத கலைஞன் நீர்
இயலாத வயதிலும் முடியாத நிலையிலும்
இளவயதுக் காளையைப்போல
மேடையில் நின்று நீர் ஒலிவாங்கியைத் தாங்கினால்
உம் வருத்தங்கள் விலகியோடும்

வெள்ளை மனமும் நல்ல மனமும் கொண்ட
எங்கள் முகத்தாரே
துடுக்குமீசை நெடுக்கும் பார்வை
அடுக்கு மொழியில் அழகு தமிழ்
அத்தனையும் குறையாத உத்தமனே முகத்தாரே
வானொலியுடன், மேடைகள் மட்டுமல்ல
சின்னத்திரை, பெரியதிரை அத்தனையும்
கைவாகாய் கையாளும் கற்றவரே
சிறுவரையும், முதியோரையும்
கற்றோரையும், மற்றோரையும் என்றும் சமமாக
எண்ணியன்றோ மதித்து நின்றீர்.

பெருமைகள் ஏதுமின்றி சிறுமைகள் செய்தறியா
பேராளனே சீராளனே எங்கள் அன்பு முகத்தாரே
நீங்கள் எங்கள் மனங்களை கவர்ந்தவர்
நீங்கள் எங்கள் மனங்களைக் கரைத்தவர்
நீங்கள் எங்கள் மனங்களில் நிலைத்தவர்
நீங்கள் எங்கள் இதயங்களில் வாழ்கின்றீர்கள்

எங்கள் குடும்பம் சார்பாகவும், சக கலைஞர்கள்
சார்பாகவும் உங்களது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த
இரங்கலையும், அனுதாபங்களையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

செபமாலை - ஆனந்தன் குடும்பத்தினர்
*(பிரான்ஸ்)*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதருள் மாணிக்கம் மாபெரும் கலைஞர் மாமனிதன் முகத்தார்

கலைக் காவலன் காவிய நாயகன்,
கால் பதித்த இடமெலாம் வளமிகு கலைச்சேவை,
கலைக்கோர் முகவரியாய் பிரமனுமைப் படைத்தாரோ? என வியந்தோம்!
சிரிப்போடு படையலிட்டுச் சிந்திக்கவைத்தீர்,
முனைப்போடு நிகழ்காலக் கலைபடைத்தீர்,
பாசத்தை வளர்க்கவெனப் பாரினில் பிறப்பெடுத்தீர்,
நேசத்தைக்கொட்டி நெஞ்சுருகவைத்தீர்.
மிடுக்கான தோற்றம் நேர்கொண்ட பார்வை,
செழிப்பான மொழியழகு, தற்பெருமைகொள்ளா குழந்தையுள்ளம்,
காண்போரைக் கவர்ந்திழுக்க!
இளசுக்கும், பெரிசுக்கும் எல்லோர்க்கும் அன்புமிகு நண்பனாய்
இவைதானும் சொத்தென்றீர்!
மானிடத்தை நேசித்த மாமனிதன், மனிதருள் மாணிக்கம்!
ஓய்வின்றி வீசிய கலைத்தென்றல்
கலைக்காவியமாய் காலமெல்லாம் ஒளிவீசும்.



கருணைவேல் யோகினி குடும்பம்
பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கையே கலையாக்கிக் கொண்டவர் கலைஞர் யேசுரட்ணம்

ஜனாதிபதி விருது, கலைமுரசு விருது, "முகத்தார்" கௌரவ விருது, "விவசாய மன்னன்" விருது, "கலைப்பணிச் செல்வா", "கலைவேள்"கௌரவ விருது, "கலைப்பூபதி"விருது, "கலைமாமணி"விருது, "நகைரசவாரி" போன்ற விருதுகளைப் பெற்றவரும், நாடகத் துறையையே தன் வாழ்க்கையாக்கி நாடகத்துறையில் தனக்கென தனித்துவமான பாணியை வரித்துக் கொண்ட முகத்தார் யேசுரடணம் அவர்கள் மிக எளிமையான சுபாவம் கொண்டவர்.

"அங்கிள்" என நான் அன்போடு அழைக்கும் நடிப்பின் ஆசானாகிய கலைஞர் யேசுரட்ணத்தையும், இவரது குடும்பத்தையும் இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் எனது ஆரம்பக் கல்விப்பராயம் தொட்டே அறிந்திருந்தேன்.

எனது தந்தை அகஸ்தியரின் நாடகத்துறை, எழுத்துத்துறையில் மிகுந்த ஈடுபாடுகொண்ட முகத்தார் அவர்கள் வீட்டில் எனது தந்தையோடு ஹாஸ்யத்தோடு கருத்துக்கள் பரிமாறுவதைக் கண்டு மகிழ்ந்திருக்கின்றேன்.

இலங்கை வானொலியில் நாடகங்களின் பாத்திரங்களுக்கேற்ற குரல்வடிவின் நடிப்புத்திறமையால் மக்களின் மனதை முழுதாக ஆக்கிரமித்துக்கொண்டவர் கலைஞர் யேசுரட்னம் அவர்கள். அவ்வேளைகளில் எனது தந்தை அகஸ்தியர் எழுதிய பல வானொலி நாடகங்களை தான் நடித்ததாகவும் குறிப்பாக "அலைகளின் முறல்", "எரிமலை வெடித்தபோது", "கோபுரங்கள் சரிகின்றன" போன்ற நாடகங்களை நடித்ததின் மூலம் நடிப்புத் துறையில் தனக்கு ஏற்பட்ட பிரபல்யத்தையும், பல அரசியல் தாக்கங்களுக்கு தான் முகம் கொடுத்ததையும் விதந்து கூறுவதுண்டு. எனது தந்தையின் நாடகங்கள் சமூக முரண்பாடுகளோடும், அரசியல் கருத்துக்களோடும், சமூக சிந்தனை ஊடுருவிப் பிரதிபலித்திருந்தமையைச் சுட்டிக்காட்டியிருந்தார். அலைகளின் குமுறல் என்ற நாடகத்தில் தான் நடித்த சிமியோன் என்ற பாத்திரம்தான் "வாடைக்காற்று" திரைப்படத்தில் பொன்னுக்கிழவனாக நடித்து ஜனாதிபதி விருது கிடைப்பதற்குக் காரணமாக இருந்தமையையும் பெருமிதத்துடன் கூறுவார். இவற்றை தொலைக்காட்சி, வானொலி, எழுத்து போன்ற ஊடகங்களின் மூலமாக வெளிப்படுத்தியும் வந்திருக்கிறார்.

2009ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தொலைபேசி மூலமாக முகத்தார் அவர்களை நேர்காணல் கண்டு ஒலிப்பதிவு செய்திருந்தேன். அந்த நேர்காணல் "லண்டன் தமிழ் வானொலி" மற்றும் "சன்றைஸ்" போன்ற வானொலிகளில் திரு. நடாமோகன் அவர்களால் ஒலிபரப்பப்பட்டு நேயர்களின் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்திருந்தது. அவ்வேளைகளில் மதிப்பிற்குரிய முகத்தார் அவர்களுடன் நிறையவே தொலைபேசி மூலம் பேசியிருக்கிறேன். ஆங்கில மொழியில் ஆரம்பிக்கும் அவரது பன்முகப் பேச்சு படிப்படியாக நாடகத்துறையில் முடிவடையும்போது அவரின் ஆங்கில மொழியின் செழுமையையும், 'Julius Ceaser', 'Merchant of venice' போன்ற சேக்ஸ்பியரின் நாடகங்களை நடித்த அவரின் அனுபவங்களையும் என்னால் அறிய முடிந்தது.

அவரின் மறைவின் பின் மீண்டும் அவருடனான எனது நேர்காணல் "சன்றைஸ் கிஸ்மத்" வானொலியில் திரு நடாமோகனால் மீள்ஒலிபரப்பப்பட்டு அஞ்சலிக்கப்பட்டமையை அவருக்கு வழங்கிய மிகப்பெரும் கௌரவமாக எண்ணுகின்றேன். அத்தோடு திரு.எஸ்.பி.யோகரடணம் தயாரித்து சன்றைஸ் வானொலியில் முதன் முதலில் வழங்கிய "தகவல்சாலை" நிகழ்ச்சியிலும் திரு. நடாமோகனுடன் இணைந்து கலைஞர் முகத்தார் யேசுரட்ணம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டமையையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.


பல்வேறு மட்டத்தின் மத்தியில் நாம் ஒரு சிறந்த கலைஞனை இழந்து நிற்கின்றோம். இவரது இழப்பினால் துயருறும் அனைவருடனும் நாமும் பங்கேற்று நிற்கின்றோம். குறிப்பாக எனது பாடசாலை நண்பிகளான கலா, ஜீவா மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் எம் உளம் அழும் அனுதாபங்கள்.

- நவஜோதி ஜோகரட்ணம் (லண்டன்)
(எஸ். அகஸ்தியர் குடும்பத்தினர்)

14.12.2010.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம்மில் ஒருவனுக்கு எமது காணிக்கை

மலை நிகர் மக்கள் தொண்டன்
கலைகளில் உயர்ந்த வேங்கை
அன்பினால் எம்மை எல்லாம்
இறுக்கியே பாசம் தந்தான்


தமிழ்மலை சாய்ந்த போதும்
கலைமகன் வீழ்ந்த போதும்
எம்முடன் வாழ்ந்த நாட்கள்
கல்லினில் எழுத்தாய் நிற்கும்

மண்பதை உணர்வு ஓங்க
அகதிகள் துயரம் நீக்க
விரைந்து நீ செய்த சேவை
புவி மீது நிலைத்தே நிற்கும்

நகைச்சுவை நாளும் ஊட்டி
சிரிப்பினை எமக்குத் தந்த
உயிர்நிகர் யேசுநாதா எம்மவர்
கண்ணீரே உமக்குக் காணிக்கை

பொருளாளர் சா. செ. சந்திரகாசன்
செயலாளர் சி. சூரியகுமாரி,
முனைவர் அருகோபாலன் மற்றும்
**ஈழஏதிலிகள் மறுவாழ்வுக் கழகத் தொண்டர்கள்**

# "நாடகத் திலகம் உறங்குகிறார்"



வல்லவர் தமிழ் வளத்தினர் அந்த
நல்லவர் இங்கே உறங்குகிறார்

நல்ல குடும்பத் தலைவனாய்
நாடறிந்த நல் நடிகனாய்
கலைஞர் பலரின் ஆசானாய்
காத்திரமான படைப்பாளியாய்
விருதுகள் குவித்த வித்தகராய்
முறுக்கிய மீசை முகத்தோடு
முகத்தார் மனதில் நிற்கின்றார்

முத்தமிழ் மேடையில் முத்தாரம் இட்ட
முகத்தார் எங்கள் மூத்த கலைஞர்
மேடை வானொலி சினிமாவில்
மேன்மை கண்ட மேதை இவர்

நாடகத் திலகம் உறங்குகின்றார்
நகைச்சுவை அரசன் உறங்குகின்றார்
நாடகங்கள் பல படைத்து
நடிகர்கள் பலரைத் தந்தார்

இலங்கைத் தீவின் அரசினிலே
இலிகிதர் பதவியில் இருந்தாலும்
சிங்களக் கொடுமையை ஏற்காமல்
சினந்து வெளியே வந்தமுகம்
கலைபுலத்தில் வளர
காத்திரமாய் உழைத்த பெரியார்

வாழும் வரையில் கலைத்தாயின்
வாரிசு ஆக தமிழை ஆண்டு
வாழ்ந்து மறைந்த முகத்தாரின்
வாழ்வை நினைந்து பிரமிப்போம்


காலனைப் பலமுறை
காலால் உதைத்தவர்
கைப்பிடித்த மனையாளை
காண எண்ணிப் போனாரோ

அன்னார் ஆத்மா சாந்திக்காய்
அனைவரும் ஆண்டவனைப் பிரார்த்திப்போம்

எழில் துஷியந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாங்கள் தெய்வத்தைத் தேடி ஆலயங்களுக்குச் செல்வோம். ஆனால் ஒரு தெய்வமே எங்களோடு வாழ்ந்த பெருமையை யாரிடம் சொல்லிப் பகிர்வது? ஆம் "குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று" என பெரியவர்கள் சொல்வார்கள். குழந்தை மனம் படைத்தவர் எங்கள் முகத்தார் அய்யா அவர்கள்.

தனது படிப்பிற்கும், புகழுக்கும் சம்மந்தமே இல்லாமல் எம் போன்ற சாதாரண கலைஞர்களுடனும் சமமாகப் பழகும் இன்னொரு மனிதரை நான் இதுவரை சந்தித்ததே இல்லை

எவ்வளவுதான் செல்வங்கள் எம்மிடம் கொட்டிக் கிடந்தாலும் கையில் சல்லிக்காசு இல்லாதபோதுதான் எமக்கு பணத்தின் அருமையே தெரிய வருகின்றது. அப்படித்தான் இப்பொழுது எங்கள் முகத்தார் அய்யா அவர்கள் எங்களோடு இல்லாத இந்த நேரத்தில்தான் அவரின் பெருமை தெரிகின்றது.

அய்யா உங்களைப்போல இன்னொரு சிறந்த மனிதரை தேடுகின்றோம். தேடிக்கொண்டே இருக்கின்றோம். அது எவ்வளவு காலத்திற்கு என்பதுதான் தெரியவில்லை. ஆனால் உங்கள் நினைவுகளை மீண்டும், மீண்டும் இரைமீட்டிக்கொண்டே இருக்கின்றோம்.

நீங்கள் சிரித்தால், உங்களுடலும் குலுங்கிச் சிரிக்கும்
உங்கள் கண்களும் உடன் சிரிக்கும்
உங்களுடன் சேர்ந்து நாங்களும் பெரிதாய்ச் சிரிப்போம்
எத்தனையோ சிரிப்புக்கதை எத்தனையோ நடந்தகதை
அத்தனையும் சொல்லிச் சொல்லி எம்மை சிரிக்கவைத்தவரே
நீங்கள் எத்திசையில் இருக்கின்றீர்கள்?

மணியோசை கேட்டவுடன் கோவிலுக்குச் சொல்வதுபோல்
அந்த அதிகாலையில்
இறையோசை கேட்டா நீங்கள் வானக்கோவில் சென்றீர்கள்?
நீங்கள்தான் இறையடி சென்றுவிட்டீர்கள்.
நீங்கள் விட்டுச்சென்ற சொத்துக்கள்
ஒலி வடிவாக, ஒளி வடிவாக - உமை
நேசிக்கும் இல்லங்களில் எல்லாம் ஒலித்துக்கொண்டே இருக்கும்
எங்கள் இல்லத்திலும்தான்
உங்கள் குரல் ஒலித்துக்கொண்டே இருக்கும்

உங்கள் அன்பிற்கும், பண்பிற்கும்
அடிமையானவர்களில் ஒருவன்
இளையநிலா" குருநாதன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ETR ஐரோப்பிய தமிழ் வானொலி

## முத்தான கலைஞர் முகத்தாருக்கு...

என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார் (யோவான் 11:25)



கலைத்தாயின் தவப்புதல்வனே
முக்காலமும் கடந்து நின்ற முதல்வனே - முகத்தாரே
மண் மாறினாலும் மனம்மாறா கலைஞனே
கலைஞர்களை வளர்த்தெடுத்த கலை - தந்தையே
நகைச்சுவைக்கு அங்கீகாரம் எடுத்த அறிஞரே
இன்முகம் மாறா இனியவனே - முகத்தாரே
நாடகத்துறையின் நல்ல நாயகனே
சந்ததி தளைக்க சாதனை புரிந்த நாயகனே
புலம்பெயர் நாடுகளின் தமிழ் வானொலிகளின் - தந்தையே
நக்கீரர் என்று அழைத்தாயே நா வறழுதையா
நீவிர் வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்தது பெருமை
நீவிர் எம்மை விட்டு பிரிந்ததோ கொடுமை ஐயா - கொடுமை
முடியவில்லை ஐயா, தாங்க முடியவில்லை
மீளாத்துயரில் மீண்டுவர முடியவில்லை ஐயா - முடியவில்லை
முடிந்தால் எழுந்து ஒரு நகைச்சுவை சொல்லுமையா
நாம் மீண்டுவர, நாம்மீண்டுவர, வாருமையா நாம் - மீண்டுவர
எழுந்து வாருமையா எழுந்து வாருமையா
வந்தால் புரியுமையா புரியும் உமக்கு - முகத்தாரே
உன் நண்பர்கள் உற்றார் உறவினர்படும் - வேதனை
இத்தனையும் அறிந்து எங்கு சென்றாய் ஐயா
எம்மை விட்டு எங்கு சென்றாய் ஐயா - எங்கு சென்றாய்
உண்மை அன்பை புரிந்த நீவிர்
எம்மை எல்லாம் தவிக்க விட்டு - எங்கு சென்றாய்
முடியவில்லை ஐயா, முடியவில்லை
தாங்க முடியவில்லை ஐயா, எம்மால் தாங்க முடியவில்லை - ஐயா
மீளாத்துயரில் நாம் மீண்டுவர நீவிர் - மீண்டும்
வர வேண்டும் ஐயா, நீவிர் மீண்டும் வர வேண்டும் - ஐயா
எம்மை எல்லாம் சிரிக்க வைக்க நீவிர் வரவேண்டும்
"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி


கனத்த இதயத்தோடும்
நீர் நிறைந்த கண்களோடும்
ஐரோப்பிய தமிழ் வானொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் நிறைந்த மனிதர்

**அமரர் முகத்தார் ஜேசு அய்யா அவர்கட்கு,**
**எங்கள் இதயம் கசியும்**
**கண்ணீர் அஞ்சலிகள்..**



நெஞ்சமெல்லாம் வஞ்சமில்லாத் தூய்மை கொண்ட
வரலாற்று நாயகரின் ஆத்ம சாந்திக்காக
வணங்குகின்றோம்

திங்கள் முகத்தில் திருஅருளைக் கொண்டவரே
செவ்வாய் இதழில் சிரிப்பேந்தும் திருக்குறளே
புல்லும் தலைவணங்க மெல்ல நடந்தவரே
எல்லோர்க்கும் பண்புகளின் ஈரம் தெளித்தவரே

எழுத்தால், நடிப்பால் ஈழமே போற்றி வந்த
பழுத்த கலை முத்தே... எங்கள் யேசு அய்யாவே
நேசம் மறவாத நிழலாக நாமிருப்போம்
ஈசன் திருவடியில் என்றென்றும் வாழ்ந்திடுவீர்

எஸ். ஸ்ரீபாஸ்கரன்
***Asi Boucheri***
எஸ். ஸ்ரீதரன்
***Sri Mahail & S.P. TREDERI***

# நீக்கிலாபிள்ளை இராசநாயகம்



சமாதான நீதிபதி (மல்லாகம்)
முகாமையாளர் - பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

இளவாலை மத்தியில் மக்களின் அன்பையும், மதிப்பையும் பெற்று வாழ்ந்து வந்த திரு. முகத்தார் யேசுரட்ணம் அவர்கள் பிரான்ஸில் தனது எண்பதாவது வயதில் மறைந்த செய்தி அறிந்து துயரமடைந்தோம்.

இறைவனிடத்தில் உண்மை அன்பும், பிறரிடத்தில் மனித நேயமும் கொண்டு வாழ்வோர் சமுதாயத்தில் மணம் வீசுகின்றார்கள்.

ஆசிரியராக, முதன்மை குமாஸ்த்தாவாக, எழுத்தாளராக, கவிஞனாக, சிறந்த பேச்சாளனாக, குடும்பத்தலைவராக, சமூகப்பணியாளராக, சிறந்த நடிகனாக, இப்படி இப்படியாக பலதுறை ஆளுமையுடன் திகழ்ந்த யேசுரட்ணம் அவர்கள் தனது பூரண வாழ்க்கையை இவ்வுலகில் நிறைவாக முடித்துவிட்டு போய்விட்டார்.


அவரது வாழ்வும், வளமும், பணியும், மரணமும் கொடுத்து வைத்தவை. விரும்பினாலும் எல்லோருக்கும் இப்படி அமைந்துவிடுவதில்லை. இது துயரிலும் மனதிற்கு சிறிது நிறைவினை இது தருகின்றது.

எமது இவ்வுலக வாழ்வு ஒருநாள் நிட்சயம் முடிவில்லாத பேரின்ப வாழ்வை நோக்கி நாம் பயணம் செய்கின்றோம். அமரர் யேசுரட்ணம் அவர்கள் இறைவனின் அருளையும், இரக்கத்தையும் பெற்று பேரின்ப வாழ்வில் இளைப்பாற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீ.பி. இராசநாயகம்
மல்லாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேர்களுக்கெல்லாம் நன்றி சொல்லி வாழ்ந்த மா,மனிதர்!

பிறர் துயர் தீர்ப்பதும், மற்றவரை மகிழ்விக்க வைப்பதுமே அர்த்தமுள்ள மனித வாழ்க்கை என அனைத்து மதங்களும் கூறுகின்றது. எங்கள் அப்பா முகத்தார் அவர்கள் அனைத்து மத மக்களும் மதிக்கக்கூடியவராக வாழ்ந்திருக்கின்றார். மதங்கள் கூறியிருப்பதுபோல பிறரின் துயரங்களில் பங்குகொள்வதிலும், மற்றவர்களை மகிழ்விப்பதிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர்.

வாழ்க்கையை முழுமையாகவும், இனிமையாகவும் வாழவேண்டுமானால் எல்லோரிடமும் அன்புடன் வாழவேண்டும். அன்பிற்கு வேற்றுமை இல்லை. அன்பிற்கு பகைமை இல்லை. அன்பிற்கு சுயநலம் இல்லை. அன்பு இருக்கும் இருதயமே ஆண்டவன் இருக்கும் ஆலயம் என்று சொல்கின்றார்கள் ஞானிகள். எங்கள் மத்தியில் ஆலயமாக வாழ்ந்த முகத்தார் ஐயா அவர்கள் இன்று தெய்வமாகியுள்ளார். அவருக்கு வணக்கம் செய்வோம்.

ஆலயங்களின் உயர்ந்த கோபுரங்களைப் பார்த்து வணங்குகின்ற நாங்கள் அந்த கோபுரத்தை தாங்கி நிற்கும் அடிக்கற்களை மிதித்துக்கொண்டே ஆலயத்துக்குள் செல்கின்றோம். மரங்களின் நிழல்களில் இளைப்பாறி, பழங்களை பறித்துண்ணும் எந்த மனிதரும் அந்த மரத்தின் வேர்களுக்கு நன்றி சொல்வதில்லை. ஆனால் எங்கள் முகத்தார் ஐயா அப்படிப்பட்டவர் அல்ல. பத்திரிகைகளில் எழுதும்போதும் சரி, ஊடகங்களுக்கு செவ்விகள் வழங்கும் போதும் சரி, தனது உயர்விற்கு படிக்கற்களாக இருந்த கல்வி கற்பித்த ஆசான்களில் இருந்து, கலைத்துறைக்கு தன்னை அழைத்துச் சென்றவர்கள்வரை ஒவ்வொருவரையும் நினைவு கூர்ந்துகொள்வார். இதுதான் பண்பாட்டின் உச்சக்கட்டம். இப்படியான உயர்ந்த கொள்கைகளை தனது வாழ்நாள் பூராகவும் கடைப்பிடித்து வந்த ஒரு மனித தெய்வத்தை இழந்துவிட்டோம். அந்த மனித தெய்வத்திற்கு வணக்கம் செய்வோம்.

ஐயா உங்களோடு பழகியதை, உங்களோடு நடித்ததை இப்படி எதை எதையெல்லாமோ நினைத்துப் பெருமைப்பட்டுக்கொள்கின்ற நாங்கள் உங்களிடம் கண்ட நற்பண்புகளையும், நல்ல பழக்க வழக்கங்களையும் கூட கற்று அதன்வழி நடக்க முயற்சிப்போம். இதுவே உங்களுக்கு நாங்கள் செய்கின்ற மரியாதை ஆகும்.

பிரியாலயம் துரைஸ் - வளர்மதி துரைஸ்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகத்தாருடன் ஒரு நேர்காணல்.

ஈழத்தவர்களுக்கும், புலம்பெயர் ஈழத் தமிழர்கட்கும் முகத்தார் பற்றிய அறிமுகம் அவசியமற்றது. அனைவர்க்கும் அவர் தெரிந்தவர். ஈழப்பத்திரிகைகளிலும், புலம்பெயர் நாடுகளில் வெளிவரும் தமிழ் பத்திரிகைகளிலும் அமரர் முகத்தார் யேசுரட்ணம் அவர்களின் நேர்காணல்கள் பல இடம்பெற்றிருக்கின்றது. 20-02-2000ல் வெளியான இவரின் முகத்தார் வீட்டுப் பொங்கல் என்னும் நூல் வெளியீட்டு விழாவில் வெளியான நிகழ்ச்சிநிரல் பிரசுரத்திற்காக பெறப்பட்ட நேர்காணல் இது.

நேர் கண்டவர் :- நந்தினி

○ வணக்கம் முகத்தார் அவர்களே.

● வணக்கம் நந்தினி அவர்களே.

○ தாங்கள் ஓர் முன்னணிக் கலைஞராக வளர்வதற்கு உந்து சக்தியாக அமைந்தவை எவை?

● பல காரணங்கள் உண்டு. முக்கியமானது குடும்பத்தாரின் ஒட்டுமொத்தமான அங்கீகாரம், ஒத்துழைப்பு ஆகியவன. ஆங்கிலத்தில் கூறுவார்கள் For Every Sueegss Of a Man There Is Woman Behind. அத்தோடு ஆர்வம், கடின உழைப்பு அதை Devotin & Dedication என்றும் சொல்லலாம்.

○ கலை ஆர்வம் தங்களுக்கு எப்படி துளிர் விட்டது என்பதனை..

● நான் பிறக்கும்போது கூடப்பிறந்ததோ என்னவோ அல்லது தாயின் தாலாட்டில் தளிர் விடத்தொடங்கியதோ தெரியவில்லை. ஆனால் மாணவப் பருவத்திலே கல்லூரி மேடைகள்தான் எனக்குத் தளம் அமைத்ததென்றுதான் கூறவேண்டும்.

○ தாங்கள் 33 வருடங்கள் அரச சேவையில், அதிலும் உயர் பதவி வகித்திருக்கின்றீர்கள். கலை ஈடுபாட்டால் அரசசேவை பாதிக்கப்படவில்லையா?

● நிச்சயமாக இல்லை. வார நாட்களில் அரசசேவை, சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் கலைச்சேவை. பிரச்சனை எதுவும் இருக்கவில்லை.

○ தங்களது வானொலிப் பிரவேசம் எப்படி? எப்போது? அவைபற்றி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● பாராளுமன்றத்திற்கு சீட்டு கிடைத்துவிடும். இலங்கை வானொலிக்குள் நுழைவது சற்று கடினமான காலமது. 1966 ஆடி 26ம் திகதி எனது முதல் வானொலி பிரவேசம். குரல் வளம், அதை ஒப்புவிக்கும் இயல்பு, அதாவது Voire Culture & Versatility In Modulation அமைந்துவிட்டால் மிகுதி சந்தர்ப்பங்களை நழுவ விடவே கூடாது. அழுங்கு ஆவறணையை கட்டிப்பிடித்த மாதிரி இருக்கவேண்டும். இல்லையேல் கோட்டை விட்டதுதான்.

○ தங்களது முகத்தார் வீடு வாரா வாரம் 268 வாரங்கள் வெள்ளிக் கிழமைகளில் ஒலிபரப்பானது இது எவ்விதம் சாத்தியமானது?

● அந்த நாட்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தொழில்நுட்ப வியலாளராக இருந்து பின்னர் கிராமிய நிகழ்ச்சிப் பொறுப்பாளராக திரு.டேவிற் ராஜேந்திரன் இருந்த காலம்தான் அது. அதை ஆரம்பித்து வைத்தவர் விவசாயத் திணைக்கள விரிவாக்கப் பொறுப்பாளர் திரு.சிறிபத்மநாதன், திரு.சிறிஸ்காந்தராஜா ஆகியோர். இந்த முக்கோண இணைப்புத்தான் இந்த சாத்தியம்.

○ இருந்தாலும் ஐந்தரை வருடங்கள் தொடர்வதென்றால் பெரும் சாதனைதான். இந்த நாடகத்தில் எத்தனை பாத்திரங்களை உலாவர விட்டீர்கள்?

● ஆறுமுகம், மனைவி தெய்வானை, மகன் வடிவேலன், பாத்திரங்கள்தான் ஆரம்பத்தில் அழகு படுத்தியவர்கள். படிப்படியாக சரவணை, மைனர் குடும்பத்தினர், சாத்திரி குடும்பத்தினர், சட்டம்பியார் குடும்பத்தினர், தரகர் குடும்பத்தினரென பத்தொன்பது பாத்திரங்கள் உலா வந்திருக்கின்றன.

○ முகத்தார் வீட்டின் வெற்றிக்கு மூலதனம் என்ன?

● கொஞ்சும் பேச்சுத்தமிழ், நூற்றுக்கணக்கான குடும்பங்களின் பிரச்சனைகள், இதன் இடையிடையே விவசாய விவரணங்கள், இப்படியாக பல விடயங்கள் இழையோடியதனால் மக்கள் மத்தியிலே வரவேற்பை ஏற்படுத்தியது.

○ வெள்ளிக்கிழமைகளில் முகத்தார்வீடு, சனி இரவு நாடகம், ஞாயிறு பகல் கதம்பம், குதுாகலம் போன்ற நிகழ்ச்சிகள். இவையெல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்புடைய நிகழ்ச்சிகள் என்பது பலருடைய அபிப்பிராயம். இதுபற்றி?

● அனைத்தையும் எழுதியது நான்தானே? அடிமேல் அடிவிழுந்தால் அம்மியும் அசையும் என்பார்கள். அதுபோன்றுதான் மூன்று வடிவங்களையும் எனது சிந்தனையால் தெளித்து நேயர்கள் மனதில் பதியவைத்துள்ளேன்.

○ உங்கள் படைப்புக்கள் அடிமட்டத்தை அடிப்படையாகக் கொண்டதன் மர்மமென்ன? தனிப்பட்ட முறையில் ஏதாவது தாக்கமா? அல்லது?

● சமூகம் தாக்கப்படும்போது தானே தாக்கப்படுவதாக ஒரு பிரமை. நானும் சமூகத்தில் ஒருவன்தானே? நான் எழுத்தாளியாகவும், படைப்பாளியாகவும் இருப்பதனால் சமூக மேம்பாட்டை வரைந்திருக்கின்றேன்.

○ தங்களின் வேறு தொடர் நாடகங்கள், மேடை நாடகங்கள் பற்றி?

● இலங்கை வானொலி சேவை ஒன்றில் "பருவக்காற்று" நாடகம் 52 வாரங்கள். இப்படி மூன்றுமாத ஆறு மாத தொடர்கள் பல. இவற்றைவிட பல மேடை நாடகங்கள். அதில் பிரபல்யம் ஆனது "சண்டியன் சின்னத்தம்பி"

○ இப்போது தங்கள் வயது 69 என அறிகின்றேன். இன்றைய காலகட்டத்தில் தங்களது ஈடுபாடுகள் பற்றி?

● கலைரீதியாக பங்கேற்புக்களும் உண்டு. பங்களிப்புக்களும் உண்டு. ஏனெனில் நான் எல்லோரையும் நேசிக்கின்றேன்.

○ தங்களது எதிர்கால சிந்தனைகள்?

● இலை,மறை, காயாக இருக்கும் கலைஞர்களை இனம் காட்டுவது.

○ நீங்கள் விரும்புவது?

● ஈழத்துக் கலை வடிவங்கள் அனைத்தும் மீண்டும் புத்துயிர் பெறவேண்டும்.

○ நீங்கள் விரும்பாதது?

● கலைஞர்கள் மத்தியில் பிரிவினை.

○ நீங்கள் எதிர்பார்ப்பது?

● புலம் பெயர்ந்த மண்ணில் எமது கலைஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புக்கள் ஏனைய நாட்டவர்களின் கவனத்தையும் ஈர்க்கவேண்டும்.

○ நன்றி முகத்தார் ஐயா அவர்களே.

● நன்றி நந்தினி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளவாலையில் தோன்றிய இமயம்

எமது இளவாலை மண் இன்று தனது விலைமதிப்பற்ற இயேசு என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட இரத்தினத்தை இழந்து துடிக்கின்றது. நடிப்பில் நாடகத்துறையில் இவர் ஈழத்தில் ஓர் இமயம்.

எமது தந்தையார் தமது நூலில் குறிப்பிட்ட சில வரிகள்

"எல்லார் வாயிலும் நல்ல ஓர் நடிகனென நயம்படப் பேசப்படுகிறவர் முகத்தார். அவருடைய தடித்த குரல், முகபாவம், மீசை, வசீகரமான சிரிப்பு, யாழ்ப்பாணத் தமிழ், அதற்கேற்ற உச்சரிப்பு எல்லாம் அவரை உச்சிப் படிகளில் ஏற்றிவிட்டன. வெள்ளித்தட்டில் நெல்லுச்சோறு போட்டு அள்ளித் தீத்தி வளர்த்த பிள்ளை"

இளவாலை மண்ணுக்கு முற்றத்தை அலங்கரித்த முக்கனிகள் மட்டும் மண்வாசனை கொடுக்கவில்லை. முப்பெரும் சிலைகள் போல் ஊர் வாசலை வாழ்த்தி வரவேற்று வழிகாட்டி வழங்கி நிற்கும் புனித அன்னம்மாள் ஆலயமும், புனித என்றியரசர் கல்லூரியும் கன்னியர் மடமும் மட்டும் மாலை போடவில்லை. முகத்தார் ஜேசுரட்ணம் போன்ற அரும் பெரும் கலைஞர்கள், அறிஞர்கள், கவிஞர்கள், பெரியோர்கள், என்றும் அவ்வூருக்கு பெருமை தேடிக் கொடுத்தார்கள். எமது ஊர் வாசனையை உலகமெங்கும் பரப்பினார்கள்.

முகத்தாரின் ஆக்கங்கள் அனைத்திலும் எமது மண்ணின் மகிமை கரைந்திருப்பதைக் கண்டிருக்கின்றோம். புலம்பெயர் மண்ணில் வாழ்ந்துகொண்டும் சொந்த மண்ணுக்கே என்றும் புகழாரம் சூட்டியவர். எங்கள் குடும்ப உறவினர். என்றும் எம்முடன் பாசத்துடன் பழகியவர். பகைமை என்பதனை கனவிலும் எண்ணாதவர். கொழும்பில் இருந்து ஊருக்கு வந்த ஒவ்வொரு தடவையும் எமது வீட்டுக்கு தரிசனம் தராமல் அவர் திரும்புவதில்லை. கடவுள் பக்தி மிகுந்த குடும்பத்தில் தோன்றியவர். சுருவில் அப்பு என ஆசையுடன் அழைக்கும் திரு சந்தியாப்பிள்ளை என்னும் அவருடைய பிரிய தந்தையார் கோயில் வழிபாடுகளில் என்றும் முன்நின்றவர். இவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

— அமுது குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வாங்கு வாழ்ந்தவர்..!

இளவாலை என்றதுமே கல்வியாளர்கள் நினைவுக்கு வருகிறார்கள் .. இளவாலை. அமுது, தாசிசியஸ், ஜேசுரத்தினம்(1931-2010) அவர்களோடு பலரும் சேர்வர்.
இனம் காணப்பட்ட கலைஞர்களுள் ஜேசுரத்தினம் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அந்தக் காலத்தில் நம்மிடையே பேசப்பட்ட "ரஷ்ய நாடகங்கள்" கலைஞர்களையும் இனம் காணவைத்தன.
புளுகர் பொன்னையா, புளுகர் பொன்னம்பலம், அடங்காப்பிடாரி, வெளிக்கிடடி விசுவமடுவுக்கு, இண்டைக்குச் சமைக்காதே, சந்தியில் நில்லாதே, அண்ணை றைட் என அந்தக் காலத்து நகைச் சுவை நாடகங்களை தந்திருந்த நமது கலைஞர்கள் சில சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும் சொல்லி வந்துள்ளதை மறுக்கமுடியாது.
அதே போல் தான் இலங்கை வானொலியில் சுமார் ஐந்து வருடங்கள் கமத்தொழில் திணைக்களத்தாரின் அனுசரணையுடன் ஒலிபரப்பப் பட்ட முகத்தார் வீட்டில் நாடகம் மூலம் கமத்தொழில் சார்ந்த விஷயங்களை சொல்லி பாமர மக்களும் தெரிந்து கொள்ள வைத்தார்.
அதுவே பின்னாளில் அவருடன் ஒட்டிக்கொண்டு நமக்கு முன் முகத்தார் என்று அறியப்பட்டார்.
உண்மையில் சாதனையாளர் தான்.
தன் குரல் வளத்துடன், கூடவே திடகாத்திரமான நடையுடன் பார்ப்பவரை ஒரு பண்ணையார் அல்லது பொலிஸ்காரன் என்றே எண்ணத்தோன்றும் . அதனால் தான் மிடுக்கான அவரை "பாசச்சுமை" நாடகத்தில் பலரையும் "அப்லாஷ்" வாங்க வைத்தது எனலாம்.

சில வருடங்களுக்கு முன் மணிமேகலை பிரசுரத்தாரின் நூல் அறிமுக விழாவின் போதும், அதற்கு முதல் நாள் "அமரர" டாக்டர் இந்திரகுமார் அவர்களின் இரவு விருந்துபசாரத்தின் போதும் அவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. பாரதியாரை நேரில் பார்த்தது போல் இருந்தது. அவரை அறிமுகப்படுத்திய விதமே அலாதியானது. நகைச் சுவையுடன் பழைய நாடக அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் நிகழ்வாகவே அமைந்திருந்தது.
தான் பார்த்த உத்தியோகம் , நாடக அறிமுகம் எல்லாம் சொல்லி தன்னுடன் நம்மையும் ஒன்றிப் போக வைத்தது மறக்க முடியாது.

வாடைக்காற்றின் மூலம் துணை நடிகருக்கான விருது பற்றி பெருமையாகச் சொன்ன போது "கொடுத்துவைத்தவர" என்று அனைவரும் சொல்லிக் கொண்டது ஞாபகத்தில் இருக்கிறது. அவர் நடிக்கத் தொடங்கிய காலப் பகுதி சிரமமானது தான். கிராமத்தில் எவ்வளவு படித்தவர்கள் இருந்தாலும் சமூகம் ஏற்றுக் கொள்ள பழகவில்லை. ஆனாலும் படிப்பில் அதி சிரத்தையுடன் இருந்து உத்தியோகம் பார்க்க வந்த பின்பு தான் சமுகத்தின் அங்கிகாரம் வந்திருக்க வேண்டும். அவருக்குப் பின்னாளில் வாய்த்த நண்பர்கள் அனேகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரணியூரான், கே.எஸ்.பாலச்சந்திரன், சிவதாசன்(கமலாலயம்), வேலணையூர். வீரசிங்கம் (பிரவுண்சன் கோப்பி), ராமதாஸ், பி.ஏச்.அப்துஹமீட், பி.விக்னேஸ்வரன், மதியழகன், விமல்.சொக்கநாதன், ராஜகோபால் என தொடங்கி வண்ணை தெய்வம், இரா.குணபாலன் வரை பலரிடம் நட்பு கொள்ள வைத்துள்ளதை பார்க்க முடிந்தது. அவர் காலத்தில் நாம் வாழ்ந்ததாக பெருமை கொள்ள வைக்கிறது.
அவரின் நாடக பிரதியாக்கத்திற்கு "முகத்தார் வீடு" நல்ல உதாரணம்.
கலைஞர்களை ஒருங்கிணைத்து நடிப்பும் சொல்லிக் கொடுத்து மேடையேற்றுவது என்றாலே எத்தனை சிரமமானது என்பதை அறிவேன். அத்தனை சிரமங்களையும் தாங்கி இன்றும் பேரோடு வாழமுடிகிறதென்றால் கலைத் தாயின் அருட் கொடை தான்.
பாக்யம் செய்தவர் தான். அனுபவம் தந்த பாடங்கள் அவரை கலைஞராக மிளிர வைத்தது .அவருக்காகவே தரப்பட்ட "கலை முரசு" "கலைப்பணிச்செல்வர்" "கலைவேள்" "கலைப் பூபதி" "ஈழவிழி", "கலைமாமணி" பட்டங்கள் தாங்களாகவே பெருமையை தட்டிக் கொண்டன எனலாம்.
பிரான்ஸ் அவருக்கு மேலும் வரப்பிரசாதமாக அமைந்தது. ஏனெனில் அதிகமான ஈழத்துக் கலைஞர்களும் வாழுமிடமாக ஆகியது. ஈழத்து நாடக - திரைக்கலைஞர் திரு.ஏ. இரகுநாதன், திரு.அரியநாயகம், "அப்புக்குட்டி" ராஜகோபால், எம்.ஏ. குலசீலநாதன், தயாநிதி, இரா.குணபாலன், வண்ணைதெய்வம், இன்னும் பலர்.

தணியாத தாகம் எப்படி எங்களை குடும்பமாக உட்காரவைத்து அழவைத்ததோ, ஒரு வீடு கோவிலாகிறது எப்படி நமக்கு குணசித்திரநடிகர்களை(பி.ஏச்.அப்துல்ஹமீட், ஆமீனா பேகம் பாறூக்)அறிமுகப் படுத்தியதோ முகத்தார்வீடும் எங்களை வானொலி முன்னால் உட்கார வைத்ததை இன்றும் நினைக்கத் தோன்றுகிறது. புலம் பெயர் உலகில் எத்தனைதான் வானொலிகள் வந்தாலும் அந்த நாளின் இலங்கை வானொலி கிடைத்தது வரப்பிரசாதம் தான்.

கலைஞர்களின் ஆத்மார்த்த அர்ப்பணிப்பு இருந்தது. அப்படித்தான் ஜேசுரத்தினம் வளர்க்கப்பட்டார். கடமை தவறாதவர். சக கலைஞர்களை நேசித்தவர். ஒழுக்கம் பேணியவர் என நண்பர்கள் சொல்வார்கள். எனக்குள்ள வருத்தம் இதுதான். இத்தனை அனுபவம் கொண்ட கலைஞன் பல நூல்களை தந்திருக்க வேண்டும். ஈழத்து நாடக வரலாற்றுப் பதிவாக இருந்திருக்கும். ஒரு நூலுடன் (முகத்தார் வீட்டுப் பொங்கல் நாடகம் - 1999) நின்றது. ஏமாற்றமே நமது கலைஞர்கள் அவரின் தேடல்களை தொகுத்து தருவரெனின் அடுத்த தலைமுறை எழுதப்போகும் ஈழத்து சரித்திரத்திற்கு அமைவாக இருக்கும்.
இலங்கை முதல் உலகின் எல்லாப் பாகங்களிலும் வாழும் ஈழத்துக் கலைஞர்களுக்குத் தெரியாதவராக முகத்தார் இருந்திருக்க வாய்ப்பில்லை.

ஏமாளிகள், கோமாளிகள் என திரைப்படங்களில் நடித்திருந்தாலும் வாடைக்காற்று படமே பலருக்கு வியப்பைத் தந்தும், பாராட்டையும் தந்த ஈழத்து திரைப்படமாகும்.
பத்திரிகைகளின் ஏகோபித்த பாராட்டையும் பெற்ற திரைப்படமாகும். அதிக புள்ளிகளை(64) பெற்ற கதாபாத்திரம் பொன்னுக்கிழவர் ஆகும். திரை அனுபவம் வித்தியாசமானது தான். அதை திறம்படச் செய்தவர். மேடையில் கூடப் பிரகாசித்தார்.

நாடகம் மீதான தணியாத இவரின் தாகம் அளப்பரியது. பலரையும் ஒருங்கிணைத்து இவரும் நடித்த "பாசச் சுமை" (பிலஹரியின் கதை) அப்போதே இலங்கையின் பலபாகங்களிலும் மேடையேறியதுடன், யாழ்ப்பாணத்துத் தமிழை ஹாஸ்யத்துக்கு மாத்திரமின்றி சிறந்த குணசித்திர நடிப்புக்கும் பயன்படுத்தியது பாராட்டத்தக்கது. அங்கும் மிளிர்ந்தார்.
தேசத்தின் மீதும் தேசியத்தின் மீதும் பற்றுக்கொண்டிருந்தார். அவரின் அந்தப் பற்றுத்தான் கார்த்திகை 27ஐ காலம் தேர்ந்தெடுத்தது.
ஆம்.
2010 கார்த்திகை 27உம் தன் அசைவை நிறுத்திக்கொண்டது.
இவரின் குடும்பத்தாருடன் நாமும் அஞ்சலிப்போம்.

- முல்லைஅமுதன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**எங்கள்**
**முகத்தார் அங்கிள்**
**அவர்களை**
**நாம் இழந்து விட்டோம்.**

டேய் அருள்மொழி என்று என்னை அன்புடன் அழைக்கும் எங்கள் முகத்தார் அங்கிள் அவர்களை நாம் இழந்து விட்டோம். ஆனால் அவருடன் பழகிய அந்த இனிமையான நாட்களை நினைவுகளில் இருந்து என்றுமே இழக்கமுடியாது. புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டிற்கு வந்தபின் ஊடகம் ஆரம்பித்த அந்த நாட்களில் TRT வானொலி மூலம் அவரின் நட்புக்கும், அன்புக்கும் அடிமையானேன். காலச்சக்கரம் ஓடிய வேகத்தில் ஊடகங்களில் மாற்றங்கள் ஏற்பட்ட சூழ்நிலையிலும் ABC வானொலிப் பணிப்பாளராக பணியாற்றிய அவருடன் மிக நெருக்கமாக பழகும் வாய்ப்பு கிட்டியது. வானொலியில் அவருடைய பல நகைச்சுவை நாடகங்களில் இணைந்து நடிக்கும் வாய்ப்புக்கிடைத்தமை எனக்குக்கிடைத்த பெரும் பொக்கிஷமாக நினைக்கின்றேன். அதேநேரத்தில் அவருடைய நாடகங்களில் தொழில்நுட்பத்தில் பணியாற்றியபோது முகத்தார் அவர்களும் என்னுமொரு மதிப்பிற்குரிய அப்புக்குட்டி அவர்களும் அடிக்கும் கும்மாளத்தில் எனது பணியைமறந்து பலதடைவைகள் ஒலிப்பதிவுகள் செய்தமையை நினைக்கும்போது இன்றும் சிரிப்பு வருகின்றது. இலங்கை வானொலியில் முகத்தார் அவர்களின் படைப்புக்களை கேட்டகாலத்தில் இவரை ஒருமுறையாவது காணமாட்டோமா? என்று ஏங்கிய நாட்கள் உண்டு. நான் செய்த பாக்கியம் என்றுதான் சொல்லவேண்டும் முகத்தார் அவர்களை ஈழத்தமிழ் விழியாக தெரிவுசெய்யப்பட்டபோது அந்தக்குழுவில் ஒருவனாகவும், அதைவிட அந்த விருதிற்காக அவரை மேடைக்கு அழைத்த அறிவிப்பாளனாக எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தமை என் வாழ்நாளில் பொன்னாளாகும். காலனை பலதடவைகள் வென்ற இந்தக் காவியநாயகனின் ஆத்மா சாந்திக்காக எல்லோருக்கும் பொதுவான அந்த இறைவனை வேண்டும் அருள்மொழி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீங்கள் மறையவில்லை எங்கள் மனதில் வாழ்கின்றீர்கள்

என்றும் மறக்க முடியாமல் என் நினைவுகளில் இருக்கும், நான் மாமா என்றழைக்கும் என் அருமை யேசுரட்ணம் ஐயாவே நீங்கள் மறையவில்லை. எங்கள் மனதில் வாழுகின்றீர்கள். உங்கள் கலையுலகம் உங்களைப் போற்றுகின்றதோ இல்லையோ நீங்கள் அகதி மக்கள் மத்தியில் செய்த பணிகள், உங்களோடு, நான் இணைந்தாற்றிய பணிகள் அனைத்தும் மக்கள் பேசும் அளவில் அமைந்திருக்கின்றன.

நான் அகதியாக்கப்பட்டு இந்தியாவிற்கு வந்து முதல் முதலில் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகத்திற்குள் கால் பதித்த போது நீங்கள் தான் என்னை முதலில் வரவேற்றீர்கள். அந்த கம்பீரமான தோற்றம் முதலில் தன்னை அறிமுகம் செய்த போது இயேசுரத்தினம் அங்கிள் என்று சொன்னீர்கள். எனக்கு மட்டும்மல்ல. இந்த கழகத்தில் பணியாற்றிய எல்லாராலும் அங்கிள் அங்கிள் என்று அன்போடு அழைக்கப்பட்டீர்கள். அதில் நானும் ஒருத்தி....

உங்களில் இருந்து கற்றுக்கொண்டவைகள் பல இருந்தாலும் சுட்டிக்காட்ட விரும்புவது யாரை பார்த்தாலும் அன்போடு கையணைத்து அவர்களை வரவேற்கும் தன்மையும் அன்பான உபசரிப்பும் தான். ஒரு வேலையை எங்களிடம் பணித்திடும் போது பவ்யமான வார்த்தைகள் மகள், மருமகள் என்று உங்களது பாணியில் அழைப்பீர்கள். அந்த அழைப்பின் சத்தம் ஓய்ந்து விட்டதே.

எங்கள் பாசமும் உங்கள் கலைத்திறமையும் ஒன்றாக அமைந்திருந்தது. கலைக்கழகம் உயிர் கொடுத்து வாழும் போது நீங்கள் பல தடவை தட்டிக் கொடுத்தவர். அங்கிள் நீங்கள் இன்னொரு தேசம் சென்றிருந்தாலும் அங்கிருந்து கொண்டு ஈழ சுதந்திரன் பத்திரிகை கைக்குக் கிடைக்க தவறி விட்டால் என்னிடத்தில் உரிமையோடு போன் போட்டு அனுப்பி வை என்று சொல்லும் அந்த குரல் எங்கே? நினைக்க பதைக்கிறது மனது. மார்கழி மாதம் பிறந்து விட்டால் அங்கிளின் இயேசு பிறப்பு கவிதை வந்துவிடும். அது இம்முறை இல்லையே. பத்திரிகையில் கண்கள் தேடுகிறது. சொல்லிக்கொண்டே போகலாம் அங்கிள் உங்களைப் பற்றி. எங்களுக்கு முன்மாதிரியாக இருந்து கற்றுக்கொடுத்தவைகளை நாங்கள் பயன்படுத்துகின்றோம் எங்கள் பணியில். அங்கிள் நீங்கள் மறையவில்லை மாறாக எங்கள் மனதில் வாழுகின்றீர்கள்.


உங்கள் ஆத்மா சாந்தி பெற இவளின் பிரார்த்தனை !



**- தேன்மொழி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏனைத மேடை நாடகம்: "பண்டாரவன்னியன்" நான் நடித்த பாத்திரம்; "கவர்னர் நோர்த்" (GOVERNOR NORTH)
1980. வீரசிங்கம் மண்டபம் யாழ்நகர்

முகவரிகளைத் தொலைத்துவிட்டுத் தேடும் நிலையில் உள்ள தமிழர்கள் மத்தியில் முகத்தார் எனும் நாமத்தால் இன்றும் தங்கள் நண்பர்கள் மத்தியில் நீங்காத இடம் பெற்ற ஐயாவே தங்களால் விரும்பப்பட்ட என்கணவர் கந்தாவின் நட்பால் என்னை கழகப் பணிக்கு சேர்த்து ஆங்கிலத்தட்டச்சாளராக வந்த என்னை வளர்ந்திட உந்துதல் தந்தீர்கள். தங்களின் அலுவலக அனுபவங்கள் இன்றும் பலரால் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தங்களின் கனிவான அணுகுமுறைகளை யாராலும் மறக்க முடியாது. கடுஞ் சொல் என்பதே உங்கள் வாயில் வராது. முறையாக வேலை வாங்குவதிலும் நீங்கள் சளைத்தவரில்லை. இன்று உங்கள் புலனுடம்பு அழிந்தாலும புகழுடம்பு அழியாது. தங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டும்

**- தர்மா கந்தவேள்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**Social Service in India**
**Refugee Camp**
**(Offer)**












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Papa wearing Saree




Papa with Jeevarani - 1967



Selvaraj registration - 1998



All are met after 14 years

Papa's Last Birthday - 26.12.2009



Papa's last function - 20.05.2010





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிறப்பு

25.12.1931





இறப்பு

27.11.2010



## "முகத்தார்" திரு சந்தியாப்பிள்ளை ஜேசுரட்ணம்

கருவிலை பிறப்பிடமாகவும், இளவாலையை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்சில் வசித்து வந்தவருமான எழுத்தாளர், வானொலி, மேடை, திரைப்பட, நடிகர், கலைஞர் «முகத்தார்» திரு சந்தியாப் பிள்ளை ஜேசுரட்ணம் அவர்கள் 27.11.2010 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை, மரியப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மிக்க புதல்வனும், வில்லவராசிங்கம், அன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற அயறின் அவர்களின் அன்புக் கணவரும், கலாராணி, பிரேம்ராஜ், (காலம் சென்ற மகாராஜ்) ஜீவராணி, செல்வராஜ், ஆகியோரின் அருமைத் தந்தையும், லோகநாயகம், மலர், பிரேமினா, மானல், மரியதாஸ், மஞ்சுளா, ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜோயல், மார்ஷல், ஜனியல் – மிஷேல், ஸ்ரெபன் – நியோமி, ஜெறா, ஜஸ்மின், ஜெய்வின், கெவின், ஷேர்லி, குளோரியா, பிலிக்ஸ், டானியல், அலன், ஜொனாலின், ஆஞ்சலின், லவ்லின் ஆகியோரின் பாசமிகு பேரனும், செபோராவின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக

***Centre Hôspitalier de Gonesse (Chambre Mortuaire)***
***25 Rue Pierre de Theilley - BP 30071***
***95503 Gonesse Cedex***

என்னும் இடத்தில் வைக்கப்பட்டுள்ளது.


இறுதிக்கிரிகைகள் பற்றிய விபரங்கள் பின்பு அறியத்தரப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தொடர்புகளிற்கு :

| | | |
|---|---|---|
| கலா / லோகநாயகம் | - | 0620315067 / 0622063416 |
| ஜீவா / மரியதாஸ் | - | 0624833615 / 0139870838 |
| டானியல் | - | 0624815057 |
| செல்வா | - | 0667204129 |

# அஞ்சலிகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ORT FRANCE



**ORT FRANCE**
**26 rue du Département**
**75018 PARIS**

**Tel : 01 40 38 30 74**
**Fax : 01 53 26 09 77**
**Mail : trofr@hotmail.com**
**Web : www.trofr.com**

A Paris, le 04 décembre 2010

# இரங்கல் செய்தி

துயர் பகிர்வு

1931ம் ஆண்டு ஈழத்தின் இளவாலையில் பிறந்த அமரர் ஈழத்தமிழ்விழி, முகத்தார் திரு. சந்தியாம்பிள்ளை ஜேசுரட்ணம் அவர்களின் மறைவு ஈழத்தமிழ் கலை உலகிற்கு பேரிழப்பாகும். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை தன் நடிப்பால், யாழ் வட்டாரப் பேச்சால் கவர்ந்து எல்லோர் மனங்களிலும் இடம் பிடித்த ஓர் சிறந்த கலைஞர்.

இலங்கையில் நில அளவை திணைக்களத்தில் பணியாற்றியதோடு, இலங்கை வானொலி, தொலைக்காட்சி மற்றும் மேடை நாடகங்களிலும் புகழ்பூத்த கலைஞராக வாழ்ந்த இவர், புலம்பெயர்ந்து பிரான்ஸ் மண்ணில் வாழ்தாலும் தன் கலைப் பணியைத் தொடர்ந்தார்......

மரணம் வாழ்வின் முடிவல்ல. ஒரு புதிய வாழ்வின் தொடக்கமே.

ஒரு நல்ல மனிதனாக கலைஞனாக இப்பூவுலகில் எம்மோடு பயணித்த நாட்கள் என்றும் நிலைத்து நிற்கும்.

அமரர் ஜேசுரட்ணம் அவர்கள் நல்ல குடும்பத் தலைவனாக, கலைஞனாக நிறைவான வாழ்வு வாழ்ந்து 27-11-2010 இப்பூவுலகை விட்டுப் பிரிந்த துயரினால் தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் நண்பர்கள் கலை உறவுகள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஒன்றிணைவோம் சேவை செய்வோம்
தமிழர் புனர்வழ்வுக் கழகம் - பிரான்ஸ்

ORGANISATION DE RÉHABILITATION
TAMOULE FRANCE
TRO-FRANCE
26, Rue du Département
75018 PARIS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாஃஇளவாலை புனிதஹென்றி அரசர் கல்லூரி
ப.மா.ச.பிரான்ஸ்
J/Liavalai St.Henry's College
O.S.A France

# கனத்த கண்ணீர் அஞ்சலி

## கலைமாமணி "முகத்தார்"

# எஸ்.ஜேசுரத்தினம்

(இளவாலை யாழ்ப்பாணம்)

அன்னையின் மடியில்
26 - 12 - 1931

இறைவன் மடியில்
27 - 11 - 2010



முகத்தார் என்றால்
முகம் தெரியாத குழந்தையும் கூறும்
முறுக்கு மீசை கம்பீரத்தோற்றம்
சுருவிலில் பிறந்து இளவாலையில் புகுந்து
அரசபணியினில் அயராது உழைத்து
குழந்தைகள் பெற்று சீரும் சிறப்புமாய்
வாழ்ந்த வேளையில்
இலங்கை வானொலியில் தயாரித்தளித்த
"முகத்தார் வீடு" என்னும் விவசாயத்தொடரினில்
மக்களைக்கவர்ந்த மகா நடிகனாய்
ஜனாதிபதியின் உயர் விருதினைப் பெற்றாய்
புலம் பெயர் வாழ்வில் ஈர்பத்து ஆண்டுகள்
நடிகனாய், எழுத்தாளனாய், இயக்குனராய்
தயாரிப்பாளனாய் பன்முகப்பரிமானம் பெற்று
வானொலி தொலைக்காட்சிகளில் தோன்றியும்
குறும்படம், நெடுந்தொடர், வீடியோப்படமென
உலக மக்களின் உள்ளத்தை கவர்ந்து
(கலைமாமணி போன்ற உயர் கௌரவங்களைப் பெற்றாய்)
உடல் நோய் வாட்டினும் உள்ளத்தில்
உவகை கொண்டு வாழ்ந்தாய்
வாழும்போதே பதவிகள் பட்டங்கள் பலதைப்பெற்றாய்
பாரிசில் எம் பழைய மாணவர் சங்கம் தழைக்க
பல வழி செய்தாய்
இன்று உயிரற்ற உடலாய் உள்ளங்கள் கனக்க
உறங்கிக்கிடக்கிறாய்
"மரணம் என்பது வாழ்வு மாற்றம்படுகின்றதே
அன்றி அழிக்கப்படுவதில்லை"
எங்கள் ஆழ்ந்த கவலைகளை காணிக்கை ஆக்குகின்றோம்

இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி பழைய மாணவர்
சங்கம் பிரான்ஸ் கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நிறம் மாறாத மனிதர்

# முகத்தார்

சீவியத்தில்
என்னை
நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை
மறந்துவிடாதீர்கள்


முகத்தார் ஐயாவின் புகழுடம்பு நல்லடக்கம் செய்யப்பட்ட 04.12.2010ல் வெளியிடப்பட்டது.
(பக்கங்கள் - 12)

காலம் அதிகாலைதான்,
ஆனால் வானம் விழித்துக்கொள்ளவில்லை!
இலேசாக அழுதுகொண்டிருந்தது!
அந்த கருக்கல் நேரத்தில் தான்
காலன் வந்து எங்கள் முகத்தார் யேசுரட்ணம் அவர்களின்
உயிரைக் கவர்ந்து சென்றிருக்கின்றான்.

அழைத்தவுடன் ஜயாவும் மறுப்பேதும்
சொல்லியிருக்கமாட்டார்!
ஆமாம் அடுத்தவர்கள் மனங்களை கலங்கவைக்க
கடுகளவும் தெரியாதவராயிற்றே எங்கள் யேசு ஜயா!
இந்த உலகத்தில் எதிரிகளே இல்லாத ஓரே ஒரு மனிதர்
எங்கள் முகத்தார் யேசுரட்ணம் ஜயா ஒருவர் மட்டும்தான்!

அன்பை, பாசத்தை, நட்பை வாரி வழங்குவதற்கு
முகத்தாரைப்போல இன்னொரு வள்ளலை யாரும்
பாரினில் பார்த்திருக்கவே முடியாது!
முகத்தாரின் மீசைக்கும் அவரின் குணத்திற்கும்
எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது.
பாசத்தை பிள்ளைகள், உறவுகள்,
நண்பர்கள் என்று
யாருக்கும் அளந்து பார்த்து
பகிர்ந்து கொடுப்பவர் அல்ல எங்கள் அத்தார்.
பொதுவாகச் சொல்வதானால்
இவர் ஒரு மீசை வைத்த குழந்தை.

இந்த கார்த்திகை மாத கடும் குளிரிலும், உடலும்,
உள்ளமும் நனைய, நனைய இளகிய மனமுள்ள
இதயங்களையெல்லாம் கசியவைக்கும்
எங்கள் முகத்தார் ஜயா அவர்களின்
நினைவுகளையும் வாழ்க்கைச் சுவடுகளையும்
கனத்த மனங்களோடு இம் மலரில்
பதியவைத்திருக்கின்றோம்.
இம் மலர் ஜயாவின் பாத கமலங்களுக்கு
காணிக்கையாகட்டும்!



வெளியீடு : அனைத்து துறைசார் உறவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகத்தாரின் நத்தார் வாழ்த்துகள்




'எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் - எங்கும்
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்.

*அமரர் கவியரசர் - கண்ணதாசன்.*



என்றென்றும் என் பாசத்திற்குரிய:-

..............................................................................................

குடும்பத்தினர்க்கு

## எம்மவர்க்கு எப்போ சுதந்திரக் கிறிஸ்மஸ்? இதுவே எனது கிறிஸ்மஸ் வாழ்த்து......!!

ஆள்டவரே! ஆண்டவரே!! நாம் வாழுகின்ற நாடெல்லாம்
ஆண்டுதோறும் உம் பிறப்பை ஆர்வமுடன் ஆராதிக்கும்
ஈழ மக்கள் சார்பாக வேண்டுகின்றேன் ஆண்டவரே!
ஆண்ட பரம்பரையில் வந்துத்த மக்களின்று `சுதந்திரமாய்
வாழ ஒரு நாடின்றி அகதிகளாய் வாழுகின்றார் – எம்மவர்கள்
கூடி ஒன்று சேரும்போதே எமக்கெல்லாம் சுதந்திர கிறிஸ்மஸ்.



அந்நாளில் சிலகாலம் நீங்களும் ஓர் அகதிதானே! `ஆனாலும்
ஆண்டுகள் ஓரிரண்டில் உம் அகதிவாழ்வை முடித்துவிட்டீர்
ஆவல் ஒன்று உண்டுதானே எம்மவர்க்கும் முடித்துவிட
ஆவன செய்வீரோ ஆராதிக்கின்றோம் ஆண்டவரே!

அகதியாய் வாழ்ந்தனால் எம் அவல வாழ்வை புரிந்திருப்பீர் –நாம்
அமைதியாய் வாழ்வதற்கு சமாதானத் தூது செல்வீர்
இயற்கையும் செயற்கையுமாய் எம்மவரைக் கலங்கவைத்த
அழிவுகள் போதும் அதற்காய் ஆவன செய்திடுவீர்
அதுவரை வருவதெல்லாம் கவலையான கிறிஸ்மஸ்தான்.

மாட்டுத் தொழுவத்தை பிறப்பிடமாய்க் கொண்டதனால்
நாட்டு மக்கள் நிலையறிந்து நல்லவழி காட்டி நின்றீர்
கூட்டுக் குடும்பமாய் கூடி வாழ்ந்த நாங்கள் இன்று
நாட்டுக்கொருவராய்ச் சிதறுண்டு வாழ்கின்றோம் –உமை
காட்டிக் கொடுத்தவர்க்கும் கருணை தந்த பெருமகனே `எம்
நாட்டு மக்கள் மீதும் கருணை வையும் ஆண்டவரே

அமைதியின் இறையரசே! அநீதிக்கெதிர் போர் முரசே!
அலைந்து வாழும் மக்களுக்கு அமைதி வாழ்வைத் தேடித்தாரும்
ஆவன செய்வீர் என்ற நம்பிக்கையில் வாழ்கின்ற
ஆண்டவரே உம் பேர் கொண்ட யேசுரட்ணம் வேண்டுகின்றேன்

*வேண்டுதல் வேண்டிநிற்கும் - என்றென்றும் 'உங்கள் நேசத்திற்குரிய*
*முகத்தார் எஸ். யேசுரட்ணம்*





# A Notre Grand-père tant regretté.

Nous tenons à ce que tu saches que nous sommes très fières d'être tes petits-enfants.



Tu as toujours été là pour nos moments les plus importants de notre vie, tu nous as encouragé et donné la force d'avancer en suivant ton chemin. Nous nous souviendrons à jamais de ce sourire sur ton visage lorsque tu nous accueillais, dans tes bras si chaleureux et pleine de sécurité. Nous n'oublierons jamais non plus ce regard remplis d'amour, de bonheur et de fierté lorsqu'il se posait sur nous.

Nous sommes si fiers de toi, car malgré notre famille nombreuses, ton cœur débordait d'amour à tel point que tu as ouvert ton cœur à tout ton entourage d'où toutes ces personnes réunis en ce jour pour toi. Nous ne pouvons qu'être fiers de ton parcours car tout ce monde

réunis témoigne de ton amour et de tes qualités nombreuses.

Ton talent d'acteur aura été instructif, agréable et amusant pour tout ton public.

Nous t'avons écrit cette lettre afin de te faire part de nos sentiments. Nous espérons que tu es très heureux avec grand-mère et tes proches que tu as rejoins.

Nous t'aimons du fond du cœur et ne cesserons de penser à toi.

Joël, Marcel, Michel et Janièle.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி பகிர்கின்றோம்

நன்றியுணர்வே நற்பண்புகளின் தாய்
நன்றிமிக்கவர் நெஞ்சே கடவுள் வாழும் ஆலயம்

பசுவின் மடிக்காம்பை அறுத்தவனுக்கும், தாய்மையின் கருவை சிதைத்தவனுக்கும் கூட மன்னிப்பு உண்டாம். ஆனால் நன்றி மறந்தவர்களுக்கு மன்னிப்பே இல்லை என்கின்றது புறநானூறு.
"காலத்தால் செய்த நன்றி சிறிதெனிலும், ஞாலத்தால் மாண்பெரிது" என்றார் ஞானப்பெருந்தகை அய்யன் வள்ளுவன்.

இதுபோலவே "ஒருவர் நமக்கு செய்த சிறிதளவு நன்றியைக்கூட வாழ்நாள் முழுவதும் மறவாமல் நெஞ்சில் நிறுத்திப் பாராட்டவேண்டும்" என்ற நாகரீக நீரை எங்கள் வேர்களுக்கெல்லாம் ஊற்றி, நன்றியின் பண்பாட்டைக் கற்றுத்தந்தவர் எங்கள் பப்பா.
அப்படியாக நேர்மையும், வாய்மையும், தூய்மையுமாக வாழ்ந்த எங்கள் பப்பா நடமாடிக்கொண்டிருந்த காலத்தில் அவரைத் தேடி வந்தவர்களும், அவரே தேடிச் சென்று நட்பு பாராட்டிக்கொண்டவர்களும், உதவிகளை பகிர்ந்து கொண்டவர்களும் அனேகமானவர்கள்.
அந்த நட்பிற்கு மரியாதை செலுத்தும் வகையில் எங்கள் பப்பா மருத்துவமனையில் இருந்த காலங்களில் ஓடிவந்து ஆறுதல் கூறியவர்களும், பப்பாவின் மரணச்செய்தி அறிந்தவுடனும் அதன் பின்னர் நடைபெற்ற பப்பாவின் இறுதி மரியாதை வைபவங்களிலும் பலவிதங்களிலும் நமக்கு உதவிகள் செய்தவர்கள் ஏராளம். அந்த உயர்ந்த உள்ளங்கள் அனைவர்க்கும் நன்றி செலுத்துவதே எங்கள் பப்பாவிற்கு நாங்கள் செலுத்துகின்ற பண்புமிகுந்த மரியாதையாகும். அந்த வகையில்..
எங்கள் பப்பா மரணித்துவிட்டார் என்பதை தெரிந்து நாம் செய்வதறியாது செயலிழந்து நின்ற வேளையில் இத் துயரச் செய்தியை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தி அஞ்சலி செலுத்திய ஊடகங்கள் நிறையவே உண்டு. அப்படி அஞ்சலி செலுத்தியவைகளான இலங்கையில் இருந்து வெளிவரும் வீரகேசரி, தினக்குரல், பத்திரிகைகளுக்கும் கனடாவில் இருந்து வெளிவரும் முழக்கம், உதயன், செந்தாமரை, சுதந்திரன், தாய்வீடு, ஆயுத எழுத்து ஆகிய பத்திரிகைகளுக்கும் பிரான்ஸில் இருந்து வெளிவரும் ஈழமுரசு, நிலா, போன்ற பத்திரிகைகளோடு லண்டன் I.B.C. வானொலி, யேர்மன் ஐரோப்பிய தமிழ் வானொலி, (ETR), பிரான்ஸ் T.R.T. வானொலி, கனடாவின் C.T.B.C வானொலி, C.T.R வானொலி, கீதவாணி வானொலிகளுடன் பப்பாவின் இறுதிமரியாதையை சிறப்பாக ஒளிபரப்பியும், மரண அறிவித்தலையும் தெரிவித்த G.TV தொலைக்காட்சிக்கும் மற்றும் தீபம் கனடா T.V.I தொலைக்காட்சிகளுக்கும், இணையத்தளங்கள் மூலமாக உலகம் முழுவதும் உள்ள தங்களது வாசகர்களுக்கு இந்த துயரச் செய்தியை தெரியப்படுத்திய யாழ்மண்.கொம், தமிழ்விசை.கொம், வகுல்.கொம், ஆகியவனவற்கும்.
தன்னை முழு மனிதனாக உருவாக்கிவிட்ட இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியை எங்கள் பப்பா என்றுமே மறந்ததில்லை. புலம் பெயர்ந்து பாரிஸ் வந்தபின்னரும் பாரிஸில் இயங்கிக்கொண்டிருந்த கென்றியரசரின் பழையமாணவர் சங்கத்திற்கு எட்டு வருடங்கள் தலைவராக இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்கும், சங்கத்தின் மூலமாக கல்லூரியின் வளர்ச்சிக்குமாக பாடுபட்ட எங்கள் பப்பாவின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றபோது தேவாலயத்தில் வழிபாட்டுக்கான ஒழுங்குகளான திருப்பலிப் பாடல்கள், அதற்கான பின்னணி வாத்திய இசைகள், பின்னர் நல்லடக்கம் செய்யும் மையம் வரை கொட்டும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனி மழையிலும் தங்கள் தோள்களிலேயே எங்கள் பப்பாவை சுமந்து வந்து இறுதிமரியாதை செய்தது மட்டுமல்ல அதன் பின்பு நடந்த அஞ்சலிக் கூட்டத்திற்கு வந்த அனைவர்க்கும் போசன வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தும், மற்றும் பல விதங்களில் உதவிகள் புரிந்த சென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர்க்கும்,
தேவாலயத்தில் திருப்பலிப் பூசையை ஒப்புக்கொடுத்த வணக்கத்திற்குரிய தந்தை திரு. ஞானம் (இத்தாலி) அவர்களுக்கும், மற்றும் வணக்கத்திற்குரிய தந்தை திரு கெனடி (இந்தியா) அவர்களுக்கும்,
பப்பாவின் வாழ்க்கையை கல்வெட்டாக பாடிய கலைஞர்கள் திரு.செபமாலை -ஆனந்தன், மற்றும் இந்திரன் ஆகியோர்க்கும், பப்பாவின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்ட அதே நாளில் யாழ்ப்பாணம் சுருவில், விளான், கரம்பன், இளவாலை போன்ற ஊர்களில் உள்ள பல தேவாலயங்கள் மணியோசை எழுப்பி பப்பாவிற்கு அஞ்சலி மரியாதை செலுத்தியிருந்தன. அந்த ஆலய நிர்வாகத்தினர்க்கும்,
பப்பாவின் துயரச் செய்தியை அறிந்தவுடன் தாங்களும் இத் துயரில் பங்கேற்று இந்தியா, இலங்கை உட்பட ஐரோப்பிய நாடுகளில் இருந்து தொலைபேசி, மின்னஞ்சல் மூலமாக துக்கம் விசாரித்து, அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மலர்வளையம் சாத்தியோருக்கும்,
பிரான்ஸ் சென்றியரசர் பழைய மாணவர் சங்கத்தினருடன் இணைந்து லண்டனில் இருந்து வருகை தந்து பப்பாவின் இறுதி மரியாதை நிகழ்வுகள் சிறப்புற ஒத்துழைப்புகள் வழங்கிய சென்றியரசர் கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்கத்தினர்க்கும்,
தங்கள் வேலைகளையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு வெளிநாடுகளிலிருந்தும், பாரிஸிலிருந்தும் வருகை தந்து இறுதி மரியாதை தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும்,
இறுதி மரியாதை தினத்தன்று அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்ட வண்ணை இதழ், மற்றும் மன்றங்கள், நண்பர்கள் ஆகியோர்க்கும், வானொலிகளிலும், பத்திரிகைகளிலும் செய்திகளும் அஞ்சலிகளும் வருவதற்கு பக்கபலமாக நின்றவர்களான திரு. எஸ். கே. ராஜன்,மற்றும் வண்ணை தெய்வம் ஆகியோர்க்கும்,
இம் மலர் அழகுற அமைவதற்காக கடுமையாக உழைத்த வண்ணை தெய்வம், ஓசை மனோ அவர்களுக்கும் சிறப்பாக அச்சிட்டுத்தந்த சங்கீதா அச்சகத்தினர்க்கும், அவ்வப்போது சகலவிதங்களிலும் எமக்கு அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கிவரும் "அப்புக்குட்டி" ராஜகோபால் அங்கிள் அவர்கட்கும்,
வேறு விதங்களிலெல்லாம் எங்களோடு தோள் கொடுத்து நின்ற உறவுகளுக்கும், நண்பர்களுக்கும், கலைத்துறை உறவுகளுக்கும் இந்த உயர்ந்த உள்ளங்களுக்கெல்லாம் நன்றிகள் என வெறுமனே வார்த்தைகளால் சொல்லாது எங்கள் இதயத்தில் இருந்து உணர்வு பூர்வமாகக் கூறுகின்றோம்.

நன்றிகள்! நன்றிகள்! நன்றிகள்!

"முகத்தார்" யேசுரட்ணம் அவர்களின் (குடும்பத்தினர்)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பிள்ளைகளே!**

ஏன் கவலைப்படுகின்றீர்கள்?
இவ் உலகில் வாழும் காலத்தில் நாட்டு சூழ்நிலையால் சிறிது காலம் பிரிந்திருந்தாலும், பின்பு பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவுகளுடன் சந்தோசமாகவும், முழுமையாகவும் இறைவனுக்கு ஏற்புடையதாகவும் வாழ்ந்தோம்.
எங்கள் முதுமைக்காலத்திலும் பப்பா, மம்மி என்று எங்களில் பாசமாக இருந்தீர்கள்! எங்களை பத்திரமாகவும் சந்தோசமாகவும், எங்களுக்கு தேவையான பணிவிடைகளையும் செய்தீர்கள்.
பூவுலகில் பூரணமான சந்தோசமான வாழ்க்கையை வாழ்ந்த பின்னர்தான் உங்களையெல்லாம் விட்டுப் பிரிந்தேன்.
மம்மியை விட்டுப்பிரிந்து ஐந்து வருடங்கள் உங்களுடன்தான் இருந்தேன். மம்மியும் பாவம்தானே! இப்பொழுது மம்மியும் நானும் இங்கும் சந்தோசமாகத்தான் இருக்கின்றோம். மகாராஜனும் எங்களுடன்தான் இருக்கின்றான்.
எங்களில் அன்பு செலுத்திய நல்லுள்ளங்களே, நாங்கள் உங்களையெல்லாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றோம். யாருமே கவலைப்படக்கூடாது. பிள்ளைகளே, பேரப்பிள்ளைகளே! யாரும் அழவேண்டாம், கவலைப்படவேண்டாம். நாங்கள் உங்களிடம் வருவோம்!
பூவுலகில் எங்களுக்கு எல்லாவிதங்களிலும் உதவியாக இருந்த கென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினருக்கும், எனது கலைத்துறை நண்பர்களுக்கும், மற்றும் எங்கள்மேல் பாசமாக இருந்தஅனைத்து நல்லுள்ளங்களுக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவியுங்கள்.

**செல்லங்களே! எங்கே ஒருமுறை சிரித்துவிடுங்கள்!**

உங்கள் நினைவுகளில் எப்பொழுதும் குடியிருக்கும்
பப்பா, மம்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கேள்வியும்நானே பதிலும்நானே !

பக்கம் (1)

கேள்வியும் நானே! – பதிலும் நானே !!

"சீசரைப் பெற்ற தாயும் சிறப்புப் பெற்றாள்
நேசனைப் பெற்ற தாயும் நலமே பெற்றாள்
காமராஜரைப் பெற்ற தாயும் நாட்டுக்காய் பெற்றாள்
என்னைப் பெற்ற தாய், என்னதான் எதைப் பெற்றாள் ?!"

சிந்தித்தேன்! கலக்கத்தான் பெற்றாள், கண் தெய்வம் அதனை, தெரிந்து கொண்டேன் !! – காரணம்....?
"நல்ல தந்தையும், நல்லதொரு தாயும், பெற்ற பிள்ளைதான்
உயர்வானவன் என்று, சொன்னது எங்கள் சான்றோர்களே!"

அன்புள்ளங்களே! அந்த நம்பிக்கையில், இன்றும் வாழ்ந்து வருகிறேன்!
என் இன்றைய நிலை இதன் பதிவுகள்,
அறிந்து கொள்வீர்கள், தெரிந்து கொள்வீர்கள்!
இத்தத்துவங்கள், ஏற்புடையதாயிருந்தால், அன்புடன் தொடருங்கள் !!

என்றென்றும், உங்கள் அன்பின் சங்கமமாகும்
உங்கள் "பெத்தான்" !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையசைக்கின்றோம் மகிழ்வாய்!



வாழ்க்கை வாழ்வதற்கே!
வாழ்ந்தோம் மகிழ்ந்தோம்
உறவு கலந்தோம்.
இன்று பிரிந்தோம் மகிழ்வாய்!
நாம் வாழ்ந்த காலத்தில்
எம்மோடு உறவாடிய
எம் உயிர் உறவுகளே!
உங்கள் பாசப்பிணைப்பில்
கட்டுண்டு திளைத்தோம் !
என்ன குறை வைத்தீர் எமக்கு
எல்லாமே நிறைவாய் !
காலம் கனிந்து
உங்களைப்பிரிந்தோம் !
இது இயற்கையின் நியதி
கவலையின்றி விடைதருவீர்
கையசைக்கின்றோம் மகிழ்வாய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org